இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 14 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 06 – புதன்கிழமை 23 ஆகஸ்ட் 2023 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 14 : Thiruvalluvar Year - 2054 - Aavani 06 - Wednesday 23 August 2023 - Kovai ★★ 12 Pages ₹ 5.00



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.08.2023) தலைமைச் செயலகத்தில், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) நிதியுதவியுடன் செங்கல்பட்டு மாவட்டம், கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள பேரூரில், 4 ஆயிரத்து 276 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் இரா.கிர்லோஷ் குமார், சென்னையிலுள்ள ஜப்பான் தூதரகத்தின் துணை தூதர் தாகா மசாயுகி (Mr.TAGA Masayuki), இந்தியாவிற்கான ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் தலைமை அலுவலர் சைட்டோ மிட்சுனோரி (Mr.SAITO Mitsunori), வி.எ.டெக் வபாக் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ராஜீவ் மிட்டல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கோவையில் கலைஞர் செம்மொழிப் பூங்கா - சென்னையில் கலைஞர் பன்னாட்டு அரங்கிற்கு விரைவில் அடிக்கல் நாட்ட நடவடிக்கை!

# மாவட்டத்திற்கு ஒரு கலைஞர் நினைவுச் சின்னம்!

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா தொடர்பாக நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஆக. 23 -**

**முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா தொடர்பாக நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் உரையாற்றிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “கோவையில் கலைஞர் செம்மொழிப் பூங்கா - சென்னையில் கலைஞர் பன்னாட்டு அரங்கிற்கு விரைவில் அடிக்கல் நாட்ட நடவடிக்கை - மாவட்டத்திற்கு ஒரு கலைஞர் நினைவுச் சின்னம் அமைக்கப்படும்” என்று அறிவித்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (21.8.2023) தலைமைச் செயலகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை தமிழ்நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடுவது குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தவரும், 13 முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு 13 முறையும் வெற்றி பெற்றவரும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழ்நாட்டின் அரசியல் தலைவராக மட்டுமல்லாமல் இந்திய அரசியலின் திசையை தீர்மானிப்பவராகவும் திகழ்ந்த நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞரின் பன்முக ஆற்றலையும், அவர் படைத்தளித்த மக்கள் நலத் திட்டங்களையும், சமுதாயத்தில் அதன் தாக்கத்தையும் வருங்காலங்களில் தமிழ்நாட்டு மக்கள் என்றென்றும் நினைவில் கொள்ளும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மாநிலம் முழுவதும் தமிழ்நாடு அரசால் கொண்டாடப்பட்டு வருகிறது.

**நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி!**

நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பியான தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களை பெருமைப்படுத்தும் விழாக்களாக மட்டுமல்லாமல், அவர் தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக அறிவித்து நிறைவேற்றிய திட்டங்களை இளைய சமுதாயத்தினர் அறிந்து கொள்ளும் வகையிலும், இந்த விழாக்கள் அமைய வேண்டும் என்றும், பெரிய அளவிலான ஆடம்பர நிகழ்ச்சிகளாக அல்லாமல் அனைத்து தரப்பினரும் பங்கெடுக்கும் நிகழ்ச்சிகளாக இவற்றை நடத்த வேண்டும் என்றும் முதல்வர் அவர்கள் அறிவுறுத்தினார். முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை அரசு நடத்துவதாக மட்டுமல்லாமல் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், மாணவர்கள், பெண்கள், அரசு ஊழியர்கள், பயனடைந்த மக்கள் ஆகியோர் இணைந்து கொண்டாடுவதாகவும் அமைய வேண்டும் என்றும் ஆணையிட்டுள்ளார்.

> **“கலைஞர் நூற்றாண்டை நினைவுகூரும் வகையில் மாவட்டத்திற்கு ஒரு நினைவுச் சின்னம் அமைக்க வேண்டும் என்றும், கோவையில் கலைஞர் செம்மொழி பூங்காவிற்கும், சென்னையில் கலைஞர் பன்னாட்டு அரங்கத்திற்கும் (Convention Centre) விரைவில் அடிக்கல் நாட்டிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளை குறிப்பிட்ட காலத்தில் நடத்த வேண்டும்!”**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடுவது தொடர்பாக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 22.05.2023 அன்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தைத் தொடர்ந்து, அமைச்சர்கள் தலைமையில்

12 சிறப்புக் குழுக்கள் அமைத்து ஆணையிடப்பட்டன. அதனைத் தொடர்ந்து நூற்றாண்டு விழா மிகவும் சிறப்புடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

**“கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு மாரத்தான் 2023”**

அதன் முதல் நிகழ்ச்சியாக, கலைஞர் நூற்றாண்டு விழாவிற்கான “கலைஞர் 100” இலச்சினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2.6.2023 அன்று வெளியிடப்பட்டது. தொடர்ந்து, 15.6.2023 அன்று கிண்டியில் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையும் 15.7.2023 அன்று மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகமும் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன. மேலும், 6.8.2023 அன்று சென்னையில் “கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு மாரத்தான்2023” நடத்தப்பட்டது. இப்போட்டியில் 73,206 நபர்கள் கலந்துகொண்டு கின்னஸ் உலக சாதனை படைக்கப்பட்டது. 7.8.2023 அன்று “www.kalaignar100.com” இணையதளம்

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

### தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகவும் பெரியது; 22.67 லட்சம் மக்கள் பயனடைவர்; 2026க்குள் பயன்பாட்டிற்கு வரும்;

# பேரூரில் ரூ.4276.44 கோடி மதிப்பில் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, ஆக. 23 -**

**பேரூரில் ரூ.4,276.44 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைக்கும் பணிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.08.2023) தலைமைச் செயலகத்தில், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) நிதியுதவியுடன் செங்கல்பட்டு மாவட்டம், கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள பேரூரில், 4 ஆயிரத்து 276 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

**மீஞ்சூரில் முத்தமிழறிஞர் கலைஞரால் திறந்து வைக்கப்பட்டது!**

வளர்ந்து வரும் சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்களை வடிவமைத்து, நிறுவி, இயக்கி மற்றும் திருப்பித் தரும் அடிப்படையில் மீஞ்சூரில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டு அன்றைய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரான தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 25.02.2007 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்நிலையத்தின் கட்டுமானப் பணிகள் அனைத்தும் நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் முடிக்கப்பெற்று, அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 31.07.2010 அன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்நிலையத்திலிருந்து கிடைக்கக்கூடிய குடிநீர் மூலம், வடசென்னை பகுதிகளான மணலி, மாதவரம், எண்ணூர், கத்திவாக்கம், திருவொற்றியூர், தண்டையார்பேட்டை, வியாசர்பாடி பகுதிகளில் வசிக்கும் சுமார் 10 லட்சம் மக்கள் பயன்பெற்று வருகின்றார்கள்.

**நெம்மேலியில் அமைக்கப்பட்டுள்ள கடல்நீரை குடிநீராக்கும் நிலையம்!**

இதனைத் தொடர்ந்து, நெம்மேலியில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைப்பதற்கான திட்டப் பணிகளை அன்றைய துணை முதலமைச்சரான முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 23.02.2010 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

தற்போது சீரான முறையில் இயங்கிவரும் இந்நிலையத்தின் மூலம், தென் சென்னை பகுதிகளாகிய சோழிங்கநல்லூர், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், காரப்பாக்கம், செம்மஞ்சேரி, துரைப்பாக்கம், பெருங்குடி, கொட்டிவாக்கம், பாலவாக்கம், திருவான்மியூர், வேளச்சேரி, தரமணி, பள்ளிப்பட்டு, அடையாறு, பெசன்ட் நகர், நந்தனம், எம்.ஆர்.சி. நகர், இராஜா அண்ணாமலைபுரம், மயிலாப்பூர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் சுமார் 9 லட்சம் மக்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

மேலும், நெம்மேலியில் கூடுதலாக நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விரைவில் இப்பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும்.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

### ‘சந்திராயன் 3’ விண்கலம்


# இன்று நிலவில் தரையிறங்கும்!

## இஸ்ரோ அறிவிப்பு!

ஸ்ரீஹரிகோட்டா, ஆக.23-

சந்திராயன் 3 விண்கலத்தில் இருந்து பிரிக்கப்பட்ட விக்ரம் லேண்டர், ஆகஸ்ட் 23ல் மாலை 6.04 மணிக்கு நிலவில் தரையிறங்கும் என இஸ்ரோ அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமான இஸ்ரோ, நிலவின் தென் துருவத்தை ஆய்வு செய்வதற்காக சந்திரயான்3 விண்கலத்தை வடிவமைத்தது. ‘எல்.வி.எம்.3 எம்4’ ராக்கெட் மூலம் சந்திரயான் 3 விண்கலம் கடந்த மாதம் 14ம் தேதி மதியம் 2.35 மணி 17 வினாடிக்கு ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தின் 2வது ஏவுதளத்தில் இருந்து ஏவப்பட்டது.

அதன்பின்னர் சந்திரயான் 3 விண்கலம் நிலவின் நீள்வட்டப் பாதையில் சுற்ற தொடங்கியது. சந்திரயான் 3 விண்கலத்தின் உந்து விசை கலன் மற்றும் லேண்டர் கடந்த 17ம் தேதி தனியாக பிரிக்கப்ப ட்டது. விண்கலத்தில் இருந்து உந்து விசை கலன் மற்றும் லேண்டர் பிரிக்கப்பட்டு



நிலவின் மேற்பரப்பில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. இதனிடையே சந்திரயான்3 விண்கலத்தின் இறுதி வேகக்குறைப்பு செயல்பாடு வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாக இஸ்ரோ அறிவித்துள்ளது.

இந்த நிலையில், சந்திரயான் 3 விண்கலம் நிலவில் தரையிறங்கும் நேரம் 19 நிமிடங்கள் தாமதமாகியுள்ளதாக இஸ்ரோ அறிவித்துள்ளது. அதன்படி சந்திரயான் 3 விண்கலம் நிலவில் வருகிற 23ம் தேதி சரியாக மாலை 6.04 மணிக்கு நிலவில் தரையிறங்குகிறது. முன்னதாக 17.45 மணி நேரத்தில் நிலவில் தரையிறங்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தற்போது 19 நிமிடம் தாமதமாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 23-08-2023

# அள்ளிவிட்ட பிரதமர்

2014
2015
2016
2017
2018
2019
2020
2021

2022 என ஒன்பது ஆண்டுகளாக ஆகஸ்ட் 15 அன்று கொடியேற்றிப் பேசி இருக்கிறார் பிரதமர் நரேந்திர மோடி. 2023 ஆகஸ்ட் 15 அன்று அவர் கொடியேற்றிப் பேசுவது பத்தாவது முறையாகும்.

கடந்த ஒன்பது ஆண்டு கால ஆட்சியில் என்ன சாதனைகளை எல்லாம் செய்துள்ளோம் என்று அவர் வரிசைப்படுத்தி இருந்தால் பாராட்டலாம். ஆட்சி முடியப் போகிற காலத்தில் செய்யப் போவதாக பல ஆயிரம் கோடி திட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கிறார் பிரதமர்.

ஆட்சிக்கு வந்ததும் திட்டங்களை அறிவிக்க வேண்டும். ஆட்சி முடிவில் திறப்பு விழாக்கள் செய்ய வேண்டும்.

**மோடி இதில் வித்தியாசமானவர். ஆட்சிக்கு வந்ததில் இருந்து வெளிநாட்டுப் பயணங்களில் இருந்தார். ஆட்சி முடியப் போகும்போது திட்டங்களை அறிவிக்கிறார். 2015 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை. அதற்கான டெண்டர் விடும் அறிவிப்பு 17.8.2023 அன்று தான் வந்துள்ளது. மோடி ஆட்சி எத்தகைய வேகமும் அக்கறையும் கொண்டது என்பதற்கு எடுத்துக்காட்டு இது.**

இந்த ஒன்பது ஆண்டு காலத்தில் நான் அதைச் செய்தேன், இதைச் செய்தேன் என்று எதையும் சொல்ல அவரால் முடியவில்லை. வழக்கம் போல வார்த்தைகளால் 'வடை' சுட்டுள்ளார்.

* ஆயிரம் ஆண்டு அடிமைத் தனத்தை முடிக்க வேண்டிய தருணத்தில் இருக்கிறோம்.
* நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் நமது தலைவிதியை நிர்ணயிக்கப் போகிறது.
* எல்லா வாய்ப்புகளும் இந்தியாவில் உள்ளது.
* உலகின் புதிய சக்தியாக நாம் பார்க்கப்படுகிறோம்.
* 140 கோடி மக்களையும் நான் கவுரவிக்க விரும்புகிறேன்.
* நமது பன்முகத்தன்மையை உலகம் வியக்கிறது.
* இந்தியாவைப் பாராட்டாத நாடுகளே இல்லை.
* பந்து நம் பக்கம் உள்ளது, வாய்ப்பை தவற விடக் கூடாது.
* அடுத்த 1000 ஆண்டுக்கான அடித்தளத்தை அமைக்க உள்ளோம்.
* ஐந்தாவது இடத்துக்கு பொருளாதாரம் வந்துவிட்டது.
* 13.5 கோடி மக்கள் வறுமையில் இருந்து விடுபட்டு விட்டார்கள்.
* ஒவ்வொரு வீட்டுக்கும் பாதுகாப்பான குடிநீர் உறுதி செய்யப்பட்டு விட்டது.
* வந்தே பாரத் ரயில் இன்று நாடு முழுவதும் ஓடுகிறது.

இதை வாசிக்கும் போதே தலை சுற்றுகிறது என்றால், கடந்த 16 ஆம் தேதி 'தினமலரை' முழுமையாக வாசியுங்கள். மூன்று பக்கம் முழுமையாக வாசித்தால் எவ்வளவு பெரிய வடை என்பதையும், அதில் எத்தனை ஓட்டைகள் இருக்கிறது என்பதையும் எண்ணிப் பார்க்கலாம்.

ஆட்சி முடிகிற காலத்தில் விஸ்வகர்மா யோஜனாவுக்கு ரூ.15 ஆயிரம் கோடியில் திட்டமாம். நகரங்களில் வாடகை வீட்டில் இருப்பவர்களுக்கு இனிமேல் தான் திட்டம் தீட்டப் போகிறாராம். இலவச வீடு என நினைக்க வேண்டாம். வட்டிக்கு கடன் தர யோசித்து வருகிறாராம். 2022 ஆம் ஆண்டு வீடில்லாதவர் யாரும் இருக்க மாட்டார்கள் என்று சொன்னது இவர் தான்.

நாடாளுமன்றத்தில் பேசி இருக்க வேண்டிய மணிப்பூரைப் பற்றி, நாட்டின் கொடியை ஏற்றி வைத்துப் பேசுகிறார். பா.ஜ.க. பொதுக்கூட்டத்தில் பேச வேண்டியதை செங்கோட்டையிலா பேசுவது? ஒன்பது ஆண்டுகளாக இந்திய நாட்டை ஆள்வது அவர் தான். ஊழலை ஒழிக்கப் போகிறாராம். அப்படியானால் அவரது ஆட்சியில் ஊழல் அதிகமாகி விட்டதா? ஒன்பது ஆண்டுகளாக அதனை ஒழிக்க முடியவில்லையாம்.

**குடும்ப அரசியலை ஒழிக்கப் போகிறாராம். பா.ஜ.க.வில் வாரிசுகள் எவரும் பதவிகளில் இல்லையா? நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினராக இல்லையா? ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், ஒரே கட்சியில் இருக்கக் கூடாதா? பா.ஜ.க.வில் இருப்பவர்கள் வேறு கட்சியில் தான் பொறுப்பில் இருக்க வேண்டுமா? இப்படி அபத்தமாக ஒரே உரையை ஒன்பது ஆண்டுகளாக பேசி வருபவரை என்ன சொல்வது?**

சமரச அரசியல் அவரை தூங்கவிடாமல் செய்கிறதாம். அனைத்து பொதுத்துறை நிறுவனங் களையும் தூக்கி அதானிக்குக் கொடுக்கும் போது எதிர்க்கக் கூடாது. இந்தியைத் திணிக்கும் போது இந்தி பேசாத மாநில மக்கள் எதிர்க்கக் கூடாது. குடியுரிமை சட்டம், பொது சிவில் சட்டம் மூலமாக சிறுபான்மை மக்களைப் பிரிக்கும் போது யாரும் எதிர்க்கக் கூடாது. மூன்று வேளாண் சட்டத்தை கொண்டு விவசாயிகளை முடக்கும் போது அதனை எதிர்த்து போராடக் கூடாது.

**அவர் மணிப்பூர் போக மாட்டார். கேள்வி கேட்கக் கூடாது. அவர் நாடாளுமன்றத்துக்கு வர மாட்டார். அதை யாரும் கேட்கக் கூடாது. அவர் கார்ப்பரேட் நிறுவனங்களின் பல லட்சம் கோடி கடனை கண்ணை மூடி ரத்து செய்வார். யாரும் கேட்கக் கூடாது. மக்களுக்கு விரோதமான செயல்பாடுகளைக் கேள்வி கேட்டால் சமரச அரசியலாம். ஒற்றை மனிதரின் போக்கில் விட்டால் அது நியாய தர்மமாம்.**

1000 ஆண்டுக்கான மாற்றத்தை ஏற்படுத்தப் போகிறாராம்!

10 என்று போடுவதற்கு பதிலாக 1000 என்று போட்டுவிட்டார்கள் போலும்! 1000 என்று போட முடிவெடுத்த பிறகு 10,000 என்றே போட்டிருக்கலாமே!

**ஒன்பது ஆண்டுகளாக சுதந்திர தினத்தன்று அவர் அணியும் டர்பன் மாறி இருக்கிறதே தவிர, இந்தியாவில் வளர்ச்சிக்கான மாற்றம் ஏதுமில்லை. அடுத்த ஆண்டு மாற்றத்துக்கான ஆண்டு. மாற்றியாக வேண்டிய ஆண்டு!**

●●



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (21.8.2023) தலைமைச் செயலகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை தமிழ்நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடுவது குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு. இரா. செல்வராஜ், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்புப் பணி அலுவலர் என்.சுப்பையன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அனைத்துக் கல்லூரி மாணவ - மாணவியர் பேச்சுப் போட்டி - பரிசளிப்பு விழா! இன்று

# மாநில சிறுபான்மையினர் ஆணையம் சார்பில் - முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – விழாத் தலைமையேற்று பரிசுகள் வழங்குகிறார்!

## உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர்கள் பங்கேற்பு! பீட்டர் அல்போன்ஸ் வரவேற்புரை!

சென்னை, ஆக. 23-

தமிழ்நாடு அரசு மாநில சிறுபான்மையினர் ஆணையம் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் அனைத்துக் கல்லூரி மாணவ - மாணவியருக்கான பேச்சுப் போட்டி 2023-ன் பரிசளிப்பு விழா இன்று (23.8.2023 - புதன் கிழமை) காலை 10.30 மணி அளவில் சென்னை - கோயம்பேடு தூய தாமஸ் கல்லூரி அரங்கில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் - தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் சா.பீட்டர் அல்போன்ஸ் வரவேற்புரையாற்றுகிறார்.

உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், திருமதி தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி., ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ., தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் கே.எஸ்.செஞ்சி மஸ்தான் வாழ்த்துரை வழங்குகிறார்.

இவ்விழாவிற்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை ஏற்று, வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கி விழாப் பேருரையாற்றுகிறார். மாநில ஒருங்கிணைப்பாளர்கள் பேராசிரியர் - முனைவர் ஜே.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், முன்னாள் எம்.பி., வெ.அழகிரிசாமி, பேராசிரியர் முனைவர் ஜெ.ஹாஜா கனி, எஸ்.டி.நெடுஞ்செழியன் ஆகியோர் கௌரவிக்கப்படுகின்றனர்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அரசு செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர் நன்றி கூறுகிறார்.

“தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 'தலைநிமிரும் தமிழகம்' என்ற தமிழகத்தின் விடியலுக்கான முழக்கத்தை தமிழகக் கல்லூரி மாணவர்களிடம் கொண்டு சேர்க்க தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையம் தமிழகத்திலுள்ள அரசு அங்கீகாரம் பெற்ற அனைத்துக் கல்லூரிகளின் மாணவர்களுக்காக தமிழிலும், ஆங்கிலத்திலும் பேச்சுப் போட்டிகளை நடத்தி முடித்துள்ளது.

கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் பாடத்திட்டங்களுக்கு அப்பால், மாணவர்கள் அறிந்தும் உணர்ந்தும் தெளிய வேண்டிய உன்னத விழுமியங்களை மாணவர்களிடம் கொண்டு சேர்க்கவும், தமிழ்ச் சமூகத்தின் தனித்துவமான பண்பாடுகளை, பெருமைகளை, இலக்கியங்களை, கலைகளை, வரலாற்றை மாணவர்கள் அறிந்து கொள்ளும் விதமாக தமிழகத்தின் 38 மாவட்டங்களில் நடத்தப்பட்ட இப்போட்டிகளில் 4,000 மாணவ மற்றும் மாணவியர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றுள்ளனர்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தமிழுக்கும், ஆங்கிலத்துக்கும் தனித்தனியாக மூன்று பரிசுகளும் (ரூ.20,000, ரூ.10,000, ரூ.5,000) மாநில அளவில் நடந்த போட்டிகளில் தமிழுக்கும், ஆங்கிலத்திற்கும் தனித்தனியாக மூன்று பரிசுகளும் (ரூ.1,00,000, ரூ.50,000, ரூ.25,000) சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. மாவட்ட அளவில் 228 மாணவ மற்றும் மாணவியர்களும், மாநில அளவில் 6 மாணவ மற்றும் மாணவியர்களும் பரிசுகளைப் பெறுகிறார்கள்.

சமூகநீதி, மத நல்லிணக்கம், மனிதநேயம், சுயமரியாதை அனைவருக்குமான வளர்ச்சி என்று தன் வாழ்நாள் முழுவதும் அதற்காகவே வாழ்ந்த தலைவர் கலைஞர் அவர்களின் அடியொற்றி தடம் பிறழாமல் பயணிக்கும் தமிழக முதலமைச்சரின் பொற்கரங்களால் இம்மாணவர்கள் பரிசுகள் பெறுவது மிகப்பெரும் பேறு.

இப்போட்டிகளை நடத்துவதற்கான அனுமதியினையும், வழிகாட்டுதல்களையும் அளித்து பரிசுகள் வழங்கி மாணவச் செல்வங்களை பெருமைப்படுத்தவிருக்கும் முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றி!” என தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் சா.பீட்டர் அல்போன்ஸ் தெரிவித்துள்ளார்.

### காவிரி வழக்கை விசாரிக்க

# 3 நீதிபதிகள் கொண்ட புதிய அமர்வு ஏற்படுத்தப்படும்!

## உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அறிவிப்பு!

டெல்லி, ஆக. 23 -

காவிரி வழக்கை விசாரிக்க புதிய அமர்வு ஏற்படுத்தப்படும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அறிவித்துள்ளார்.

கர்நாடக அரசு கடந்த ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதம் 9ம் தேதி வரை காவிரியில் இருந்து தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய 51 டி.எம்.சி. நீரில் 15 டி.எம்.சி. மட்டுமே தந்திருப்பதால் எஞ்சியுள்ள 38 டி.எம்.சி. நீரை உடனடியாக திறக்க உத்தரவிட வேண்டுமென டெல்லியில் சமீபத்தில் நடந்த காவிரி மேலாண்மை ஆணைய கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால் வினாடிக்கு 10,000 கன அடி வீதம் 15 நாட்களுக்கு மட்டுமே தண்ணீர் திறக்க கர்நாடகத்திற்கு மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டது.



இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்நாடு அரசு தரப்பில் உச்சநீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டது. அதில், 'கடந்த ஜூன், ஜூலை மாதங்களில் கர்நாடக அரசு தமிழ்நாட்டிற்கு திறந்து விட வேண்டிய நீரில் சுமார் 29 டி.எம்.சி தண்ணீரை இன்னும் திறந்து விட வேண்டும். அதேபோல ஆகஸ்டு மாதத்தில் கர்நாடகம் 45 டி.எம்.சி நீர் தர வேண்டும். காவிரி டெல்டா பாசன பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிர்களை காப்பாற்ற உடனடியாக வினாடிக்கு 24,000 கனஅடி வீதம் தண்ணீர் இந்த மாதம் முழுவதும் காவிரியில் திறந்து விட கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டும். அதேபோன்று செப்டம்பர் மாதம் திறக்க வேண்டிய 36.76 டி.எம்.சி நீரையும் காலதாமதமில்லாமல் உரிய நேரத்தில் திறந்து விடவும் கர்நாடகத்துக்கு உத்தரவிட வேண்டும்.

மேலும், காவிரி நீர் விவகாரத்தில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் உரிய நீரை திறந்து விட கர்நாடக அரசுக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும்' என்று வலியுறுத்தி இருந்தது. இந்த மனுவை அவசர வழக்காக விசாரிக்க கோரி தலைமை நீதிபதி சந்திரசூட் அமர்வில் தமிழக அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர் முகுல் ரோத்தகி மற்றும் குமணன் ஆகியோர் கடந்த 18ம் தேதி முறையிட்டனர். இந்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட தலைமை நீதிபதி, இந்த விவகாரத்தை விசாரிக்க புதிய நீதிபதி அமர்வை நியமிக்க வேண்டுமென்பதால், முறைப்படி முறையிடுமாறு உத்தரவிட்டார்.

### கலிபோர்னியாவில் நிலநடுக்கம்!

#### வீடுகள், கட்டிடங்கள் குலுங்கியது!

*கலிபோர்னியா, ஆக. 23-*

*அமெரிக்காவின் தெற்கு கலிபோர்னியா பகுதியில் திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவு கோலில் இது 5.1 புள்ளிகளாக பதிவானது. இந்த நிலநடுக்கத்தால் வீடுகள் கட்டிடங்கள் குலுங்கியதால் பொதுமக்கள் பீதி அடைந்தனர்.*

*இதில் உயிர் சேதமோ, பொருட் சேதமோ எதுவும் ஏற்படவில்லை. கடல் கொந்தளிப்புடன் காணப்பட்டாலும் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை. மேலும் கலிபோர்னியா மாகாணத்தில் நேற்று முன்தினம் பயங்கர சூறாவளி காற்றுடன் மழையும் பெய்ததால் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் பொது மக்கள் அவதிக்குள்ளானார்கள்.*



காஞ்சிபுரம் மாநகரத்தில் – அமைச்சர் தா.மோ. அன்பரசனின் உதவியாளர் – முரசொலி மூத்த நிருபர் காஞ்சி கே.சம்பத் மகன் கே.எஸ்.செந்தில் முருகேசன் – ஆர்.பூங்கோதை மணவிழாவில் – முதல்வர் அவர்களின் துணைவியார் திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு... முதல் பக்கத் தொடர்ச்சி

முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா கொண்டாட்டம் தொடர்பாக தலைமைச் செயலாளர் தலைமையில் இதுவரை 4 கூட்டங்கள் நடத்தப்பட்டு, அரசின் அனைத்து துறைகளின் ஒருங்கிணைப்புடன் அமைச்சர்கள் தலைமையிலான 12 குழுக்களிடமிருந்து முன்மொழிவுகள் பெறப்பட்டு, மாநில, மாவட்ட அளவிலான பல்வேறு நிகழ்வுகளை நடத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**கலை நிகழ்ச்சிகள் – விளையாட்டுப் போட்டிகள்!**

அதன்படி, முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடும் வகையில், மாநில அளவில் அமைக்கப்பட்ட 12 சிறப்புக் குழுக்கள் மூலம் தெரிவு செய்யப்பட்ட 12 மாவட்டங்களில் மாநில அளவிலான கொண்டாட்டங்களும், 114 மாவட்ட அளவிலான கொண்டாட்டங்களும், 117 துறைவாரியான நிகழ்ச்சிகளும் நடத்த உத்தேசிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிகழ்ச்சிகளில் நலத்திட்ட உதவிகள் வழங்குதல், கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் நடத்தி, பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா கொண்டாடுவது குறித்து நேற்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், முதலமைச்சர் அவர்கள், கலைஞர் நூற்றாண்டை நினைவுகூரும் வகையில் மாவட்டத்திற்கு ஒரு நினைவுச் சின்னம் அமைக்க வேண்டும் என்றும், கோவையில் கலைஞர் செம்மொழி பூங்காவிற்கும், சென்னையில் கலைஞர் பன்னாட்டு அரங்கத்திற்கும் (Convention Centre) விரைவில் அடிக்கல் நாட்டிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளை குறிப்பிட்ட காலத்தில் நடத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

**கலைஞர் பற்றிய 100 பக்க வரலாறு!**

மேலும், நிகழ்ச்சிகள் அனைத்திலும் பொதுமக்கள், மாணவர்கள், இளைஞர்கள் பங்கேற்பு அதிகம் இருக்க வேண்டும் என்றும், தமிழ்நாட்டிற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆற்றிய பங்கின் மூலமாக நாட்டிற்கு அவர் எப்படி புகழ் சேர்த்தார் என்பது குறித்தும், அனைவரும் பயன்படுத்திடும் வகையில் கலைஞரைப் பற்றிய 100 பக்க வரலாறு வெளியிட்டு, அவற்றை இலவசமாக பொதுமக்களுக்கு வழங்கிட வேண்டும் என்றும், இன்றைய இளைய தலைமுறையிடம் கலைஞரின் ஆளுமையை வெளிப்படுத்துவதே இதன் நோக்கமாக அமைய வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்தக் கூட்டத்தில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு. இரா. செல்வராஜ், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்புப் பணி அலுவலர் என்.சுப்பையன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல்!... முதல் பக்கத் தொடர்ச்சி

இதன்மூலம், உள்ளகரம் புழுதிவாக்கம், வேளச்சேரி, மடிப்பாக்கம், சோழிங்கநல்லூர், ஆலந்தூர், புனித தோமையார் மலை, மேடவாக்கம், கோவிலம்பாக்கம், நன்மங்கலம், கீழ்கட்டளை, மூவரசம்பேட்டை மற்றும் பல்லாவரம் ஆகிய பகுதிகளில் உள்ள 9 இலட்சம் மக்கள் பயனடைவார்கள்.

**பேரூரில் கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் அடிக்கல் நாட்டுதல்!**

இந்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் வளர்ச்சியினைத் தொடர்ந்து சென்னைக்கு அருகாமையில்பல்வேறு தொழில் நிறுவனங்கள் செயல்பட்டு வருவதாலும், பெருகிவரும் வளர்ச்சிக்கேற்ப எதிர்காலத்தில் பொதுமக்களுக்கு போதுமான அளவில் குடிநீர் வழங்கும் பொருட்டும், பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் நிலையம் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், செங்கல்பட்டு மாவட்டம், கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்திற்கு முதலமைச்சர் அவர்கள் நேற்றையதினம் அடிக்கல் நாட்டினார். இந்நிலையம் தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகப்பெரிய நிலையமாக அமையவுள்ளது. இந்நிலையம் அமைக்கும் பணி டிசம்பர் 2026க்குள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

இந்நிலையத்தில், கடல்நீரை குடிநீராக்க 1150 மீட்டர் நீளத்திற்கு கடலுக்குள் HDPE குழாய்கள் பதிக்கப்படும். மேலும், இந்நிலையத்தில் அமைக்கப்படவுள்ள நீர் கரைந்த காற்று அலகுகள் (Dissolved Air Floatation) மற்றும் இரட்டை ஈர்ப்பு மணல் வடிகட்டி அலகுகள் (Dual Media Filter) மற்ற வழக்கமான நிலையங்களை விட நவீன முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த அலகுகள் மூலம் கடலில் உள்ள கசடுகள் (மிதப்பவை, துகள்கள்) அகற்றிய பின்னர் கடல்நீரை குடி நீராக்கும் திறனை நிலையாகப் பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்நிலையத்திலிருந்து போரூர் வரை 59 கி.மீ நீளத்திற்கு குடிநீர் குழாய்கள் பதிக்கப்படும்.

இந்த நிலையத்தின் மூலம், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகள், தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அருகாமையில் உள்ள 20 ஊராட்சிப் பகுதிகளில் உள்ள 22.67 இலட்சம் மக்கள் பயன் அடைவார்கள்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் இரா.கிர்லோஷ் குமார், சென்னையிலுள்ள ஜப்பான் தூதரகத்தின் துணை தூதர் தாகா மசாயுகி (Mr. TAGA Masayuki), இந்தியாவிற்கான ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் தலைமை அலுவலர் சைட்டோ மிட்சுனோரி (Mr.SAITO Mitsunori), வி.எ.டெக் வபாக் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ராஜீவ் மிட்டல் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அடையாறு மண்டலம், வார்டு178க்குட்பட்ட தரமணி, பாரதி நகரில் வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டத்தினை நேற்று முன்தினம் (21.08.2023) திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர். பிரியா, வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானா, அடையாறு மண்டலக் குழுத் தலைவர் இரா.துரைராஜ், மாமன்ற உறுப்பினர் எஸ்.பாஸ்கரன், மண்டல அலுவலர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### முதலமைச்சரின் பசுமை புத்தாய்வுத் திட்டம் தொடக்கம்:
### திட்டத்தை செயல்படுத்திட தேர்வு செய்யப்பட்ட

# 40 பசுமைத் தோழர்கள் முதல்வரைச் சந்தித்து வாழ்த்து!

சென்னை, ஆக. 23 -

முதலமைச்சரின் பசுமை புத்தாய்வு திட்டத்தை தொடங்கி வைத்து, இத்திட்டத்தை செயல்படுத்திட தேர்வு செய்யப்பட்ட 40 பசுமை தோழர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.8.2023) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையின் சார்பில், காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வை பரப்புவதற்கும், மாவட்டங்களின் பசுமைக் கனவுகளை நிறைவேற்ற உதவிடும் வகையிலும் முதலமைச்சரின் பசுமை புத்தாய்வு திட்டத்தை தொடங்கி வைத்தார். மேலும், இத்திட்டத்தை செயல்படுத்திட அண்ணா பல்கலைக்கழகத்தின் அறிவாற்றல் ஆய்வு நிறுவனத்தால் தேர்வு செய்யப்பட்ட 40 பசுமை தோழர்கள் முதலமைச்சர் அவர்களை சந்தித்து, வாழ்த்து பெற்றனர்.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையின் 2021 - 2022ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது, முதலமைச்சரின் பசுமைப் புத்தாய்வுத் திட்டத்தினை தொடங்குவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

முதலமைச்சரின் பசுமைப் புத்தாய்வுத் திட்டமானது சுற்றுச்சூழல் பாதுகாப்பு, புதுப்பிக்கத்தக்க ஆற்றல், பல்லுயிர்ப் பாதுகாப்பு மற்றும் நீடித்த வாழ்க்கை முறை போன்ற துறைகளில் அர்ப்பணிப்புடன் செயல்படக்கூடிய இளைஞர்களுக்கான தளமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் பசுமையான எதிர்காலத்தை உருவாக்குவது குறித்த தமிழ்நாடு அரசின் அர்ப்பணிப்பை மட்டுமல்லாது மாநிலத்தின் சுற்றுச்சூழல் குறித்த எதிர்காலத்தை உறுதி செய்வது, கொள்கை வடிவமைப்பு மற்றும் மாற்றத்தை நோக்கிய பயணத்தில் இளைஞர்களின் பங்கினையும் பறைசாற்றுகிறது.

முதலமைச்சரின் பசுமைப் புத்தாய்வுத் திட்டமானது, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையின் கீழ் செயல்படும், அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆற்றல் கல்விகளுக்கான நிறுவனம் இத்திட்டத்திற்கான அறிவுசார் பங்குதாரராக செயல்படும். ஒரு திட்டத் தலைவர், 40 பசுமைத் தோழர்கள் மற்றும் நான்கு ஆராய்ச்சி இணையாளர்கள் ஆகியோர் தகுதியின் அடிப்படையில், அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆற்றல் கல்விகளுக்கான நிறுவனம் மூலமாக இத்திட்டத்திற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது, வேலைவாய்ப்பு, வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை ஆகிய மூன்று துறைகளின் துணைகொண்டு தமிழ்நாட்டை இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கு தலைமைதாங்கும் விதமாக சுற்றுச்சூழல் ரீதியாக முன்னேறிய மாநிலமாக மாற்றுவது, சுற்றுச்சூழல்சார் கொள்கைகள் வடிவமைப்பு, செயலாக்கம் மற்றும் நிர்வாகத்தில் உறுதிமிக்க இளைஞர்களை ஈடுபடுத்துதல், தமிழ்நாடு முழுவதும் சுற்றுச்சூழல் சேவைகளை சிறப்பாக வழங்குவதில் மாவட்ட நிர்வாகங்களுக்கு உறுதுணையாக இருத்தல், சுற்றுச்சூழல் கொள்கை மேலாண்மைக்கு வலுவான நிறுவன அமைப்புகளையும் செயல் முறைகளையும் உருவாக்குதல் மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த பிரச்சினைகளுக்கு தீவிர ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுகளின் மூலம் நிறுவன அறிவுக் களஞ்சியம் ஒன்றை உருவாக்குதல் போன்றவையாகும்.

பசுமைத் தோழர்கள் தமிழ்நாட்டிலுள்ள மாவட்ட நிர்வாகங்களின் சுற்றுச்சூழல் முன்னெடுப்புகளுக்கு உறுதுணையாக முக்கிய பங்காற்றுவர். பசுமைத் தமிழ்நாடு இயக்கம், தமிழ்நாடு கால நிலைமாற்ற இயக்கம் மற்றும் தமிழ்நாடு ஈரநில இயக்கம் போன்ற முக்கிய அரசுத் திட்டங்களின் செயலாக்கத்திற்கு பசுமைத் தோழர்கள் துணை புரிவர். சிறப்பான சுற்றுச்சூழல் சேவைகளை வழங்குதல் மற்றும் “மீண்டும் மஞ்சப்பை” போன்ற சூழல்சார் மாற்றுப் பொருட்களின் பயன்பாடுகளை ஊக்குவித்தல் போன்ற சேவைகளை ஆற்றுவார்கள்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பசுமைத் தோழர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு சேவையாற்றுவர். இக்காலகட்டத்தில், அவர்களுக்கு உதவித் தொகையாக மாதந்தோறும் ரூ.60,000/ வழங்கப்படும். மேலும், இத்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்ற அவர்களுக்கு மடிக்கணினியும் வழங்கப்படும். அவர்களின் திறன் மேம்பாட்டிற்கான பயிற்சி வகுப்புகள், பயிற்சிப் பட்டறைகள் போன்றவற்றில் கலந்து கொள்வதற்கான வாய்ப்புகளும் வழங்கப்படும்.

பசுமைத் தோழர்கள் இரண்டாண்டு சேவையின் முடிவில் அண்ணா பல்கலைக் கழகத்திடமிருந்து “கால நிலை மாற்றம் மற்றும் நிலைத்தன்மை” என்ற முதுகலை பட்டயப் படிப்பிற்கான பட்டத்தையும் பெறுவர்.

முதலமைச்சரின் பசுமை புத்தாய்வுத் திட்டத்தின் தொடக்கமானது சுற்றுச்சூழல் நிலைத்தன்மை குறிக்கோள்களுடன் இளைஞர்கள் இயைந்து செயல்படுவதற்கான முதல் படியாக இருக்கும். நம் மாநிலத்தை பசுமையான, மீள்திறன்கொண்ட மாநிலமாக உருவாக்குவதில் இளைஞர்களின் ஆற்றலையும் அர்ப்பணிப்பையும் தமிழ்நாடு அரசு பயன்படுத்திக் கொள்ளும்.

இந்த நிகழ்ச்சியில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் இயக்குநர் தீபக் எஸ். பில்கி, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சிறப்புச் செயலாளர்கள் அனுராக் மிஸ்ரா, ரிட்டோ சிரியாக், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் கூடுதல் இயக்குநர் மனிஷ் மீனா, அண்ணா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் ஆர். வேல்ராஜ், அறிவாற்றல் ஆய்வு நிறுவனத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் வெங்கடராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.





தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் (21.08.2023) தலைமைச் செயலகத்தில், தொடங்கி வைக்கப்பட்ட “முதலமைச்சரின் பசுமைப் புத்தாய்வுத் திட்டத்தை தொடர்ந்து, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், பசுமை தோழர்களுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்ச்சியில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாஹு, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை இயக்குநர் தீபக்.எஸ்.பில்கி, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் (ம) வனத்துறை சிறப்புச் செயலாளர் அனுராக் மிஸ்ரா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் (ம) வனத்துறை, கூடுதல் திட்ட இயக்குநர் மணிஷ் மீனா, அண்ணா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் ஆர்.வேல்ராஜ் அண்ணா பல்கலைக்கழகம் அறிவாற்றல் ஆய்வு நிறுவனத்தின் தலைவர் மற்றும் பேராசிரியர் முனைவர். வெங்கடராமன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ‘வைட்டல் பே’ தனிப்பிரிவு! ரூ.60 லட்சம் மதிப்பில்

# அணைக்கட்டு - பொய்கை ஆரம்ப சுகாதார நிலையத்தில் புற நோயாளிகள் பிரிவு!

### மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

*வேலூர், ஆக.23-*

*பொதுசுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்புத் துறையின் சார்பில் வேலூர் மாவட்டம் அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம் பொய்கை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூபாய் 60 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய புற நோயாளிகள் பிரிவினை பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் தொடங்கி வைக்கும் விதமாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் புதிய கட்டடத்திற்கான கல்வெட்டினை நேற்று முன்தினம் (21.08.2023) திறந்து வைத்தார்.*

*அதன் விபரம் வருமாறு:*

*சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் சார்பில் வேலூர் மாவட்டம் பொய்கை ஆரம்ப சுகாதார நிலையத்தில் புறநோயாளிகள் பிரிவு கட்டடம் கட்டும் பணி ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தின் பரப்பளவு 169 ச.மீ (அ) 1818 ச.மீ ஆகும். தரைதளத்தில் ஆண்கள் புற நோயாளிகள் பிரிவு, பெண்கள் புற நோயாளிகள் பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு, என்சிடி அறை, மருந்தகம், கழிவறை ஆகியவை இக்கட்டிடத்தின் உட்கட்டமைப்பு வசதிகளாகும்.*

*இதனைத் தொடர்ந்து, வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் அதி நவீன செயற்கை கால்களை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 2 பயனாளிகளுக்கு வழங்கினார்.*

*இத்திட்டத்தில் பயனடைந்த பயனாளிகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் மா. சுப்பிரமணியனுக்கும் நன்றிகளை தெரிவித்தனர்.*

*வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இதுவரை 7 நபர்களுக்கு ரூபாய் 16.5 லட்சம் மதிப்பில் நவீன செயற்கை கால்கள் தயார் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. செயற்கை கால்கள் தயாரிக்க குறைந்தது தோராயமாக ரூ.75,000 முதல் ரூ.5,00,000 இலட்சம் வரை செலவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து, அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் புற நோயாளிகள் பிரிவில் நுழைவு வாயிலில் ‘வைட்டல் பே’ அதாவது முக்கிய ஆரம்ப மதிப்பீட்டு பகுதி தொடங்கப்படும் என 2023-24 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக இன்று வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள வைட்டல் பே தனிபிரிவை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்.*

*தமிழ்நாட்டில் உள்ள 36 அரசு மருத்துவக்கல்லூரி மருத்துமனைகளில் வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புறநோயாளிகள் பிரிவில் வைட்டல் பே என்னும் தனிபிரிவு முதன்முதலில் தொடங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.*

### தமிழகத்தில்

# 11 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு!

*சென்னை, ஆக.23-*

*தமிழகத்தில் இன்று 11 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*இதுதொடர்பாக வெளியிட்ட அறிக்கையில்,*


*தமிழக பகுதிகளின் மேல் நிலவும் வளி மண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.*

*இன்று நீலகிரி, ஈரோடு, சேலம், நாமக்கல், தர்புரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், பெரம்பலூர், திருச்சி, திண்டுக்கல், மதுரை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.*

*சென்னையைப் பொருத்தவரை.. அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.*



மதுரையில் சிறை வாசிகளால் நடத்தப்படும் பெட்ரோல் விற்பனை நிலையத்தை சிறைத் துறை டி.ஜி.பி. அமரேஷ் பூஜாரி தலைமையில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார்.



கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், திருவெறும்பூரில் நடைபெற்ற திருவெறும்பூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கழக தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.என்.சேகரனின் புதல்வி எஸ்.நந்தினி எஸ்.பால ஆனந்த் இணையரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார். இதில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சு. திருநாவுக்கரசு எம்.பி. மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பித்தனர்.

# தலைமைச்செயற்குழு உறுப்பினர் கே.என்.சேகரன் மகள் திருமணம்!

## அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின் - அன்பில் மகேஸ் பொய்யாமொழி பங்கேற்பு !

திருவெறும்பூர், ஆக.23-

திருவெறும்பூர் தொகுதி தலைமை செயற்குழு உறுப்பினர் கே.என். சேகரன் சித்ரா. இவர்களது மகளும், திருவெறும்பூர் பகுதி செயலாளரும், திருச்சி மாநகராட்சி 40 வது வார்டு கவுன்சிலருமான சிவக்குமாரின் சகோதரியுமான இன்ஜினியர் நந்தினிக்கும், திருச்சி மாவட்ட ஊராட்சிகள்குழு துணைச் சேர்மன் கருணாநிதியின் சகோதரி கல்யாண சுந்தரி தெய்வத்திரு. சுந்தர்ராஜனின் மகன் இன்ஜினியர் பால ஆனந்த்க்கும் திருமணம் நடந்தது. இதனைத் தொடர்ந்து திருமண வரவேற்பு விழாவைத் தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமை வகித்து வாழ்த்திப் பேசியதாவது.

திருவெறும்பூர் தொகுதியில் அரசு நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்த்ததில் திருவெறும்பூர் முன்னாள் எம்எல்ஏவான சேகரன் சிறப்பாக செயல்பட்ட வர். நீண்டகாலமாக பட்டா பெற முடியாம லிருந்த நவல்பட்டு அண்ணா நகர் வீட்டுவசதி வாரிய குடியிருப்புவாசிகளுக்குப் பட்டா பெற்றுத் தந்தவர். திருவெறும்பூரில் காவேரி குடிநீர் திட்டத்தைப் பெற்று தந்தவர். எனது கோரிக்கையை ஏற்று திருவெறும்பூர் தொகுதியில் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வெற்றிக்காக பாடுபட்டதோடு, தன்னைவிட அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்தவர். 2016 ல் திருவெறும்பூர் தொகுதியில் மட்டும் தான் நான் பிரச்சாரத்திற்கு வந்தேன். திருவெறும்பூர் தொகுதி எம்எல்ஏவாக அன்பில் மகேஷ் பொய்யாமொழி தேர்ந்தெடுக்கப்பட்டதிற்கும் தற்போது அமைச்சரானதிற்கும் முக்கிய பங்கு மக்களின் பேரன்பைச் சேகரித்துள்ள சேகரனுக்கு உண்டு” என்றார்.

முன்னதாக, தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சரும், திருச்சி தெற்கு மாவட்ட செயலாளருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி, வரவேற்புரையாற்றினார். தலைமை செயற்குழு உறுப்பினர் கே.என். சேகரன் பேசியதாவது., ““இத்தருணம் என் வாழ்நாளில் மறக்க முடியாதது. இதற்காக தனது பரம்பரையே ஒட்டுமொத்தமாக திமுகவின் வெற்றிக்குப் பாடுபடும்” என்று நெகிழ்ச்சியுடன் பேசினார். கழக முதன்மை செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமாயன கே.என். நேரு முன்னிலை வகித்தார். உள்ளாட்சித்துறை அமைச்சர் ஐ . பெரியசாமி வாழ்த்துரை வழங்கினார். விழாவில், அமைச்சர்கள் வெள்ளக்கோவில் சாமிநாதன், மதுரை மூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசர், மாநகர கழக செயலாளர் மதிவாணன், சட்ட மன்ற உறுப்பினர்கள் இனிகோ இருதயராஜ், அப்துல் சமது, தியாகராஜன், ஸ்டாலின் குமார், பழனியாண்டி, கதிரவன், மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, துவாக்குடி நகராட்சி சேர்மன் காயாம்பு, உட்பட திரளானோர் கலந்து கொண்டனர்.

திருவெறும்பூர் வடக்கு ஒன்றிய செயலாளர் கருணாநிதி, கூத்தைப்பார் பேரூராட்சி தலைவர் செல்வராஜ், கூத்தைப்பார் பேரூர் செயலாளர் தங்கவேல் நன்றி கூறினர்.

# காவிரி நீர்தீர்ப்பு- விசாரணை!

டெல்லி, ஆக 23-

காவிரியில் நீர் திறக்க உத்தரவிடக் கோரிய தமிழ்நாடு அரசின் வழக்கு 25ம் தேதி உச்சநீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

காவிரி வழக்கில் தமிழ்நாடு அரசின் முறையீட்டை ஏற்று வழக்கை விசாரிக்க புதிய அமர்வு உருவாக்கப்படும் என்று உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி அறிவித்துள்ளார். கர்நாடக அரசு கடந்த ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதம் 9ம் தேதி வரை காவிரியில் இருந்து தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய 51 டிஎம்சி நீரில் 15 டிஎம்சி மட்டுமே தந்திருப்பதால் எஞ்சியுள்ள 38 டி.எம்.சி நீரை உடனடியாக திறக்க உத்தரவிட வேண்டும் என டெல்லியில் சமீபத்தில் நடந்த காவிரி மேலாண்மை ஆணைய கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால் வினாடிக்கு 10,000 கன அடி வீதம் 15 நாட்களுக்கு மட்டுமே தண்ணீர் திறக்க கர்நாடகத்திற்கு மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்நாடு அரசு தரப்பில், உச்சநீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டது. அதில், ‘கடந்த ஜூன், ஜூலை மாதங்களில் கர்நாடக அரசு தமிழ்நாட்டிற்கு திறந்து விட வேண்டிய நீரில் சுமார் 29 டிஎம்சி தண்ணீரை இன்னும் திறந்து விட வேண்டும். அதேபோல ஆகஸ்டு மாதத்தில் கர்நாடகம் 45 டிஎம்சி நீர் தர வேண்டும். காவிரி டெல்டா பாசன பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிர்களை காப்பாற்ற உடனடியாக வினாடிக்கு 24,000 கனஅடி வீதம் தண்ணீர் இந்த மாதம் முழுவதும் காவிரியில் திறந்து விட கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டும். அதேபோன்று செப்டம்பர் மாதம் திறக்க வேண்டிய 36.76 டிஎம்சி நீரையும் காலதாமதமில்லாமல் உரிய நேரத்தில் திறந்து விடவும் கர்நாடகத்துக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரி வழக்கு கொடுத்துள்ளது.

தலைமை நீதிபதி சந்திரசூட், ‘காவிரி விவகாரம் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால் இந்த வழக்கில் உடனடியாக விசாரிக்கும் விதமாக 3 நீதிபதிகள் கொண்ட புதிய அமர்வு உருவாக்கப்படும்’ என்று அறிவித்தார்.

இந்நிலையில் காவிரியில் நீர் திறக்க உத்தரவிடக் கோரிய தமிழ்நாடு அரசின் வழக்கு 25ம் தேதி உச்சநீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்படும் அறிவிக்கப்பட்டதுடன் 25 ஆம் தேதிக்கு இந்த வழக்கு பட்டியலிடப்பட்டுள்ளது என்பதை குறிப்பிடத்தக்கது.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே! ஒன்றிய அரசில் காங்கிரஸ் ஆட்சி செய்த போது, 24 ஊழல்கள் நடந் துள்ளதாக, ஒன்றிய பா.ஜ.க. உள்துறை அமைச்சர் அமித்ஷா கூறியிருக்கிறாரே ?

**பெரியதம்பி :** **ஆமாம்பா! 10 ஆண்டுகளுக்கு முன்னர் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் கட்சிக்கு எதிராக, 24 ஊழல்கள் என்று அமித்ஷா, அரசியல் ரீதியாகக் குற்றச்சாட்டு கூறுகிறார்.**

**ஆனால் 10 ஆண்டுகளாக ஒன்றிய ஆட்சியில் இருந்துவரும் பா.ஜ.க. நடத்திய 7 ஊழல்களில் 7.5 லட்சம் கோடி கொள்ளை என்று இப்போது இந்தியத் தலைமைக் கணக்காயர் கூறியிருப்பது, அரசியல் காரணங்களுக்காக அல்ல; அலுவல் ரீதியாக, ஒன்றிய அரசின் கோப்புகளை ஆழ்ந்து ஆய்வு செய்து, இந்த 7 ஊழல்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளார்.**

**பா.ஜ.க. உள்துறை அமைச்சர், முதலில் இதற்குப் பதில் சொல்லிவிட்டு, மற்றவர்களைப் பற்றிப் பேச வேண்டும்.**

**அடுத்து, ஒன்றிய ஊழல் கண்காணிப்பு ஆணையம் (Central Vigilance Commission), கடந்த ஆண்டு ஒன்றிய உள்துறை அமைச்சகத்திற்கு எதிராகத்தான் அதிகமான ஊழல் புகார்கள் பெறப்பட்டன என்று அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்தக் கடும் ஊழல் குற்றச்சாட்டு புகாருக்கும் பதில் விளக்கம் தர வேண்டிய பொறுப்பு ஒன்றிய உள்துறை அமைச்சரையே சாரும்.**

**முதலில், தான் குடும்பத்துடன் வசித்துவரும் வீட்டில் குவிந்திருக்கும் குப்பை கூளங்களை அகற்றிச் சுத்தப் படுத்திவிட்டு, எதிர் வீட்டைப் பற்றிக் கருத்து சொன்னால்தான், எவரும் காது கொடுத்துக் கேட்பர் !**


வாழ வைத்த தெய்வங்கள்








23.08.2023

மூன்றாம் ஆண்டு நினைவு நாள்

( 1951 - 2020 )



முன்னாள் திருமயம் சட்டமன்ற உறுப்பினர் (1989 – 1991)

முன்னாள் ஒருங்கிணைந்த புதுக்கோட்டை மாவட்ட துணைச் செயலாளர்

முன்னாள் பொன்னமராவதி ஒன்றிய பெருந்தலைவர் (1986 – 1991)

கழக முன்னணி கள வீரர்

திரு. ஆலவயல் சுப்பையா BA.,Ex.MLA., அவர்கள்

என்றும் உங்கள் வழித்தடத்தில், தலைவர் வழிகாட்டுதலில்

ஆலவயல்முரளிசுப்பையா MCA.,

திருமயம் தொகுதிப் பொறுப்பாளர் – சமூக வலைதளப் பிரிவு

குடும்பத்தினர் மற்றும் கழகத்தினர்

சுதா பிரிண்டர்ஸ் பொன்னமராவதி


மணிப்பூர் கொடூரம்!

# பெண்களுக்கு எதிரான வன்முறை குறித்த அறிக்கை!

## மூவர் கொண்ட குழு உச்சநீதிமன்றத்தில் தாக்கல்!

டெல்லி, ஆக. 23 -

மணிப்பூர் கலவரத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை விசாரித்து நீதிபதிகள் குழு அறிக்கை தாக்கல் செய்துள்ளது. மணிப்பூர் கலவரத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை விசாரித்து நிவாரணம், மறுவாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற 3 நீதிபதிகளான கீதா மிட்டல், ஷாலினி ஷோஷி, ஆஷா மேனன் ஆகியோரை கொண்ட குழுவை உச்சநீதிமன்றம் கடந்த 7ம் தேதி அமைத்து உத்தரவு பிறப்பித்தது.

மேலும் சி.பி.ஐ. விசாரித்து வரும் 12 பாலியல் வன்முறை வழக்குகளை கண்காணிக்கவும், 6,500 வழக்குகளை விசாரிக்க மணிப்பூர் அரசு அமைத்துள்ள 42 எஸ்.ஐ.டி. குழுக்களின் விசாரணையை கண்காணிக்கவும், பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை சம்பவத்தில் உடந்தையாக இருந்த காவல்துறையினரை விசாரிக்கவும், மகாராஷ்டிரா முன்னாள் டி.ஜி.பி.யை நியமித்து உத்தரவிட்டது. இந்த இரு குழுக்களும் 2 மாதங்களுக்குள் அறிக்கை அளிக்க வேண்டும் என உத்தரவு பிறப்பித்திருந்த நிலையில், இந்த விவகாரம் தொடர்புடைய மனுக்களை மேற்படி விசாரித்து உத்தரவுகளை பிறப்பிக்க அக்டோபர் 13ம் தேதி விசாரணை மீண்டும் நடைபெறும் என தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் மணிப்பூர் கலவரத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை விசாரித்து தற்போது அங்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நிவாரணம், மறுவாய்வு நடவடிக்கைகள் குறித்த விரிவான 3 அறிக்கைகளை ஓய்வு பெற்ற பெண் நீதிபதிகள் அடங்கிய குழு உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர் என்ற தகவலை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நீதிமன்றத் திற்கு உதவுமாறு சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தாவை தலைமை நீதிபதி அமர்வு கேட்டுக்கொண்டது.



திருப்பூர் ரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா சிலை முன்பு திருப்பூர் மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில், தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், கழக மாணவர் அணி துணைச் செயலாளர் வீரமணி, மாநகர கழக செயலாளர்கள் டிகேடி மு.நாகராசன், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாவட்ட அமைப்பாளர்கள் இளைஞர் அணி ஈ.தங்கராஜ், மு.ஜெயக்குமார், மருத்துவர் அணி மருத்துவர் கோபு, மருத்துவர் பாலசுப்பிரமணியம், மாணவர் அணி து.கோபிநாத், குகன் ஆகியோர் முன்னிலையில் நீட் தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசையும், அதற்கு துணை போகும் ஆளுநரையும் கண்டித்து, பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்ட உண்ணாவிரத அறப்போராட்டத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்து கண்டன உரையாற்றினார். இதில் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## ‘நீட்’ தேர்வு ரத்தாகும் வரை

# நம் சட்டப் போராட்டமும் அறவழிப் போராட்டமும் தொடரும்!

## காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**மதுராந்தகம், ஆக.23 -**

**நீட் தேர்வு ரத்தாகும் வரை நமது சட்டப் போராட்டமும், அறவழிப்போராட்டமும் தொடரும் என்று இளைஞர் அணிச் செயலாளர்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் மதுராந்தகத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.**

அவர் பேசியது வருமாறு:-

நம்முடைய இயக்கத்தில் செயல்படக் கூடிய முதன்மையான அணி எதுவென்றால், அது நம்முடைய இளைஞர் அணிதான்.

தலைமைக் கழகம் ஒப்படைக்கக்கூடிய பணிகளாக இருந்தாலும் சரி, மாவட்டக் கழகம் ஒப்படைக்கின்ற பணிகளாக இருந்தாலும் சரி, அந்தப் பணிகளையெல்லாம் மிகச்சிறப்பாக முடித்துக் காட்டுபவர்கள் நம்முடைய இளைஞர் அணி சகோதரர்கள்தான்.

அந்த வகையில் செயல்வீரர்களுக்கான கூட்டம் என்பது, இளைஞர் அணிக்கு இந்தக் கூட்டத்திற்கு பொருத்தமாகவும் சரியாகவும் இருக்கும். இந்த மாவட்டத்தினுடைய முதன்மையான செயல்வீரர் யார் என்று பார்த்தால், நம்முடைய மாவட்டக் கழகச் செயலாளர் சுந்தர் அவர்கள்தான்.

நான் ஏதோ, பேச்சுக்காகவோ அவரை இங்கே பெருமைப்படுத்துவதற்காகவோ இதை நான் சொல்லவில்லை. அதற்கு உதாரணம், ஐந்து முறை சட்டமன்ற உறுப்பினர், தொடர்ந்து மாவட்டக் கழகச் செயலாளர். ஆனாலும், அந்த அனுபவப் பெருமை எதுவும் இல்லாமல், அலட்டிக் கொள்ளாமல் கழகப் பணிகளைச் செய்து முடிப்பதில் முதன்மையானவர்.

எந்தப் பணியாக இருந்தாலும், அத்தனை மாவட்டச் செயலாளர்களுக்கும் எடுத்துக்காட்டாக, விளங்கக்கூடியவர்தான் சுந்தர் அவர்கள்.

இளைஞர் அணியினுடைய இரண்டாவது மாநில மாநாட்டை ஒட்டி நடைபெறவுள்ள இளைஞர் அணியினுடைய முதல் செயல்வீரர்கள் கூட்டம் இது.

தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று இந்தச் செயல்வீரர்கள் கூட்டத்தை நடத்தப் போகிறேன். அதனால் தான் முதல் செயல்வீரர் கூட்டத்தை, காஞ்சிபுரத்தைத் தேர்வு செய்ததற்கு அதுவும் மிக முக்கியமான ஒரு காரணம்.

இளைஞர் அணிக்கு அந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுத்துக் கழகப் பணி ஆற்றும் மாவட்டச் செயலாளர்களில் சுந்தர்தான் முதன்மையான மாவட்டச் செயலாளர் ஆவார்.

நான் 2019ஆம் ஆண்டு கழகத்தினுடைய இளைஞர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்கும்போது தலைவர் அவர்கள் என்னிடத்திலே ஒரு இலக்கு கொடுத்தார்கள்.

இளைஞர் அணிக்காக ஒரு தொகுதிக்கு 10 ஆயிரம் பேரை நீ உறுப்பினராகச் சேர்க்க வேண்டும் என்றார். அப்போது அந்தப் பணியை முடித்த முதல் மாவட்டம், இந்த காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம். அதற்குக் காரணம் நம்முடைய அமைச்சர் மாவட்டக்கழகச் செயலாளர் அண்ணன்.

அதைத்தொடர்ந்து ஊராட்சிக் கிளைகளிலும் மாநகர, நகர, பேரூர் வார்டுகளிலும் இளைஞரணிக்கு நிர்வாகிகளை நியமிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டோம். அதையும் தமிழ்நாட்டிலேயே முதலில் முடித்துக் கொடுத்தவர் நம்முடைய சுந்தர் அவர்கள் தான்.

அதேபோல் பேராசிரியர் நூற்றாண்டைத் தொடர்ந்து பாசறை நிகழ்ச்சிகள் நடத்த வேண்டும் என்று சொன்னோம். அதையும் முடித்துக்கொடுத்தவர் நம்முடைய மாவட்டக்கழகச் செயலாளர் அவர்கள்.

அதேபோல், உள்ளாட்சித் தேர்தல்களிலும் கழகத்தினுடைய அமைப்புத் தேர்தல்களிலும் இளைஞர் அணிக்கு அதிகளவில் பிரதிநிதித்துவம் அளித்தவரும் அண்ணன் அவர்கள் தான். இளைஞர் அணி சார்பில், தலைவருடைய கட்டளையை ஏற்று, திராவிட மாடல் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தைத் தொகுதி வாரியாக நடத்த வேண்டுமென்று தலைவர் அவர்கள் அறிவித்தார்.

ஆனால், நம்முடைய அண்ணன் சுந்தர் அவர்கள் நாங்கள் ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக நடத்திக் காட்டுகிறோம் என்று இங்குள்ள நான்கு தொகுதிகளில் தமிழ்நாட்டிலேயே அதிகமாக 19 கூட்டங்களை திராவிட மாடல் பயிற்சி பாசறை கூட்டத்தை நடத்தி காட்டினார்.

நம்முடைய இளைஞர் அணிக்கு உறுதுணையாக என்றும் இருப்பவர்தான் அண்ணன் அவர்கள்.

### கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி!

கழகத்தை வளர்த்தெடுத்த கழகத்தின் மூத்த முன்னோடிகளுக்குப் பொற்கிழி வழங்குகின்ற நிகழ்ச்சி.

எத்தனையோ நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டாலும் எனக்கு மனதிற்கு மிகவும் நெருக்கமான நிகழ்ச்சி. எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும், எந்தப் பயணமாக இருந்தாலும் அந்த மாவட்ட கழகச் செயலாளர்களிடத்திலே ஒரே ஒரு அன்புக் கட்டளைதான்.

எத்தனை நிகழ்ச்சி வேண்டுமானாலும் நடத்துங்கள் நான் கலந்து கொள்கிறேன். ஆனால், எனக்காக, என்னுடைய ஆசைக்காக என்னுடைய மனத் திருப்திக்காக ஒரு நிகழ்ச்சி நடத்த வேண்டும். கழகத்திற்காக உழைத்த இரத்தம் சிந்திய, வேர்வை சிந்திய கழகத்தினுடைய மூத்த முன்னோடிகளை, நீங்கள் பெருமைப்படுத்த வேண்டும். பொற்கிழி வழங்க வேண்டும் என்று அந்தக் கட்டளையிடுவேன்.

எல்லா மாவட்டத்திலும் ஒரு ஒரு நிகழ்ச்சி நடத்துவாங்க, இன்னும் சில மாவட்டங்களில் நிகழ்ச்சி நடத்தவில்லை. நான் இன்னும் தேதி கொடுக்கவில்லை. ஆனால், அண்ணன் சுந்தர் அவர்கள் இதுவரை மூன்றுமுறை அந்த நிகழ்ச்சிகளை நடத்தி இருக்கிறார். நாம் எதிர்க்கட்சியாக இருந்தபோதே ஆயிரத்து இருபது கழக மூத்த முன்னோடிகளுக்குத் தலா 5 ஆயிரம் ரூபாய் பொற்கிழி வழங்கினார்.

அதைத்தொடர்ந்து ஒன்றரை வருடங்களுக்கு முன்பு இரண்டாயிரத்து எண்பது மூத்த முன்னோடிகளுக்குத் தலா 15 ஆயிரம் ரூபாய் வழங்கினார்.

இன்று இந்த நிகழ்ச்சியை முடித்துவிட்டு முத்தமிழறிஞர் கலைஞருடைய சிலையை திறக்கின்ற ஒரு வாய்ப்பு. அதற்கும் இந்த நேரத்திலே அண்ணன் சுந்தர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதை முடித்துவிட்டு, இன்றும் மீண்டும் 1,000 கழக மூத்த முன்னோடிகளுக்குப் பத்தாயிரம் ரூபாய் பொற்கிழியை வழங்கியிருக்கின்றார்.

இப்படி எந்தப் பணியாக இருந்தாலும், அதுவும் குறிப்பாக இளைஞர் அணி பணியென்றால், நம்முடைய நிர்வாகிகளுக்கு உறுதுணையாக இருந்து அவர்களையெல்லாம் வளர்த்தெடுப்பதில் முக்கியப் பங்கு ஆற்றக்கூடிய அண்ணன் சுந்தர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதுமட்டுமல்ல, நம்முடைய மாநாட்டுக்கான செலவு, மாவட்டக் கழகத்தின் சார்பாக ரூபாய் ஒரு கோடியே ஒரு இலட்சம் ரூபாயை வழங்கியிருக்கின்றார். அவருக்கு இந்த இளைஞர் அணியின் சார்பாக நன்றி.

மாவட்ட இளைஞர் அணியின் சார்பாக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களெல்லாம் சேர்ந்து 10 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கின்றீர்கள் அதற்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கழகத்தில் உழைப்பிற்கு ஏற்ற முன்னேற்றம் இருக்கும் என்பதற்கு, இந்த இளைஞர் அணியே போதுமான ஒரு சாட்சி. ஏனெனில், உழைப்பு, உழைப்பு, உழைப்பு, உழைப்பு என்றால், ஸ்டாலின் என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் வாழ்த்தப்பட்டு, உருவாக்கப்பட்ட அணிதான் இந்த இளைஞர் அணி. அப்படிப்பட்ட இந்த இளைஞர் அணியில் உழைத்தால் மட்டும்தான் உயர்வு என்பதற்கு, இந்த மேடையே உங்களுக்குச் சான்று.

இன்று இந்த இளைஞர் அணியில் 9 பேர் மாநில துணைச்செயலாளர்களாகப் பொறுப்பேற்றிருக்கிறார்கள். அந்த 9 பேரில் 8 பேர் ஏற்கனவே, மாவட்ட அமைப்பாளர்களாவும், ஒருவர் துணை அமைப்பாளராகவும் செயல்பட்டவர். திறம்படச் செயல்பட்டவர்கள். அவர்களுடைய உழைப்பிற்கு மதிப்பளிக்கும் வகையில்தான் நம்முடைய தலைவர் அவர்கள், அவர்களுக்குத் துணைச்செயலாளர்களாகப் பொறுப்புக் கொடுத்திருக்கிறார்கள்.

அதைத் தொடர்ந்து நடைபெற்ற மாவட்ட, மாநகர அமைப்பாளர், துணைஅமைப்பாளர் நேர்காணலில் தமிழ்நாடு முழுவதும் இருந்து 658 நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 452 பேர் ஏற்கனவே, இளைஞர் அணியில் ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்களாகப் பணியாற்றியவர்கள்.

யார், யார் சிறப்பாகப் பணியாற்றினார்கள் என்று தேடித்தேடிப் பார்த்து தலைவரினுடைய உத்தரவின் பேரில், ப்ரோமோஷன் கொடுத்திருக்கின்றோம்.

இந்த மேடையிலேயே எடுத்துக்கொள்ளுங்கள். தற்போதைய மாவட்ட அமைப்பாளர் திரு.யுவராஜ் அவர்கள், ஏற்கனவே சிறப்பாக மாவட்ட துணை அமைப்பாளராகச் செயல்பட்டவர். இப்போது அவர் மாவட்ட அமைப்பாளராகப் பொறுப்பேற்றிருக்கிறார்.

ஏற்கனவே, இளைஞர் அணியில் இருந்து சிறப்பாகப் பணியாற்றியவர்கள்தான் துணை அமைப்பாளர்களாக இன்று உயர்ந்துள்ளார்கள். இந்தச் சமயத்தில் சகோதரர் யுவராஜ் அவர்களுக்கும், மாவட்ட, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்து வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல், சகோதரர் அப்துல் மாலிக் உறுப்பினர் சேர்க்கை, புதிய நிர்வாகிகள் தேர்வு, பாசறைக் கூட்டங்கள், இல்லந்தோறும் இளைஞர் அணி என மிகச்சிறப்பான அவருடைய பணியால், இன்று மாநில துணைச் செயலாளராகப் பதவி உயர்வு பெற்றிருக்கிறார்.

உழைத்தால் உயர்வு உண்டு என்பதற்கு, அவர் சிறந்த எடுத்துக்காட்டு. கிளைச் செயலாளராகக் கழகப் பணியைத் தொடங்கியவர் இன்றைக்கு இளைஞர் அணியினுடைய மாநில துணைச் செயலாளராக அமர்ந்திருக்கின்றார்.

அதற்கு அவருடைய உழைப்பும், சுந்தர் அண்ணனுடைய ஒத்துழைப்பும்தான் முழுக் காரணம். அவருக்கும் இந்த மேடையிலே என்னுடைய வாழ்த்துக்களையும், நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த மண்டலத்தில் இளைஞர் அணி பணிகளை மிகச்சிறப்பாக ஒருங்கிணைக்கக் கூடிய இளைஞர் அணியினுடைய மாநில துணைச் செயலாளர் சகோதரர் பிரபு கஜேந்திரன் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இளைஞர் அணியினுடைய இந்தச் செயல்வீரர் கூட்டத்திற்காக உழைத்த மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கழக நிர்வாகிகளுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாம் இங்கு எதற்காகக் கூடியிருக்கின்றோம், வரும் டிசம்பர் மாதம் சேலத்தில் நடைபெறவுள்ள இளைஞர் அணியினுடைய இரண்டாவது மாநில மாநாட்டை வெற்றி பெற வைக்க வேண்டும் என்ற அந்த ஒரே கோரிக்கையோடு, கொள்கையோடு இங்கு அமர்ந்திருக்கின்றோம். வெற்றிப்பெற வைக்க வேண்டுமென்றால், நீங்கள் அத்தனைபேரும் அந்த மாநாட்டிற்கு வந்தால்தான் அந்த மாநாடு வெற்றி பெறும்.

### இளைஞர் அணி மாநாடு!

நீங்கள் மட்டுமல்ல, கிட்டத்தட்ட இளைஞர் அணியில் இருக்ககூடிய அனைத்து தம்பிமார்களையும் நீங்கள் அழைத்து வந்தால்தான் அந்த மாநாடு மிகப்பெரிய வெற்றி அடையும். இங்கே அண்ணன் சுந்தர் அவர்கள் கிட்டத்தட்ட இந்த மாநாட்டில் 20 ஆயிரம் பேர் கலந்து கொள்வார்கள் என்று வாக்குறுதியைக் கொடுத்திருக்கிறார்கள். கண்டிப்பாக அவர் சொல்வதை செய்து காட்டுவார் என்ற அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

உங்களுடன் ஒரு மகிழ்ச்சியான விஷயத்தைப் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். நான் இளைஞர் அணி செயலாளராகப் பொறுப்பேற்றவுடன் சேர்க்கப்பட்ட இளைஞர் அணி உறுப்பினர்களுடைய மொத்த எண்ணிக்கை 25 இலட்சம். அவர்களில் சிறப்பாகப் பணியாற்றக்கூடியவர்கள்தான் ஊராட்சிகளிலுள்ள கிளைகளிலும், வார்டுகளிலும், அமைப்பாளர், துணை அமைப்பாளர்களாகத் தேர்வு செய்தோம்.

அப்படி இந்த காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் மட்டும் 6 ஆயிரத்து 500 நிர்வாகிகளைத் தேர்வு செய்துள்ளோம். இப்படி தமிழ்நாடு முழுவதும் 72 கழக மாவட்டங்களில் தேர்வு செய்யப்பட்ட இளைஞர் அணியினுடைய நிர்வாகிகளின் எண்ணிக்கை மொத்தம் 4 இலட்சம். நம்முடைய இளைஞர் அணி மாநாட்டில் நிச்சயம் நம்முடைய நிர்வாகிகள் கலந்து கொள்வது உறுதி. எனவே, 4 இலட்சம் பேர் கலந்து கொள்ளப்போவது உறுதி. ஆனால், அது பத்தாது. குறைந்தது 10 இலட்சம் பேரையாவது நாம் அங்குத் திரட்டிட வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் செயல்வீரர் கூட்டம்.

நூற்றாண்டு பெருமை கொண்டது நம்முடைய திராவிட இயக்கம். அதில் முக்கால் நூற்றாண்டு பெருமை கொண்டது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம். அதில் இளைஞர் அணிக்கு வயது 45. கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு கால வரலாறு கொண்டது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி. அதனால்தான் உங்களையெல்லாம் நான் கேட்டுக்கொள்கிறேன், இந்த மாநாட்டிலே நீங்களெல்லாம் கலந்து கொண்டு மாநாட்டை மிகச்சிறப்பான ஒரு வெற்றி மாநாடாக நீங்களெல்லாம் மாற்ற வேண்டும் என்று உங்களையெல்லாம் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாநாட்டிலே கலந்துகொண்டு கழக அரசினுடைய சாதனைகளையெல்லாம் நீங்கள் உள்வாங்கி, அதை மக்களிடத்திலே கொண்டுபோய்ச் சேர்த்து, தலைவர் அவர்கள் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளில் எத்தனை வாக்குறுதிகளை நிறைவேற்றிருக்கிறார் என்பதையெல்லாம் புரிந்துகொண்டு இயக்கத்தினுடைய வரலாறு எல்லாம் தெரிந்து கொண்டு, கழகப்பணி ஆற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

அதேநேரத்தில், நமக்கு எதிர்புறமாகவே, ஒரு மாநாடு நடத்துறாங்க, மதுரையிலே ஒரு மாநாடு நடக்கிறது. எனக்குத் தெரிந்து அந்த மாநாட்டில் என்ன சொல்வாங்க, எது எல்லாம் கத்துக்கொடுப்பாங்க, காலில் விழுவது எப்படி, காலை வாரிவிடுவது எப்படி, டேபிள் சேர்க்குள்ளே போவது எப்படி, கொள்ளை அடிப்பது எப்படி, இதெல்லாம் அந்த மாநாட்டிலே கருப்பொருளாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

மணிப்பூர் என்ற ஒரு மாநிலம் கிட்டத்தட்ட 5 மாதங்களாக பற்றி எரிகின்றது. அந்த மாநிலத்தை ஆள்வது ஒன்றிய பா.ஜ.க அரசு. திராவிட மாடல், திராவிட மாடல் என்று நம்முடைய தலைவர் அவர்கள் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். பல பேர் கேட்கிறார்கள்.

திராவிட மாடல் என்றால் என்னவென்று, நான் சொல்கிறேன். மணிப்பூரை ஆண்டு கொண்டிருப்பது பா.ஜ.க அரசு. ஒரு அரசே மக்களை இரண்டாகப் பிரித்து 5 மாதம் பிரச்சினை போய்க்கிட்டு இருக்கு, கிட்டத்தட்ட 500 பேர் இறந்திருக்கிறார்கள். தேவாலயங்கள் எல்லாம் இடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அதைப்பற்றிப் பேசுவதற்கு நம்முடைய ஒன்றிய பிரதமர் அவர்களுக்குத் தைரியம் கிடையாது.

நாடாளுமன்றத்தை கூட்டி நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றிருக்கிறோம். இரண்டு மணி நேரம் நம்முடைய பிரதமர் மோடி அவர்கள் பேசுகிறார். அந்த இரண்டு மணி நேரத்திலே மணிப்பூரைப் பற்றி அவர் பேசியது வெறும் 5 நிமிடங்கள்.

தி.மு.க.வைப் பற்றிப் பேசியது கிட்டத்தட்ட 1 மணி நேரம். எந்தப் பகுதிக்குப் போனாலும், இந்தியாவினுடைய எந்தப் பகுதிக்குப் போனாலும் நம்முடைய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், எப்போது பார்த்தாலும் நம்முடைய தலைவர் அவர்களுடைய எண்ணம். தி.மு.க.வைப் பற்றியே அவர் பேசிக்கிட்டு இருப்பார்.

சமீபத்தில் சென்னைக்கு வந்தார் ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அவர்கள். அவரும் இங்கு வந்து என்னைப் பற்றித்தான் பேசிவிட்டு போய் இருக்கிறார். தி.மு.க ஆட்சிக்கு வந்தது என்றால், வாழ்வது வெறும் கலைஞர் குடும்பம்தான் என்று.

ஆமாம், இன்று நான் சொல்கிறேன். ஒட்டுமொத்த தமிழகமும் தலைவர் கலைஞர் அவர்களுடைய குடும்பம்தான். நீங்கள் ஆட்சிக்கு வந்த 9 வருடத்தில் யார் வாழ்ந்திருக்கிறார்கள். உங்களுடைய நெருங்கிய நண்பர் பேர் என்ன? ஆமா அதானி. நான் கூட அடிக்கடி சொல்வேன் பிரதமர் மோடி அவர்கள் இந்தியாவில் இருப்பதே மிகவும் குறைவான நேரம்தான். எப்போது பார்த்தாலும், வெளிநாட்டில்தான் சுற்றிக்கொண்டு இருப்பார்.

விமானத்துலத்தான் போவார். விமானி இல்லாமல் கூடப் போவாரு, ஆனால், அதானி இல்லாமல் போகமாட்டார்.

### பொதுத் துறைகள் அதானி வசம்!

இந்த அதானி குழுமம் ஆரம்பித்து, 9 வருடங்களிலேயே மிகப்பெரிய வளர்ச்சி. உலகப் பணக்காரர்கள் பட்டியலில் இரண்டாவது இடம். எல்லாப் பொதுத்துறையையும் தூக்கி, அதானிக்கிட்ட கொடுத்தாச்சு. அதானி ஏர் போர்ட், அதானி போர்ட், அதானி ஸ்டேடியம் எப்படி இந்த வளர்ச்சி.

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்




காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் மதுராந்தகத்தில் மாநாடுபோல் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நல உதவிகள் வழங்கி எழுச்சியுரையாற்றினார். உடன் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் உள்ளனர்.



அரியமங்கலம் பகுதி திமுக செயலாளர் ஏ.எம். ஜி. விஜய்குமார் இல்ல திருமண வரவேற்பு விழாவில் அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், அன்பில் மகேஷ் பொய்யாமொழி பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்.

### அரிய மங்கலம் பகுதிக் கழகச் செயலாளர்

# ஏ.எம்.ஜி. விஜய்குமார் இல்ல மணவிழா வரவேற்பு!

## அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின் - அன்பில் மகேஷ் பொய்யாமொழி பங்கேற்பு!

திருச்சி, ஆக. 23 -

திருச்சி அரியமங்கலம் பகுதி தி.மு.க. செயலாளர் ஏ.எம்.ஜி. விஜய்குமார் ஆசிரியை ஜி. சாந்தி தம்பதியரின் மகன் வி.சூர்யாவுக் கும், தஞ்சாவூர் அருளா னந்த அம்மாள் நகர் பி செந்தில் வேலன் - எஸ். அமுதா செந்தில்வேலன் தம்பதியரின் மகள் எஸ். பிரசித்தாவுக்கும் பெற்றோர்களால் திருமணம் நிச்ச யக்கப்பட்டது. இவர்களின் திருமண வரவேற்பு விழா (திங்கட்கிழமை) திருச்சி மன்னார்புரம் வி.எஸ். எம்.மஹாலில் நடந்தது. திருச்சி தெற்கு மாவட்ட செயலாளரும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமை தாங்கி, மணமக்களை வாழ்த்தினார். மாநகர தி.மு.க. செயலாளர் மு. மதிவாணன் வரவேற்றார். திருச்சி கிழக்கு சட்டமன்ற தொகுதி எம்.எல்.ஏ. இனிகோ இருதயராஜ், மணப்பாறை சட்டமன்ற தொகுதி எம்.எல்.ஏ. அப்துல் சமது ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் தி.மு.க. இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம் பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி பேசினார். நிகழ்ச்சியில் திருச்சி எம்.பி திருநாவுக்கரசர், திருவாரூர் மாவட்ட செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ, தலைமை செயற்குழு உறுப்பினர் சாக்கோட்டை அன்பழகன் எம்.எல்.ஏ., வண்ணை அரங்கநாதன், கே.என். சேகரன், சபியுல்லா, கவிஞர் சல்மா, என் செந்தில், என். கோவிந்தராஜ், செங்குட்டுவன், மூக்கன் லீலாவேலு, குணசேகரன், நூர் ஜகான், சந்திரமோகன், செல்லையா, சரோஜினி, தமிழ்செல்வம், மற்றும் திருச்சி தெற்கு மாவட்ட பகுதி, ஒன்றிய, நகர செயலாளர்கள், மாவட்ட, மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், மாநகராட்சி கவுன்சிலர்கள், பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் ஏ.எம்.ஜி. விஜய்குமார் வரவேற்று நன்றி கூறினார்.

### சக மாணவர்களால் தாக்கப்பட்டு நெல்லை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும்

# அண்ணன் - தங்கையை கனிமொழி கருணாநிதி எம்.பி. நலம் விசாரித்தார்!

## அமைச்சர் மதிவேந்தன் பங்கேற்பு!

நெல்லை, ஆக. 23 -

நெல்லை மாவட்டம் நாங்குநேரி பகுதியில் சக மாணவர்களால் பாதிக்கப்பட்டு நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி பல்நோக்கு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் அண்ணன், தங்கையை கழக துணைப் பொதுச் செயலாளர் - தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி,வனத்துறை அமைச்சர் மதிவேந்தன் ஆகியோர் நேரில் சென்று பார்த்து அவர்களிடம் சிகிச்சை பற்றி கேட்டறிந்தும்,அவரது பெற்றோருக்கு ஆறுதலும் தெரிவித்தனர்.

நாங்குநேரி பகுதியில் சக மாணவர்கள் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் சிறுவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவுக்கிணங்க மருத்துவர்கள் மூலம் சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்கள் உத்தரவிற்கிணங்க நிதி மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு,சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு ஆகியோர் நேரில் சென்று 12.8.2023 அன்று நிதி உதவி வழங்கி ஆறுதல் கூறி னார்கள்.

மேலும் முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் இருந்து சிறப்பு மருத்துவர் மூலம் சிறுவர்களுக்கு சிறப்பான சிகிச்சையும் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி பல்நோக்கு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் அண்ணன்,தங்கையை கழக துணை பொதுச் செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி வனத்துறை அமைச்சர் மதிவேந்தன் ஆகியோர் நேரில் சென்று பார்த்து அவர்களுக்கு ஆறுதல் கூறினார்கள். தொடர்ந்து கனிமொழி எம்.பி அவர்களது குடும்பத்தினரிடம் முதலமைச்சர் அவர்கள் உத்தரவுக்கிணங்க சிறுவர்களுக்கு சிறப்பான சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.அரசு உறுதுணையாக இருக்கும். சிறுவர் குணமடைந்து வீடு திரும்பியதும் அவர்களது பள்ளி மற்றும் கல்லூரி படிப்பை தொடர்வதற்கும் உரிய நடவடிக்கையும் எடுக்கப்படும். முதல மைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு உறுதுணையாக இருக்கும் என்று கனிமொழி கருணாநிதி எம்.பி கூறினார்கள்.

பின்னர் கனிமொழி கருணாநிதி எம்.பி.மருத்துவக் கல்லூரி முதல்வர் ரேவதி மற்றும் மருத்துவர்களுடன் கலந்து ஆலோசித்து சிகிச்சை பற்றிய முழு விவரங்களையும் கேட்டறிந்தார்.

அப்போது நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ.மாவட்ட ஆட்சியர் மரு.கா.ப.கார்த்திகேயன் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், மேயர் சரவணன்,துணை மேயர் ராஜ், மாமன்ற உறுப்பினர் உலகநாதன் உள்பட பலர் சென்றனர்.


TAMIN

**தமிழ்நாடு கனிம நிறுவனம்**

எண்.31, காமராஜர் சாலை, சேப்பாக்கம், சென்னை-600005.
தொலைபேசி: 044-29862018, 28511972

**இ-ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம்**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | டாமின் நிறுவனத்திற்குட்பட்ட கொடைக்கல் 1193/1 (Part-15) (Ext:6.00.0 Ha) குவாரியில் உற்பத்தில் செய்யப்படும் கருப்பு கிரானைட் கற்துண்டங்கள் விற்பனை |
| 2 | ஒப்பந்தப்புள்ளி எண் / நாள்<br>ஒப்பந்தப்புள்ளி ID எண் | 1168/இஎக்ஸ்-1/2023, நாள்: 17.08.2023<br>2023_TNMIN_361647_1 |
| 3 | இ-ஒப்பந்தப்புள்ளி தளத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் | 18.09.2023 பிற்பகல் 4.00 மணி வரை |
| 4 | இ-ஒப்பந்தப்புள்ளி தளத்தில் தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் | 19.09.2023 பிற்பகல் 4.00 மணி |
| 5 | ஒப்பந்தப்புள்ளி படிவம் விலை & முன்வைப்புத் தொகை | ரூ.2,000/- அல்லது USD.25 (திருப்பித் தரத் தக்கதல்ல)<br>ரூ.5,90,000/- அல்லது USD.7200 |

குறிப்பு: மேலும் விவரங்களுக்கு Tamilnadu e-tendering portal: https://tntenders.gov.in / www.tamingranites.com இணையதளத்தினை பார்வையிடவும்

செ.ம.தொ.இ./4644/ஒப்பந்தப்புள்ளி/2023 "சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்" பொது மேலாளர் (நிதி)


### தி.மு.க. மருத்துவ அணி

# மாவட்டத் தலைவர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம்!

## மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக மருத்துவ அணியின் மாவட்டத் தலைவர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்கள் அறிமுகக்கூட்டம் 26.08.2023 சனிக்கிழமை காலை 9.00 மணி அளவில் சென்னை தியாகராயர் நகரில் உள்ள 'தி அக்கார்ட் மெட்ரோபாலிடன்' விடுதியில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக மருத்துவ அணியின் மாநில நிர்வாகிகள், மாவட்டத் தலைவர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்: 1. நிர்வாகிகள் அறிமுகம் 2. கலைஞர் நூற்றாண்டு விழா 3. கழக ஆக்கப்பணிகள் மற்றும் அணியின் வளர்ச்சிப் பணிகள்

அண்ணா அறிவாலயம்
சென்னை 18
நாள் 21.08.2023

மருத்துவர் **நா.எழிலன்** எம்.எல்.ஏ.
செயலாளர் - தி.மு.க. மருத்துவ அணி



நீட் தேர்வை திணிக்கும் ஒன்றிய அரசு மற்றும் ஆளுநரை கண்டித்து தி.மு.கழக இளைஞர் அணி, மாணவர் அணி , மருத்துவ அணி சார்பில் கரூர் தலைமை அஞ்சலகம் முன்பு மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.



புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், நகரப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர்.எஸ்.ரகுபதி 16.08.2023 அன்று வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.எம்.மஞ்சுளா, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் குழந்தைசாமி, பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் அ.முத்து, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை... 5 ஆம் பக்கத் தொடர்ச்சி

கிண்டர்பெர்க் என்கின்ற ஒரு அமெரிக்க நிறுவனம் ஒரு ஆய்வறிக்கை வெளியிட்டாங்க. எப்படி இந்த அதானி என்ற நிறுவனம், கடந்த 9 வருடத்தில் இவ்வளவு பெரிய வளர்ச்சி அடைந்தது என்று விளக்க வேண்டும் என்று. இதுவரைக்கும் ஒருத்தர்கூட வாய் திறக்கவில்லை. அதை நம்முடைய சகோதரர் ராகுல்காந்தி அவர்கள் நாடாளுமன்றத்திலே ஆதாரத்தோடு காட்டினார்.

என்ன ஆதாரம் மோடி அவர்களும், அதானி அவர்களும் ஒரே விமானத்தில் பயணம் செய்கிறார்கள். யார் இவர் என்று நாடாளுமன்றத்தில் கேட்டார்கள். அதற்கு எந்தப் பதிலும் இல்லை.

அதற்குப் பதிலாக என்ன பண்ணினார்கள்?

ராகுல்காந்தி அவர்களுடைய பதவியைத் தகுதி நீக்கம் செய்தார்கள்.

ஆனால், ராகுல்காந்தி அவர்கள் உச்சநீதிமன்றத்தில் தடை வாங்கிவிட்டார்.

நமக்குக் கிடைத்திருக்ககூடிய முதல் வெற்றி. ராகுல்காந்தி அவர்கள் நாடாளுமன்றத்தில் நுழைந்திருக்கின்றார். நான் சொன்னேன், திராவிட மாடல் அரசுக்கும், ஆரிய மாடல் அரசு சனாதான அரசுக்குமான வித்தியாசம், மணிப்பூர் பற்றி எரிகின்றது அதைப்பற்றி யாருமே வாய் திறக்கவில்லை.

நம்முடைய தலைவர் முதலமைச்சர் அவர்கள் என்னை அழைத்து என்னிடம் சொன்னார்கள். அங்கு இருக்கக்கூடிய விளையாட்டுவீரர்கள், மணிப்பூரில் இருக்கக்கூடிய விளையாட்டு வீரர்கள்.

அவர்களெல்லாம் அங்கு பயிற்சி எடுக்க முடியாத நிலை உள்ளது. அவர்களுக்கு அழைப்பு விடுங்கள். நம் மாநிலத்துக்கு அவர்களை அழைத்து வந்து அவர்களுக்கு நம்ம மாநிலத்தில் பயிற்சி கொடுங்கள் என்று.

இப்போது 19 விளையாட்டு வீரர்கள் கடந்த ஒரு வாரமாகப் பயிற்சி எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

இதுதான் திராவிட மாடலுக்கும், ஆரிய மாடலுக்கும் உள்ள வித்தியாசம், இதை நீங்கள் உணரவேண்டும். இதையெல்லாம்விட மிக மிக முக்கியமான விஷயம், கலைஞருடைய நூற்றாண்டில் இந்த மாநாடு நடக்கப் போகிறது.

இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு. இதில் நீங்கள் கலந்துகொண்டு எப்படி இந்த உணர்வோடு இங்கு வந்திருக்கின்றீர்களோ, உணர்ச்சி பெற்றிருக்கிறீர்களோ, இதே உணர்வோடு, இதே உணர்ச்சியோடு, இதே எழுச்சியோடு நீங்கள் அத்தனைபேரும் அந்த மாநாட்டிலே கலந்துகொண்டு மிகப் பெரிய வெற்றி மாநாடாக அதை நீங்கள் மாற்றிக் காட்ட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இன்னொரு வேண்டுகோள், சமீபத்தில் கடந்த 4, 5 நாட்களாக தமிழ்நாட்டிலே என்ன நடந்துக்கொண்டிருக்கிறது என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

பத்திரிக்கையில் படித்திருப்பீர்கள். கடந்த ஆறு ஆண்டுகளில் நீட் தேர்வுக்கு மட்டும் 21 குழந்தைகளை இழந்திருக்கின்றோம். 21 மாணவர்கள் தற்கொலை செய்திருக்கின்றனர். நீட் தேர்வில் தோல்வியடைந்து, நீட் தேர்வு எங்களுக்கு வேண்டாம் என்று தங்களின் மரணத்தால் பதிவு செய்திருக்கிறார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான், கிராமத்திலிருந்து ஏழை, எளிய மாணவ, மாணவிகள் மருத்துவர் ஆக வேண்டும் என்று நுழைவுத் தேர்வை ரத்து செய்தவர்.

நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா இருந்தபோது கூட தமிழ்நாட்டிற்குள் நீட் தேர்வு நுழைய முடியவில்லை.

இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் நீட் தேர்வு நுழைந்து விட்டது. ஆனால், தமிழ்நாட்டிற்கு மட்டும் விலக்கு வாங்கி வைத்திருந்தோம். ஆனால், அந்த அம்மாவை இழந்த பிறகு, இந்த அடிமை அ.தி.மு.க கூட்டம் நீட் தேர்வை மீண்டும் உள்ளே நுழைத்து, வருடம் இரண்டு குழந்தை, மூன்று குழந்தைகள் மரணம்.

அனிதாவில் ஆரம்பித்து, இப்போது சென்னை குரோம்பேட்டை ஜெகதீஷ் வரை தொடர்கிறது. இந்த முறை ஜெகதீஷினுடைய அப்பாவும் தற்கொலை செய்துக் கொண்டார்.

பையனுடைய மருத்துவக் கனவை நிறைவேற்ற முடியவில்லை யென்று.

இன்றைக்கு பா.ஜ.க.வினுடைய ஒரு தலைவர் பேட்டி கொடுக்கிறார். என்ன பேட்டி தெரியுமா கொடுத்திருக்கிறார்.

இந்த மாதிரி பொதுத்தேர்வில் ரிசல்ட் வந்ததுக்குப் பிறகு மாணவர்கள் தற்கொலை செய்து கொள்வது மிக, மிக ஒரு சாதாரணமான விஷயம். இதையெல்லாம் நாம் அப்படியே கடந்து போய்விட வேண்டுமென்று.

கொஞ்சமாகிலும் மனசாட்சி இருந்தால், இப்படியெல்லாம் யாராவது பேசுவார்களா?. அதுமட்டுமல்ல, உங்கள் வீட்டு குழந்தை இறந்தால் நீங்கள் ஒத்துக்கொள்வீர்களா?

நான் அவரைப் பார்த்துக் கேட்கிறேன் மருத்துவக் கனவு, அனிதா என்ற மாணவி 1200 மார்க்குக்கு 1172 மார்க் எடுத்தாங்க, சகோதரி அனிதா உயிரோடு இருந்திருந்தால், இன்று மருத்துவர். டாக்டர் அனிதா. அதைத் தடுத்தது யார்? இந்த ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசும், அதற்குத் துணை போன அ.தி.மு.க அரசும்தான்.

அதைக் கண்டித்து தி.மு.க. இளைஞர் அணி, மருத்துவ அணி, மாணவர் அணி மிகப்பெரிய ஒரு உண்ணாவிரத அறப்போராட்டத்தை அறிவித்தது. அந்த நீட் தேர்வு ரத்தாகும் வரை நம்முடைய சட்டப் போராட்டமும், அறவழிப்போராட்டமும் தொடரும் என்று கூறிக்கொள்கின்றேன்.

இந்த வாய்ப்பை அளித்த சுந்தர் அவர்களுக்கும், வருகை தந்த இளைஞர் அணி சகோதரர்கள் உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய வாழ்த்துக்களையும் நன்றியையும் கூறி விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் - இதுவரை 1.63 கோடி விண்ணப்பங்கள்!

சென்னை, ஆக. 22

'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் இதுவரை 1.63 கோடி விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது. என அரசு அறிவித்துள்ளது.

பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ்வதற்கு வழிவகுக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் முகாம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 24.7.2023 அன்று தருமபுரி மாவட்டம், தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் தொடங்கி வைக்கப்பட்டு விண்ணப்பப் பதிவு முகாம்கள் இரண்டு கட்டங்களாகவும் மற்றும் விடுபட்டவர் களுக் கான சிறப்பு முகாம்களும் தொடர்ந்து நடத்தப்பட்டு 20.08.2023 அன்றுடன் விண்ணப்பங்கள் பதியும் பணி நிறைவடைந்தது.

முதற்கட்ட முகாம்கள் ஜூலை 24 ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 04 ஆம் தேதி வரை நடைபெற்றது. இரண்டாம் கட்ட முகாம்கள் ஆகஸ்ட் 05 ஆம் தேதி முதல் 14 ஆம் தேதி வரை நடைபெற்றது. விடுபட்டவர்களுக்கான சிறப்பு முகாம்கள் ஆகஸ்ட் 18, 19 மற்றும் 20 ஆம் தேதிகளில் நடத்தப்பட்டு மொத்தமாக 1.63 கோடி விண்ணப்பங்கள் பெறப்பட்டு கைபேசி செயலி வழியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.



விழுப்புரம் வடக்கு மாவட்டம்செஞ்சியில் நடைபெற்றமுத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு பிறந்த நாள் விழாபட்டிமன்ற நிகழ்ச்சியை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். பட்டிமன்றநிகழ்ச்சியில் அரசு தலைமை கொறடா கோவி. செழியன்நடுவராக பங்கேற்றார்.



ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 32ல் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.175.00 இலட்சம் மதிப்பீட்டில் சூரம்பட்டி மண்டல அலுவலகம் அருகில் கோவலன் வீதியில் தார் சாலை அமைக்கும் பணியினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ், மாநகராட்சி ஆணையர் ஜானகி, மாநகராட்சி மண்டல குழு தலைவர்கள் ப.க.பழனிசாமி, சுப்பிரமணியம், சசிகுமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## திருவள்ளூரில் கலைஞர் நூற்றாண்டு விழா!

திருவள்ளூர், ஆக. 23 -

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் அரசின் தொடர் சாதனை விளக்கம் மற்றும் வருகின்ற நாடாளுமன்ற தேர்தல் யொட்டி INDIA வுக்குக்கான தேர்தல் பரப்புரை திண்ணைப் பிரச்சாரக் கூட்டம் பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியம் 4 இடங்களில் ஒன்றிய கழகச் செயலாளர் பள்ளிப்பட்டு சி.ஜெ.சீனி வாசன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் பேச்சாளர் ஈரோடு இறைவன் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். அருகில் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், கிளை பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# வேராய் விழுதாய் நிற்கும் முதல்வரும் சின்னவரும்!

என் இனிய தமிழ் சொந்தங்களே.......! உங்கள் சட்டங்கள் என்ன பட்டங்களா நூலை நம்பி பறக்க விட? நமது மாநில மாணவ மாணவியர் பகுத்தறிவு வளர்ச்சி பெற்றவர்கள். அவர்களுக்கு நீட் என்ற தூக்கு கயிறு எதற்காக?

ஒரு அப்துல் கலாமை உருவாக்கிய தமிழகம் மேலும் பல கலாம் களை உருவாக்கி விடுவார்களோ என்ற பயத்தினால் நூல்கள் அமைக்கின்ற தடை வேலியா இது? நாம் நூல் வேலிகளை அறுத்தெறிந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. மீண்டும் அவை உருமாறி வரும் நோக்கத்தை புரிந்து கொள்ள முடியாதவர்களா திராவிடத் தமிழர்கள்?

பணிவுக்கும் துணிவுக்கும் வித்தியாசம் தெரிந்தவர்கள். வற்புக்கும் பிடிவாதத்துக்கும் உள்ள வேற்றுமையை உணர்ந்தவர்கள். தேசப்பற்று எம்மிடம் நிரம்ப உண்டு. ஆனால் உங்கள் பிடிவாதங்கள் சட்ட வடிவிலே வந்து நமது மக்களை வதைக்கு மேயானால் ....எமது மக்களுக்காக அதனை உடைத்தெறிய தெரிந்தவர்கள் நாங்கள். நாளைய தமிழகமே நமது மாணவ மணிகள் தான். அவர்கள் வாழ்வை இருட்டாக்கி...கோலற்ற குருடர்களாய் நமது மாணவ சமுதாயத்தை தடுமாற வைப்பதே உங்கள் சட்டத்தின் நோக்கமாக தெரிகிறது...!

இன்றைய நமது வாழ்வு முழுவதும் அழிக்கப்பட்டாலும்.....நாளைய நமது மாநிலம் ஒளியிழந்து நிற்பதை ஒருபோதும் நாம் பொறுக்க மாட்டோம். நீதிக்கு போராடும் பரம்பரை நமது பரம்பரை. மன்னவனின் தீர்ப்பால் கணவனை இழந்த கண்ணகி கதறி அழுது.....வெள்ளை புடவை கட்டி மூலையிலே முடங்கி விடவில்லை!

சட்டம் செய்த தவறினை அரச சபையிலே சுட்டிக்காட்டி....தரையிலே அவன் செங்கோல் உருண்டு விழ...அதை சுமந்த மன்னனோ தன் உயிரை விட.......மதுரையை எரித்து விட்டுப் போன கற்புக்கரசி கண்ணகி வழி வந்த இனம் நமது திராவிட இனம்.

எத்தனை மாணவ , மாணவியர் உயிரை பலி கொடுத்தார்கள் உங்கள் நீட் சட்டத்துக்காக. அதைப் பார்த்த பின்னால் ஆவது வருந்தி திருந்தி நீட் சட்டத்தை ஒன்றிய அரசு வாபஸ் பெறும் என நம்பினோம். அது நடக்கவில்லை. அப்போதுதான் எமது மக்கள் புரிந்து கொண்டார்கள் உங்கள் சட்டங்களின் நோக்கம் மக்களுக்காக அல்ல! உங்கள் சர்வாதிகார ஆட்சியை நிலை நிறுத்த! நம் தேசத்தின் ஜனநாயக வேரை அறுக்க,! நடக்காது. ஒருபோதும் அது நடக்க விடமாட்டோம். எங்கள் நாடு தமிழ்நாடு! அதில் எல்லா சுதந்திரங்களும் இருந்தால் மட்டுமே நமது நாடு இந்திய நாடு என்று சொல்லுவோம்! ஆட்சியும் அரசியலும் மக்களுக்காக நாம் நடத்துகின்ற காட்சிதான். அதுவல்ல நமது லட்சியம். பதவிகளை பார்த்து பல் இளிப்பவர்கள் அல்ல நாங்கள். மக்களுக்கோ ...மாணவர்களுக்கோ .....இந்தப் பதவியால் பயனில்லை என்றால்... அது தேவையில்லை என நினைப்பவர்கள் திராவிட தமிழர்கள்.

இதனை நன்கு உணர்ந்து கொண்ட மற்ற மாநில மக்களும் நம்மோடு கைகோர்க்கத் துணிந்து விட்டார்கள். சன்மார்க்க அரசியலையும் மதவெறி தூண்டுதலையும் மொழி திணிப்பையும் ஜனநாயக விரோத சட்டங்களையும் எதிர்ப்பதற்கு திராவிட அரசியலே சரியான வழி என்பதை அவர்களும் புரிந்து கொண்டார்கள். நமது ஆட்டுத்தாடி ஆளுநரின் குள்ளநரி வேலைகளும் தவறானவை என்பதை அவர்களே பேசுகிறார்கள். அதனால் உருவானதே மகத்தான இந்திய அணி.

இதுவே ஏக இந்திய சட்டங்களுக்கு எதிரான சாவு மணி. மக்களுக்கும் தேசத்துக்கும். ஜனநாயகத்துக்கும் உதவாத இன்றைய அரசை மூட்டை முடிச்சோடு அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் வீட்டுக்கு அனுப்பி வைப்பதே இந்திய அணியின் முதல் பணி.! அதற்கு வேராய் விழுதாய் நிற்கிறார்கள் நமது முதல்வரும் சின்னவரும்!

ஒட்டு மொத்த இந்திய தேசமும் போற்றிக் கொண்டாடிய பழுத்த முதிர்ச்சி பெற்ற நமது முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களிடம் குருகுல வாசம் பெற்றவர்கள் இவர்கள். பெரியாரின் பேரனும் கொள்ளு பேரனும் ஆவார்கள். அண்ணாவின் ஆற்றலை போற்றி வளர்ந்தவர்கள். தமிழக மக்களின் பூரண அன்பையும் ஆசிகளையும் பெற்றவர்கள். கடமை கண்ணியம் கட்டுப்பாடு கற்றவர்கள்.

ஆனாலும் போர்குணம் கொண்டவர்கள். வீரமும் விவேகமும் இணைய பெற்றவர்கள். சொல்லை செயலாக்க தெரிந்தவர்கள். இவர்களின் வழிகாட்டுதலோடு இந்திய அணி இந்தியாவை ஆளப்போவது உறுதி!



வி.செ.குகநாதன்
திரைப்பட இயக்குநர்

திருவேற்காடு

# தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் - ரூ.25 கோடி மதிப்பில் திருப்பணிகள்!

## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை, ஆக.23 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (21.7.2023) திருவள்ளூர் மாவட்டம், திருவேற் காடு, தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் கருவறை, அர்த்த மண்டபம், முக மண்டபம், மகா மண்டபம் ஆகியவற்றின் கருங்கல் கட்டுமானத் திருப்பணி, அனைத்து உபசன்னதிகள் மற்றும் பிரகாரங்களின் திருப்பணியைத் தொடங்கி வைத்தார்.

பின்னர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

திருவேற்காடு, தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், கருங்கல் கட்டுமான திருப்பணி, தரை நிலையை உயர்த்துதல், உட் பிரகாரம் மற்றும் வெளிப்பிரகாரங்களிலுள்ள அனைத்து உபசன்னதிகளுக்கும் திருப்பணி செய்திட ரூ.25 கோடி மதிப்பீட்டில் பணிகள் இன்று தொடங்கி வைக்கப்பட்டிருகின்றது. இதில் திருக்கோயில் நிதியிலிருந்து ரூ.5 கோடி மதிப்பீட்டிலும், உபயதாரர் நிதியிலி ருந்து ரூ.2.5 கோடி மதிப்பீட்டிலும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இதோடு 25 உபசன்னதிகளுக்கு ரூ.17.50 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் செய்யப்படவுள்ளன.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின் முதல் 10 திருக்கோயில்களில் பெருந்திட்ட வரைவு (Master Plan) வாயிலாக திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ.300 கோடி மதிப்பீட்டிலும், பெரியபாளையம், பவானியம்மன் திருக்கோயிலில் ரூ.170 கோடி மதிப்பீட்டிலும், பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் ரூ.99 கோடி மதிப்பீட்டிலும், திருத்தணி, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ.103 கோடி மதிப்பீட்டிலும், இராமேஸ்வரம், இராமநாத சுவாமி திருக்கோயிலில் ரூ.159 கோடி மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை, அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.78 கோடி மதிப்பீட்டிலும், சமயபுரம் மாரியம்மன் திருக்கோயிலில் ரூ.64 கோடி மதிப்பீட்டிலும், வடலூர் அருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையம் ரூ.99.90 கோடி மதிப்பீட்டிலும், திருவேற்காடு, தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் ஒட்டுமொத்தமாக ரூ.80 கோடி மதிப்பீட்டிலும், இருக்கன்குடி, மாரியம்மன் திருக்கோயிலில் ரூ.70 கோடி மதிப்பீட்டிலும் என 10 திருக்கோயில்களுக்கு பெருந்திட்ட வரைவு பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் நடப்பாண்டில் வயலூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், மேல் மலையனூர், அங்காளம்மன் திருக்கோயில், அழகர்கோயில், கள்ளழகர் திருக்கோயில், மருதமலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், சிறுவாபுரி, பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் என 5 திருக்கோயில்களுக்கு ரூ.200 கோடி மதிப்பீட்டிலும் பெருந்திட்ட வரைவு மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

நாகப்பட்டினம் மாவட்டம், துளசியாபட்டினத்தில் தமிழ் மூதாட்டி ஔவையாருக்கு மணிமண்டபமும், மயிலாப்பூரில் திருவள்ளுவருக்கு திருக்கோயிலும், கலாச்சார மையமும், சோளிங்கரில் மனநல காப்பகமும் ரூ.65 கோடி மதிப்பீட்டிலும் ஏற்படுத்தப் பட இருக்கின்றது.

அதேபோல் கொளத்தூரில் சோமநாத சுவாமி திருக்கோயில், பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், திருநெல்வேலி, காந்திமதி அருள்தரும் நெல்லையப்பர் திருக்கோயில் என 3 திருக்கோயில்கள் சார்பில் ரூ.30 கோடி மதிப்பீட்டில் மூத்த குடிமக்களுக்கு காப்பகங்கள் ஏற்படுத்தி இருக்கின்றோம்.

இப்படி இந்து சமய அறநிலைத்துறையில் திருப்பணிகள் ஒருபுறமும், மூத்த குடிமக்களை பாதுகாக்கின்ற பணிகள் மறுபுறமும், கலாச்சார மையங்கள், பண்பாட்டுச் சின்னங்களை பாதுகாக்கின்ற நோக்கத்தோடு ரூ.1400 கோடி செலவில் 23 பணிகளை எடுத்து இந்து சமய அறநிலையத்துறை நிறைவேற்றுவதற்கு உண்டான அனைத்துப் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. இப்பணிகளுக்கு பெருந்துணையாய் இருக்கின்ற அரசு உயர் அலுவலர்களுக்கும், அறங்காவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நீட் தேர்வினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக கருணையைக் காட்டுகின்றவராகவும், நீட் தேர்விற்குத் தடை விதிக்க வேண்டும் என்ற உறுதியோடு துணிந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அ.தி.மு.க. மாநாடு என்பது கூடினார்கள், பேசினார்கள், கலைந்தார்கள் அவ்வளவுதான்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் என்.கே.மூர்த்தி, இணை ஆணையர் திருமதி ஐ.முல்லை, அறங்காவலர் குழு உறுப்பினர்கள் பி.ஏ.சந்திரசேகர ரெட்டி, ப.கோவிந்தசாமி, திருமதி வளர்மதி, பா.சாந்தகுமார் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## கூட்டாட்சித் தத்துவத்தை ஒன்றிய அரசு சிதைக்க வேண்டாம்!

# மாநிலப் பட்டியலில் கல்வி இணைக்கப்பட வேண்டும்!

## "தினத்தந்தி" நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!




சென்னை, ஆக. 22 -

முதல்வரின் சுதந்திர தின உரையில் குறிப்பிட்ட படி மக்களுக்கு நேரடி தொடர்புடைய துறைகள் அனைத்தும் மாநில பட்டியலில் இணைக்கப்பட வேண்டும். கூட்டாட்சி தத்துவத்தை சிதைக்க வேண்டாம் என பா.ஜ.க. ஒன்றிய அரசுக்கு அறிவுறுத்தினார்.

இதுகுறித்து "தினத்தந்தி" நாளேடு முதல்வரின் கருத்துக்கு ஆதரவு அளித்து வலியுறுத்தியுள்ளது.

அது வருமாறு:

1976ம் ஆண்டு முதல், தமிழ்நாடு உள்பட பல மாநிலங்கள் விடுத்துவரும் கோரிக்கைக்கு, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் சுதந்திர தினத்தன்று கடும் அழுத்தம் கொடுத்துள்ளார். ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து இந்தியா சுதந்திரம் அடைந்தபோது, நமக்கென ஒரு அரசியல் சட்டத்தை மேதைகள் வடிவமைத்தனர். இந்தியா ஒரு கூட்டாட்சி கொண்ட ஜனநாயக நாடு என்ற வகையில், மத்தியில் பிரதமர் தலைமையில் மத்திய அரசாங்கமும், மாநிலங்களில் முதல் அமைச்சர்கள் தலைமையில் மாநில அரசும் இயங்கும் வகையில், இந்திய ஜனநாயகம் உருவாக்கப்பட்டது.

அப்போது, மாநில அரசாங்க கட்டுப்பாட்டில் இருக்கும்துறைகள் மாநில பட்டியலிலும், மத்திய அரசாங்க கட்டுப்பாட்டில் இருக்கும் துறைகள் மத்திய பட்டியலிலும், மத்தியமாநில அரசுகளின் கூட்டு கட்டுப்பாட்டில் இருக்கும் துறைகள் பொது பட்டியலிலும் இருக்கும் வகையில் பிரித்து, அரசியல் சட்டத்திலேயே அட்டவணைப்படுத்தப்பட்டன. அந்த வகையில், கல்வி மாநில பட்டியலில் இருக்குமாறு அரசியல் சட்டத்தில் தெளிவாக கூறப்பட்டி ருந்தது. இந்தியா மொழிவாரி மாநிலங்களாக பிரிக்கப்பட்டு இருந்த நிலையில், ஒவ்வொரு மாநிலத்துக்கும் தனி மொழி, கலாச்சாரம், பண்பாடு என்று வித்தியாச மான நிலை இருப்பதை கருத்தில் கொண்டு, கல்வி மாநில பட்டியலில் சேர்க்கப்பட்டது. அந்த வகையில், கல்வி மாநில பட்டியலில் இருந்த போது வகுக்கப்பட்ட பாடத்திட்டத்தில் படித்த பலர், அனைத்து துறைகளிலும் பிரகாசி த்தார்கள்.

இவ்வாறு மாநில பட்டியலில் கல்வி சரியான பாதையில் சென்று கொண்டிருந்தபோது, 1976ம் ஆண்டில் நெருக்கடி நிலை பிரகடனப் படுத்தப்பட்ட நேரத்தில், இந்திராகாந்தி தலைமையில் இருந்த மத்திய அரசாங்கம், மாநில பட்டியலில் இருந்த கல்வி, வனம், வன உயிரினங்கள், பறவைகள் பாதுகாப்பு, நீதி பரிபாலனம், எடைகள் மற்றும் அளவுகள் ஆகிய துறைகளை அரசியல் சட்டத்தில் உள்ள 7வது அட்டவணையில் இருக்கும் பொது பட்டியலுக்கு மாற்றியது. இதன் மூலம் கல்வி மத்தியமாநில அரசுகள் கைகளுக்கு போனது. தி.மு.க., அ.தி.மு.க. இரு கட்சிகளுமே இதற்கு பலத்த எதிர்ப்புகளை தெரிவித்தன. ஆனால், இதுவரை இந்த கோரிக்கைகளுக்கு எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இப்போது, 'நீட்' தேர்வால் பல மாணவர்கள் உயிரிழந்து கொண்டிருக்கும் சூழ்நிலை யில், கல்வி மாநில பட்டியலில் இருந்திருந்தால் 'நீட்' தேர்வே வந்து இருக்காது. அல்லது ரத்து செய்யப்பட்டிருக்கும். இந்த நிலையில், சுதந்திர தினத்தன்று தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றிய முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின், "மக்களுக்கு நேரடி தொடர்பு கொண்ட அனைத்தும் மாநில பட்டியலில் இணைக்கப்படவேண்டும். குறிப்பாக, கல்வி மாநில பட்டியலுக்கு மாற்றப்படவேண்டும். அதைச் செய்தால்தான் 'நீட்' போன்ற கொடூரமான தேர்வு முறையை முற்றிலுமாக அகற்ற முடியும்" என்று பேசினார். இது நியாயமான கோரிக்கை. ஒவ்வொரு ஆண்டு பட்ஜெட்டிலும், மாநில அரசு கல்விக்குத்தான் அதிக நிதியை உருவாக்கும் நிலையில், கல்வி சம்பந்தமான அனைத்து முடிவுகளையும் எடுக்கும் உரிமை, மாநில அரசுகளுக்கு இருக்கவேண்டும் என்றால், கல்வி மாநில பட்டியலுக்கு மாற்றப்படுவதே சரியானதாக இருக்க முடியும்.

எனவே, நெருக்கடிநிலை நேரத்தில் எடுக்கப்பட்ட எத்தனையோ முடிவுகளை விமர்சனம் செய்து வரும் பா.ஜ.க அரசு, அப்போது மாநிலப்பட்டியலில் இருந்து பொது பட்டியலுக்கு மாற்றப்பட்ட முடிவை மறுபரிசீலனை செய்து, மீண்டும் மாநில பட்டியலுக்கே கொண்டுவர வேண்டும் என்பது கூட்டாட்சி தத்துவத்தில் நம்பிக்கை கொண்டவர்களின் கோரிக்கையாக இருக்கிறது.

இவ்வாறு "தினத்தந்தி" கருத்து தெரிவித்துள்ளது.



திருவாரூரில் மாவட்ட ச்செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற ஒன்றிய அரசின் நீட் தேர்வுக்கு எதிரான உண்ணாவிரத அறப்போராட்டத்தை தமிழ்நாடு அரசின் தொழில்முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா துவாக்கிவைத்து கண்டன உரையாற்றினார். இதழியலாளர் கொக்கரக்கோ சௌமியன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் நா.இளையராஜா,.மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ. எஸ்.குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அமுதா. ஆர்.சந்திரசேகர், மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர் ஆர்.வெங்காட்ராமன், மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்களம் ஜி.பாலு,சேகர் கலியபெருமாள், ஒன்றியக்குழு தலைவர் புலிவலம் ஏ. தேவா, நகர செயலாளர் வாரை.பிரகாஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.

## சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் சார்பில்

# குத்தம்பாக்கம் புதிய பேருந்து முனையத்தில் நடைபெறும் பல்வேறு பணிகள்!

## அமைச்சர் - சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவர் பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, ஆக. 23 -

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (21.08.2023) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் குத்தம்பாக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய பேருந்து முனையத்தில் நடைபெற்றுவரும் பல்வேறு பணிகள் குறித்தும் மற்றும் பேருந்து முனையத்தின் இதர பணிகளான மழைநீர் வடிகால் அமைப்பு, பேருந்து முனையத்தில் முழுவதும் குளிரூட்டப்படும் (Fully Airconditioned) பணிகள் குறித்தும், சென்னை - பெங்களூர் நெடுஞ்சாலையிலிருந்து பேருந்து நிலையத்திற்குச் செல்லும் அணுகு சாலை அமைப்பது குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், இப்பேருந்து முனையத்தில் மாநகரப் பேருந்துகள் நிறுத்தம், புறநகர் பேருந்துகள் நிறுத்தம், பேருந்துகளைப் பராமரிப்பதற்கான பணிமனை, தனியார் பேருந்துகள் நிறுத்தம், இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கான இடம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், துணை மின் நிலையம், மருத்துவ மையம், குழந்தைகளுக்கான பாலூட்டும் அறை, தானியங்கி பணப்பொறி (ATM), பொருள் பாதுகாப்பு அறை, தீயணைப்பு கட்டுப்பாட்டு அறை, காவல் நிலையம், கடைகள் மற்றும் கழிவறைகள் போன்ற வசதிகள் அமைக்கப்படுவதைக் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து, கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தினை நவீனமயமாக்கும் பணிகள் தொடர்பாக தற்போது நடைபெற்று வரும் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்துதல், வளாகத்திலுள்ள சாலைகளைச் சீரமைத்து சுத்தப்படுத்துதல், வளாகத்திற்கு வரும் மக்களின் அடிப்படைத் தேவைகளை மறுசீரமைத்தல் மற்றும் இவ்வளாகத்தில் அமையவுள்ள பூங்கா பணிகள் குறித்து விரிவாக ஆய்வு நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மணிப்பூருக்கு தீ மூட்டிய பா.ஜ.க.!

## சீத்தாராம் யெச்சூரியிடம் இம்பால் பேராயர் வேதனை !

இம்பால், ஆக. 23 -

பிரச்சினைகளை தீர்க்க வேண்டியவர்களே மணிப்பூரில் தீ மூட்டினார்கள் என்று இம்பால் பேராயர் டொமினிக் லுமோன் வேதனையுடன் கூறினார். பேராயர் மாளிகையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீத்தாராம் யெச்சூரியுடனான சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார். மேலும் கூறுகையில், "ஒவ்வொரு இனக் குழுவிற்கும் அதன் சொந்த கவலைகளும் அச்சங்களும் உள்ளன. இதையெல்லாம் அரசு பேசித் தீர்க்க வேண்டும். மாறாக ஒன்றிய, மாநில அரசுகளின் அணுகுமுறை மோதலை மூட்டியுள்ளது" என்றார் பேராயர்.

"கலவரத்தில் கத்தோலிக்க திருச் சபைக்கு ஏற்பட்ட இழப்பு கணக்கிட முடி யாதது. மணிப்பூர் மாநிலத்தில் தேவாலயத்தால் நடத்தப்படும் பள்ளிகளில் 60,000க்கும் மேற்பட்ட குழந்தைகள் படிக்கின்றனர். தேவாலயங்களுடன் இணைக்கப்பட்ட பல பள்ளிகள் முற்றிலும் அழிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான மக்களின் கல்வி இடைநிறுத்தப் பட்டுள் ளது.

இது தவிர நிதி இழப்பு மற்றும் வேலை இழப்பு. தேவாலயத்தின் சொத்துக்கள் 50 கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளது. அரசாங்கப் பிரதி நிதிகள் இன்னும் திரும்பிக் கூட பார்க்கவில்லை" என்று பேராயர் கூறினார்.





திருப்பூர் ரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா சிலை முன்பு திருப்பூர் மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில், தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், கழக மாணவர் அணி துணைச் செயலாளர் வீரமணி, மாநகர கழக செயலாளர்கள் டிகேடி மு.நாகராசன், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாவட்ட அமைப்பாளர்கள் இளைஞர் அணி ஈ.தங்கராஜ், மு.ஜெயக்குமார், மருத்துவர் அணி மருத்துவர் கோபு, மருத்துவர் பாலசுப்பிரமணியம், மாணவர் அணி து.கோபிநாத், குகன் ஆகியோர் முன்னிலையில் நீட் தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசையும், அதற்கு துணை போகும் ஆளுநரையும் கண்டித்து, பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்ட உண்ணாவிரத அறப்போராட்டத்தை ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் கயல்விழி செல்வராஜ் பழரசம் கொடுத்து முடித்து வைத்தார். இதில் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



கலைஞர் நூற்றாண்டு சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகம்
கலைஞர் 100 1924 - 2023
தளபதி மு.க.ஸ்டாலின்
அறிவாலயம்
திறப்பு விழா
நாள் : 23.08.2023 – புதன்கிழமை
இடம் : வாழப்பாடி.
மாண்புமிகு. தமிழ்நாடு முதலமைச்சர்
கழக தலைவர் அவர்கள்
கழக பொதுச்செயலாளர் மாண்புமிகு. துரைமுருகன் அவர்கள்
கழக இளைஞர் அணி செயலாளர், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்
கழக பொருளாளர் அவர்கள் மற்றும் துணை பொதுச் செயலாளர்கள்
ஆகியோரின் நல்வாழ்த்துகளோடு
திறந்து வைப்பதற்கு வருகைத் தரும்
கழக முதன்மை செயலாளர் மாண்புமிகு நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களையும்
திறப்புவிழாவிற்கு தலைமையேற்கும் சேலம் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அவர்களையும்
மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளை கழக நிர்வாகிகள் அனைவரையும் வருக! வருக! என அன்புடன் வரவேற்கும் ...
தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம்
சேலம் கிழக்கு மாவட்ட தி மு க
... அன்புடன் ...
திருமதி.S.வெண்ணிலாசேகர்
வீரபாண்டி ஒன்றிய கழக செயலாளர்
வீரபாண்டி, சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க

கடலூர் மாவட்டம் – சாலை விபத்தில்

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக.23–

**கடலூர் மாவட்டத்தில் சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறியுள்ளார். அவர்களின் குடும்பத்தினருக்கு நிதியுதவி அறிவித்துள்ளார்.**

முதல்வர் அவர்கள், நேற்று முன்தினம் விடுத்த அறிவிப்பு வருமாறு:-

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், இராசாக்குப்பம் மதுரா, ரோட்டான்டிக்குப்பம் கிராமம், விருத்தாசலம் - கடலூர் தேசிய நெடுஞ்சாலையின் புறவழிச்சாலை அருகே 21.8.2023 அன்று மதியம் கடலூரிலிருந்து விருத்தாசலம் நோக்கி சென்ற தனியார் பேருந்தும், வடலூரிலிருந்து குறிஞ்சிப்பாடி நோக்கி வந்த காரும் எதிர்பாராத விதமாக மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. மேலும், விபத்து நடந்த நேரத்தில் அவ்வழியாக வடலூரிலிருந்து குறிஞ்சிப்பாடிக்குச் சென்ற இருசக்கர வாகனத்தின் மீதும் பேருந்து மோதியுள்ளது.

இவ்விபத்தில் காரில் பயணம் செய்த திருமதி.விக்டோரியா, க/பெ.அந்தோணிசாமி (வயது 65) என்பவரும், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த புவனகிரி வட்டம், சாத்தப்பாடி கிராமத்தைச் சேர்ந்த விஜயகுமார், த/பெ. ஏழப்பன் (வயது 24) மற்றும் தாமரைச்செல்வன், த/பெ.கோதண்டபாணி (வயது 23) ஆகிய மூவரும் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு அவர்களது குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.



சென்னை, இராணி மேரி கல்லூரி வளாகத்தில், நேற்று முன்தினம் (21.08.2023) செய்தித் துறை சார்பில் அமைக்கப்பட்டு வரும் கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் அவர்களின் திருவுருவச் சிலையினை, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வின்போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு. இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த. மோகன் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

அரசு மருத்துவமனைகளில் புதிதாகத் தொடங்கப்படும்

# 'வைட்டல் பே' தனிப்பிரிவு மூலம் - சிறந்த, விரைவான சிகிச்சை!

## வேலூர் மாவட்டத்தில் - திட்டத்தைத் தொடங்கிவைத்து - அமைச்சர் மா.சுப்பிரமணியன் விளக்கம்!

வேலூர், ஆக.23-

வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புறநோயாளிகள் பிரிவில் 'வைட்டல் பே' எனும் தனிப்பிரிவை நேற்று முன்தினம் தொடங்கி வைத்து செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், "அரசு மருத்துவமனைகளில் தொடங்கப்படும் 'வைட்டல் பே' எனும் தனிப்பிரிவின் மூலம் சிறந்த முறையில் விரைவாக சிகிச்சை அளிக்க முடியும்" என்று குறிப்பிட்டார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்ததாவது:-

2023-24ஆம் ஆண்டு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டில் உள்ள 36 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை புற நோயாளிகள் பிரிவில் 'வைட்டல் வே' எனும் தனிப்பிரிவு தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் விதமாக வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை புற நோயாளிகள் பிரிவில் 'வைட்டல் பே' எனும் தனிப்பிரிவு மாநிலத்திலேயே முதன் முறையாக இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய 'வைட்டல் பே' பிரிவில் புற நோயாளிகள் பிரிவில் வரும் பொது மக்களுக்கு உயரம், எடை, நாடித்துடிப்பு, சுவாச சதவீதம், இரத்த அழுத்தம், இரத்த சோகை, இரத்தத்தில் சர்க்கரை அளவு போன்ற முதற்கட்ட சிகிச்சைகளை மருத்துவர்களை அணுகி பார்ப்பதற்கு முன்னதாகவே பரிசோதித்து பிறகு மருத்துவர்களை அணுகும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் சிகிச்சைக்கு வரும் பொதுமக்கள் புற நோயாளிகள் பிரிவில் நீண்ட நேரம் காத்திருக்கும் காலவிரயம் தடுக்கப்படுகிறது. மாநிலம் முழுவதும் உள்ள அரசு மருத்துவமனை புற நோயாளிகள் பிரிவில் நாள்தோறும் 1000 முதல் 20,000 புறநோயாளிகள் வரை வந்து சிகிச்சை பெறுகின்றனர். குறிப்பாக ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் நாள்தோறும் 20,000 அதிகமான புறநோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதுபோன்று அதிக அளவில் பொதுமக்கள் புறநோயாளிகள் பிரிவிற்கு வரும் மருத்துவமனைகளில் புதியதாக தொடங்கப்பட்டுள்ள வைட்டல் பே எனும் தனி பிரிவின் மூலம் சிறந்த முறையில் விரைவாக சிகிச்சை அளிக்க முடியும்.

மேலும் இன்றைய தினம் வேலூர் மாவட்டம், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பொய்கை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூபாய் 60 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள புற நோயாளிகள் பிரிவும் பொது மக்களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெறும் 13 வது இளநிலை மருத்துவ பட்டபடிப்பு சான்றிதழ் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு 101 மருத்துவ மாணவ, மாணவர்களுக்கு துவ சான்றிதழ்களை வழங்க உள்ளேன்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் குறிப்பிட்டார்.

தொடர்ந்து செய்தியாளர்களின் கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது:-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்றைய தினம் சென்னையில் நடைபெற்ற நீட் தேர்வு விலக்கு தொடர்பான உண்ணாவிரத போராட்டத்தில் கல்வியாளர்கள், சமூக ஆர்வலர்கள், மருத்துவர்கள், மருத்துவ படிப்பு பயலும் மாணவ மாணவியர்கள் என பல தரப்பு மக்களும் கலந்து கொண்டு நீட் தேர்வுக்கு எதிரான தங்களுடைய கருத்துக்களை தெரிவித்தனர். இந்த உண்ணாவிரத போராட்டம் சாதாரண போராட்டமாக இல்லாமல் நீட் தேர்வு எதிர்க்கும் கல்வியாளர்கள் சமூக ஆர்வலர்கள் மருத்துவ மாணவ மாணவர்களின் கருத்துக் கேட்புக் கூட்டமாகவே இருந்தது.

முதலமைச்சர் அவர்களின் இரண்டரை ஆண்டு கால ஆட்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் எண்ணற்ற சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளது. 73 ஆண்டுகால மருத்துவ வரலாற்றில் தமிழ்நாடு மாநிலத்தில் ஒரே ஒரு பல் மருத்துவமனை மருத்துவக் கல்லூரி மட்டுமே இருந்தது. தற்பொழுது இரண்டாவது பல் மருத்துவக் கல்லூரி தொடங்க அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்த பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை புதுக்கோட்டை மாவட்டத்தில் தொடங்கப்பட உள்ளது.

மேலும் தமிழ்நாட்டில் 6 செவிலியர் பயிற்சிக் கல்லூரிகள் மட்டுமே உள்ளன தற்பொழுது கூடுதலாக 11 செவிலியர் பயிற்சிக் கல்லூரிகள் அனுமதி பெறப்பட்டு விரைவில் தொடங்கப்பட உள்ளன.

### தேசிய தர உறுதி விருது!

கடந்த ஒரு வாரத்திற்கு முன்பாக ஒன்றிய அரசின் 'தேசிய தர உறுதி விருது' தமிழ்நாடு அரசின் மருத்துவத் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த விருது 2013-ஆம் ஆண்டு முதல் கடந்த 10 ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 10 ஆண்டுகளில் இதுவரை 408 விருதுகள் தரப்பட்டுள்ளது. இதில் கடந்த ஓராண்டில் மட்டும் 239 சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ளன. இதில் வேலூர் மாவட்டத்தில் உள்ள கஸ்ப்பா, பள்ளிகொண்டா சத்துவாச்சாரி லட்சுமிபுரம் உள்பட ஏழு ஆரம்ப சுகாதார நிலையங்களும் அடங்கும்.

மகப்பேறு, கர்ப்பிணித் தாய்மார்களுக்கான அறையை மேம்படுத்துவதில் முதன்மையான விருதினை ஒன்றிய அரசு நம்முடைய மருத்துவத் துறைக்கு வழங்கியுள்ளது. 2017-ஆம் ஆண்டு முதல் இந்த விருது வழங்கப்படுகிறது கடந்த ஆறு ஆண்டுகளில் 34 விருதுகள் பெறப்பட்டுள்ளன. இந்த ஒரு ஆண்டில் மட்டும் 43 விருதுகள் பெறப்பட்டுள்ளது. இதில் வேலூர் மாவட்டத்தில் உள்ள குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கும் விருது கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

15 நாட்களுக்கு முன்னதாக ஒன்றிய சுகாதாரத் துறை அமைச்சர், உறுப்பு மாற்று மற்றும் உறுப்பு தானம் சிகிச்சைகளில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உள்ளது என அறிவித்துள்ளார். உறுப்பு மாற்று மற்றும் உறுப்பு தானத்தில் தமிழ்நாடு மாநிலம் அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்கள்.

கடந்த ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட அல்லது கட்டமைக்கப்பட்ட மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்ற மருத்துவக் கட்டமைப்புகள் குறித்தும், கடந்த இரண்டரை ஆண்டு காலத்தில் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள மருத்துவக் கட்டமைப்புகள் குறித்தும் பட்டியலிடத் தயாராக இருக்கிறேன். மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு மலை கிராமங்களிலும் வசிக்கும் பொது மக்களுக்கும் சிகிச்சைகள் அளிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் அனைத்து மலை கிராமங்களுக்கும் நேரடியாகச் சென்று கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அவர்களுக்கு தேவையான மருத்துவ வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48, இதயம் காப்போம், கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம், சிறுநீரக பாதுகாப்புத் திட்டம் என, பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தில் இதுவரை ஒரு கோடிய 60 லட்சம் நபர்கள் பயனடைந்துள்ளனர்.

நீட் தேர்வு விலக்கு தொடர்பாக விமர்சித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர், அவர் முதலமைச்சராக இருந்த பொழுது முதன்முதலாக 2017-ஆம் ஆண்டு தான் நீட் தேர்வு தமிழகத்தில் நுழைந்தது என்பதை பத்திரிகையாளர்களின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

2010-2011-ஆம் ஆண்டில் நுழைவுத் தேர்வுகளில் இருந்து மாணவர்களுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குழு அமைத்து அறிக்கை பெற்று உயர்நீதிமன்றம் வரை சென்று நுழைவுத் தேர்வுகளுக்கு விலக்கு அளித்தார்.

### காஞ்சியில் புற்றுநோய் மருத்துவமனை!

வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருந்து கடந்த இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னதாக காணாமல்போன குழந்தை உடனடியாக மீட்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக பணியில் இருந்த நான்கு தற்காலிகப் பணியாளர்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டு விளக்கம் கேட்கப்பட்டுள்ளது. பணியில் இருந்த மருத்துவர் மற்றும் செவிலியர் ஆகியோரிடமும் விளக்கம் கேட்க மருத்துவக் கல்லூரி முதல்வருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதேபோன்று ஆர்.எப்.டி (RFD) டேக் சரிவர இயங்கவில்லை என்ற புகார் குறித்தும் விசாரணை மேற்கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க காஞ்சிபுரம் மாவட்டத்தில் புற்றுநோய் மருத்துவமனை ஒன்று மிகப்பெரிய அளவில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இன்னும் ஓராண்டு காலத்திற்குள்ளாக அது முழுமையான செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

மேலும் வேலூர், ராணிப்பேட்டை, திருப்பூர், நாகர்கோயில் போன்ற ஒரு சில மாவட்டங்களில் புற்று நோய் தாக்கம் அதிகமாக இருக்கும் காரணத்தினால் மருத்துவமனைக்கு வரும் 60 வயதிற்கு மேற்பட்ட நபர்களுக்கு புற்றுநோய் சிகிச்சைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி.நந்தகுமார், ப. கார்த்திகேயன், திருமதி அமுலு விஜயன், மாவட்ட திட்டக் குழுத் தலைவர் மு. பாபு, மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் சுனில் குமார், இயக்குநர் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி மரு.சாந்திமலர், வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.பாப்பாத்தி, துணை இயக்குனர் (சுகாதாரப் பணிகள்) மரு. பானுமதி, கல்லூரி துணை முதல்வர் மரு. கௌரி வெளிகொண்டலா, மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு. ரதிதிலகம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம், அரூர் பேரூர் கழகம் 26 வாக்குசாவடிகள் மற்றும் அரூர் வடக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட 52வாக்குசாவடி முகவர்களுக்கு (BLA2) பயிற்சி மற்றும் ஆலோசனைக் கூட்டம் அரூர் பேரூர் கழக செயலாளர் முல்லைரவி,அரூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் வேடம்மாள் ஆகியோர் ஏற்பாட்டில்,தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் தலைமையில் நடைபெற்றது. உடன் மாநில தீர்மான குழு செயலாளர் கீரை. எம்.எஸ்.விஸ்வநாதன்,மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர் ராஜேந்திரன்,மாவட்ட துணை செயலாளர் கிருஷ்ணகுமார், மேற்கு மகளிர் அணி அமைப்பாளர் கவிதா மோகன்தாஸ், மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

# சைதையில் வார்டு அலுவலகம் திறப்பு விழா நிகழ்ச்சி

சென்னை, ஆக. 23 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தரமணி, பாரதி நகரில் மாமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டடம் மற்றும் அங்கன்வாடி மையக் கட்டடம் ஆகியவற்றை நேற்று முன்தினம் (21.08.2023) திறந்து வைத்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு178க்குட்பட்ட தரமணி, பாரதி நகரில் மூலதன நிதியின் கீழ் ரூ.67 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 178ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டடம் மற்றும் வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.35 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டடம் ஆகியவற்றை நேற்று முன்தினம் (21.08.2023) திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானா, அடையாறு மண்டலக் குழுத் தலைவர் இரா.துரைராஜ், மாமன்ற உறுப்பினர் எஸ்.பாஸ்கரன், வேளச்சேரி மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் அரிமா சு.சேகர், கழக தேர்தல் பணிக்குழுச் செயலாளர் வேளச்சேரி பி.மணிமாறன் எம்.சி. வே.ஆனந்தம் எம்.சி., மகேஷ்வரி முருகவேல் எம்.சி., கழக தா. ரமேஷ், சே.மைதிலி, நா. டில்லிகுமார், போ.தா. மதிவாணன், கா.பாரதிதாசன், கே.என். தாமோதரன், ஜி.பி.எஸ். பாலசதீஷ், எஸ். முருகவேல், பகுதி துணைச் செயலாளர் அ.சங்கர் உள்ளிட்ட ஏராளமான கழகத்தினரும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட

# தி.மு.க. அவசரசெயற்குழு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்- அமைச்சர் செஞ்சிமஸ்தான்அறிக்கை!

விழுப்புரம், ஆக.23-

விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்- அமைச்சர் செஞ்சி மஸ்தான் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் ப.சேகர் தலைமையில் 26.8.23சனிக்கிழமை காலை 10.00மணி அளவில் செஞ்சி வள்ளி அண்ணாமலை திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு மாநில, மாவட்ட, நிர்வாகிகள், பொதுக்குழு, செயற்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1.விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்கள் ,நகர, பேரூர்பகுதிகளில் செயல் வீரர்கள் கூட்டம் தொடர்ந்து நடத்துவது சம்மந்தமாக,

2.விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில்உள்ள செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய மூன்று தொகுதிகளிலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு சிலை அமைக்க இடம் தேர்வு செய்வது சம்மந்தமாக,

3.வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் ஊராட்சிகளில் பாக முகவர்கள் (BLA2)கூட்டம் நடத்துவது சம்மந்தமாக.

4.விழுப்புரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து ஒன்றிய, நகர,பேரூர், கழகங்களில் இளைஞரணி சார்பில் இல்லம் தேடி சென்று அதிக அளவில் புதிய உறுப்பினர்கள் சேர்த்தல் சம்மந்தமாக.

5.விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள நகரப் பேரூர் ஊராட்சிகளிள் உள்ள கழக மூத்த முன்னோடிகளைதேர்வு செய்து பொற்கிழி வழங்குதல் சம்மந்தமாக.

6.கழக ஆக்க பணிகள்.

உலகக் கோப்பை செஸ்:

# இறுதிப் போட்டிக்கு முன்னேறிய இரண்டாவது இந்தியர் பிரக்ஞானந்தா!

பாகு, ஆக.23-

உலக கோப்பை செஸ் அரையிறுதியில் உலகின் 3ம் நிலை வீரரான ஃபேபியானோவை வீழ்த்தினார் பிரக்ஞானந்தா. உலக கோப்பை செஸ் இறுதிப் போட்டியில் கார்ல்சனை பிரக்ஞானந்தா எதிர்கொள்கிறார்.

உலக கோப்பை செஸ் தொடர் அஜர்பைஜானில் உள்ள பாகு என்ற நகரில் நடைபெற்று வருகிறது. இதன் அரை இறுதியில் இந்திய கிராண்ட் மாஸ்டரான சென்னையை சேர்ந்த பிரக்ஞானந்தா உலக தரவரிசையில் 3வது இடத்தில் உள்ள அமெரிக்காவின் பேபியானோ கருணாவுடன் மோதினார்.

47வது காய் நகர்த்துக்கு பிறகு இந்த ஆட்டமும் 'டிரா' ஆனது. இதைத் தொடர்ந்து டைபிரேக்கர் சுற்று நடத்தப்பட்டு, இதில் வெற்றி பெறுவோர் இறுதிப் போட்டிக்கு முன்னேற முடியும் என்ற நிலை உருவானது. அதன்படி டைபிரேக்கர் சுற்றில் பிரக்ஞானந்தா, உலகளவில் மூன்றாம் இடத்தில் உள்ள வீரரான ஃபேபியானோ கருணாவை எதிர்கொண்டு விளையாடி னார்.

இந்த போட்டியில் பிரக்ஞானந்தா தன்னை எதிர்த்து விளையாடிய கருணாவை 3.52.5 புள்ளிகள் அடிப்படையில் வீழ்த்தினார். இதன் மூலம் பிரக்ஞானந்தா இறுதி போட்டிக்கு முன்னேறி இருக்கிறார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஆலவயல் சுப்பையா

## ஆகஸ்ட் 23 (2020)



**கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, மாவட்ட பிரதிநிதி, மாவட்டத் துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**திருமயம் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**பொன்னமராவதி ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவராகவும், மாவட்ட திருக்கோவில்கள் அறங்காவலர் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# உதயநிதி ஸ்டாலின் ஆளுமையில் விளையாட்டுத்துறை!

விளையாட்டுத் துறையை ஊக்கப்படுத்த வேண்டும் அதனைப் பற்றிய முக்கியத்துவத்தையும் அதனால் ஏற்படும் நன்மைகளைப் பற்றியும் நன்கு அறிந்த முத்தமிழறிஞர் கலைஞர் அதற்கென்று ஒவ்வொரு நாளும் ஒரு பாடப்பிரிவை ஒதுக்கி விளையாட்டில் மாணவ கண்மணிகளை ஈடுபட செய்ய வேண்டுமென்று தனி அமைச்சகத்தையும் உருவாக்கி தந்தார்.

அதன் விளைவினைத் தான் நாம் இன்று அறுவடை செய்து வருகின்றோம். ஆம்! கலைஞர் பெருமான் தொடாதத் துறையில்லை, பெறாத வெற்றியில்லை. அப்படி அனைத்திலும் தன் வாழ்நாளில் வெற்றி கண்டவர் கலைஞர் ஆவார்.

தற்போது இந்தியாவிலேயே ஒரு ஆசியப் போட்டியை நடத்தக்கூடிய அளவிற்கு அனைத்து முக்கிய விளையாட்டுகளுக்கும் சிறப்பான சர்வதேச தரத்தில் மைதானங்களை கொண்ட மாநிலமாக தமிழகம் திகழ்ந்து வருகிறது.

விளையாட்டுத்துறையை மிகப் பெரிய உயரத்திற்கு கொண்டு செல்ல வேண்டுமென்றால் இருவரின் முழுமையான இதயபூர்வ ஈடுபாடு என்பது மிக மிக அவசியமான ஒன்று. அந்த அடிப்படையில் உள்ளபூர்வ உதவியும், ஊக்கமும் தர முதல்வர் அண்ணன் தளபதி அவர்களும், உற்சாகத்தின் உச்சாணிக்கு சென்று பணியாற்ற ஓயாது உழைக்கும் சகோதரர் அத்துறையின் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அப்பழுக்கற்ற அர்ப்பணிப்பு உணர்வு.

மிக முக்கியமான இருவரின் எண்ணத்தில் எழும் சிந்தனைக் கேற்ப எத்துறையை விடவும் கிஞ்சிற்றும் குறைந்ததல்ல இத்துறை என்று தனது செயல்பாட்டால் முன்னணித் துறையாக விளையாட்டுத்துறை திகழ்கிறது. இதனை மறுப்பாரும் இல்லை, எதிர்ப்பாரும் இல்லை.

செயற்கை இழை விளையாட்டுத் தளம் தற்போது மிகவும் அவசியமான ஒன்றாகும். ஹாக்கி விளையாட்டுக்கு தேவைப்படுகிறது. இதனை கிட்டத்தட்ட பத்தொன்பது கோடி வரை செலவு செய்து ஹாக்கி ஸ்டிக்கை நன்றாக சுழற்றும் பாபிகிராஸ் மைதானமாக தயார் செய்து இந்தியாவிலேயே சிறந்த ஹாக்கி மைதானமாக எழும்பூர் ஹாக்கி மைதானத்தைப் பார்த்து பார்த்து அமைத்துள்ளார் சகோதரர் உதயநிதி ஸ்டாலின். இதனால் வீரர்களுக்கு காயம் ஏற்படாது. இந்தியாவிலேயே உள்ள பாதுகாப்பான மைதானம் இதுவாகும்.

உலகளவில் வலுவான அணிகளாக திகழும் இந்தியா பாகிஸ்தான், மலேசியா, தென் கொரியா உள்ளிட்ட ஆசிய நாடுகளின் அணிகள் கலந்து கொண்டு தங்கள் திறமைகளை வெளிபடுத்தி சிறப்பு சேர்த்தனர். காணவந்தவர்கள் களிப்புற்றனர், காண முடியாதவர்கள் ஏமாந்து விட்டோமே என்று ஏக்கம் கொண்டனர்.

இந்தியா இதுவரை நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் அதிகமாக தங்கப்பதக்கம் வாங்கியது ஹாக்கி விளையாட்டுப் போட்டியில் தான். அப்படிப்பட்ட இந்திய ஹாக்கி அணி கடைசியாக தங்கம் வாங்கியது மாஸ்கோவில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் தான். அதிலும் அமெரிக்கா மற்றும் நேச நாடுகள் அந்த ஒலிம்பிக்கை புறக்கணித்தன. அதனால் நம்தமிழ்நாட்டைச் சேர்ந்த பாஸ்கரன் தலைமையிலான ஹாக்கி அணி தங்கம் எளிதாக வென்றது. அனைத்து நாடுகளும் கலந்திருந்தால் ஒரு வேளை நாம் பதக்கம் பெறுவது எளிதாக இருந்திருக்காது.

**வி.பி.கலைராஜன்**
*கழக இலக்கிய அணிச் செயலாளர்*



இதனை மனதில் வைத்து தான் இந்தியா மீண்டும் ஹாக்கியில் கோலோச்ச வேண்டுமென நிதிஉதவி செய்து வருவதோடு கடுமையான பயிற்சியும் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து ஹாக்கி அணியை தத்தெடுத்து கொண்டு உதவி செய்கிறார் ஒரிசா முதல்வர் நவின் பட்நாயக். இரண்டு உலக நாடுகள் கலந்து கொள்ளும் போட்டியையும் நடத்தி உள்ளார். இதனால் அந்த மாநில இளைஞர்கள் கிராமங்தோறும் ஹாக்கி விளையாட்டில் ஆர்வம் காட்டி வருகின்றனர். தற்போது இந்திய ஹாக்கி அணியில் ஒரிசாவை சேர்ந்தவர்கள் 3 பேராவது இடம் பிடித்துள்ளனர்.

அதைப் போலத்தான் சகோதரர் உதயநிதி ஸ்டாலின் இத்துறைக்கு அமைச்சராக பொறுப்பேற்றவுடன் விளையாட்டுத்துறை இதுவரை இல்லாத அளவு மேம்பட்டு வருகிறது. சென்னையில் ஏற்கனவே எழும்பூர் இராதாகிருஷ்ணன் மைதானத்தில் உலக நாடுகள் பங்கு பெற்ற ஹாக்கிப் போட்டி நடத்தப்பட்ட வரலாறு உண்டு. ஆனால் கடந்த பதினாறு வருடங்களாக எந்த போட்டியும் நடத்தாமல் சீர்கெட்டுப் போயிருந்தது. முழுமையாக ஈடுபாட்டோடு ஆசிய ஹாக்கி போட்டியை நடத்திக் காட்டினார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்.

அந்த போட்டியிலும் எதில் ஒன்றிலும் தோல்வியுறாமல் இந்தியா பாகிஸ்தானையும் பந்தாடி மலேசியாவையும் மண்ணை கவ்வச் செய்து சாம்பியன் ஆனது. இந்த போட்டியின் ஆரம்பம் முதல் இறுதிநாள் வரை தன்னுடைய பணிகளிடைய நேரம் ஒதுக்கி ஹாக்கிப் போட்டியை மைதானத்திற்கு சென்று வீரர்களை நம்முதல்வர் பார்த்து உற்சாகப்படுத்தினார்.

அண்ணன் தளபதி முதல்வர் பொறுப்பேற்றவுடன் உலக தலைசிறந்த வீரர்கள் பங்கு பெறும் செஸ் ஒலிம்பியாட் போட்டியை மாமல்லபுரத்தில் 114 கோடி செலவில் சிறப்புற நடத்தினார். கலந்து கொண்ட பன்னாட்டு வீரர்கள் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகள், காட்டிய அன்பு தமிழ்நாட்டு முதல்வரின் உற்சாக உபசரிப்பு கண்டு மெய்சிலிர்த்துப் போனதாக பெருமையோடு நம்முதல்வர் அவர்களை போற்றினர், புகழ்ந்தனர், பாராட்டினர். இது நம்முதல்வர் அவர்களின் செயல்பாட்டால் தமிழ்நாடு பெற்ற பெருமை.

அதன் விளைவு செஸ் போட்டியில் உலகின் முதல் வீரராக விஸ்வநாதன் ஆனந்த் திகழ்ந்து வந்தவரை சமீபத்தில் நடந்த உலகப் போட்டியில் வென்று தமிழகத்தைச் சேர்ந்த குகேஷ் என்ற மாணவர் வீழ்த்தி உலகில் முதல் வீரராக செஸ்ஸில் திகழ்ந்து வருகிறார். தற்போது அசர்பைஜான் நாட்டில் நடந்து வரும் சர்வதேச போட்டியில் பிரக்ஞானந்தா, குகேஷ் ஆகிய இரண்டு வீரர்களில் பிரக்ஞானந்தா அரை இறுதிக்கு தகுதி பெற்று விளையாடி வருகின்றார். இது நம்முதல்வர் அவர்களின் அர்ப்பணிப்புக்கும் அரவணைப்புக்கும் கிடைத்த வெற்றி.

தற்போது அதே மாமல்லபுரத்தில் இந்தியாவில் முதன்முறையாக சர்வதேச சர்ப் ஓப்பன் போட்டியை ஆகஸ்ட் 14 ஆம் தேதி முதல் 20ஆம் தேதி வரை நடத்தி வருகிறார் நம் சகோதரர் உதயநிதி ஸ்டாலின். இந்த அலைசறுக்கு போட்டி இது வரை தமிழ்நாடு கண்டிராதது. முதல்வர் அண்ணன் தளபதி இதற்காக 2.6 கோடி நிதியை தந்துள்ளார். இந்தப் போட்டியில் 12 நாடுகளை சேர்ந்த சர்வதேச அளவிலான 39 வீரர்கள் 14 வீராங்கனைகள் பங்கேற்கின்றனர். இந்த போட்டியில் பங்கேற்ற 15 இந்திய வீரர்களில் 12 வீரர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது நமக்கு பெருமை. இந்த விளையாட்டை கடலோர மாவட்டங்களில் ஊக்குவிக்கும் வண்ணம் 2023-24 பட்ஜெட்டில் இராமநாதபுரத்தில் தமிழ்நாடு நீர் விளையாட்டு ஒலிம்பிக் அகாடமி அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டு அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டு வீரர்களை சர்வதேச போட்டிகளில் பங்கேற்க ஊக்குவிக்கவும், நிதி மற்றும் அனைத்து வசதிகளை செய்து தரவும் சகோதரர் உதயநிதி ஸ்டாலின் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை ஒன்றை உருவாக்கியுள்ளார்.

நடைபெற்ற உலக சர்பிக் போட்டியை தொடர்ந்து ஹெ.சி.எல். நிறுவனத்துடன் இணைந்து சைக்ளோத்தான் போட்டி சென்னையில் நடத்தப்பட உள்ளது. பிரதமர் மோடியிடம் நம் முதல்வர் பேசி கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்திட அனுமதி வாங்கி வந்துள்ளார். ஜனவரி 2024ல் இந்த போட்டிகள் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் சிறப்பாக நடத்தப்பட உள்ளது.

தமிழ்நாடு அரசு அளித்து வரும் ஊக்கத்தால் வில்வித்தை போட்டியிலும் நம் வீரர்கள் சிறந்து விளங்கி வருகின்றனர். சமீபத்தில் இலங்கை கொழும்பில் நடந்த போட்டியில் தமிழ்நாட்டை சேர்ந்த சுப்புலெட்சுமி என்ற மேகலா முதல் பரிசு தங்கப் பதக்கத்தை பெற்றுள்ளார்.

சீனாவில் நடந்த துப்பாக்கி சுடுதல் போட்டியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த இளவேனில் வாலறிவன் 10 மீட்டர் ஏர் ரைபிள் போட்டியில் தங்கபதக்கம் பெற்றுள்ளார். இப்படி துப்பாக்கி சுடுதல் போட்டியில் சர்வதேச போட்டிகளில் வெல்லும் திறன்மிக்க பல தமிழக வீரர்கள் வீராங்கனைகள் உள்ளனர்.

சமீபத்தில் நடந்து முடிந்த பெண்கள் கால்பந்து போட்டியில் தமிழ்நாடு கால்பந்து மகளிர் அணி தேசிய அளவில் நடந்த போட்டியில் இறுதியில் வென்று தங்கப் பதக்கம் பெற்று வந்தது. அவர்களை இன்முகத்தோடு வரவேற்று சகோதரர் உதயநிதி ஸ்டாலின் நம்முதல்வரிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி அவரது வாழ்த்துக்களையும் பெற்று தந்ததோடு தேவையான உதவிகளை செய்வதற்கும் தமிழ்நாடு அரசு தாராளமாக செய்திடும் என்று உறுதியும் அளித்து ஊக்கமும் தந்துள்ளார்.

கபடி போட்டி என்று சொன்னாலே அது தமிழ்நாட்டு விளையாட்டு என்று தான் பெரும்பாலானோர் சொல்வர். இந்திய கபடி அணியில் எப்படியும் குறைந்தது நான்கு வீரர்களாவது தமிழர்கள் இருப்பார்கள். கடந்த ஆசிய போட்டிக்கு முந்தைய போட்டியில் தமிழ்நாடு தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த பாஸ்கரன் தலைமையிலான அணி பாகிஸ்தானை வென்று தங்கம் வென்றது. ஆனால் கடந்த ஆசியப் போட்டியில் இந்திய அணி ஈரானிடம் இறுதி போட்டியில் தோல்வி அடைந்தது.

இவ்வளவிற்கும் ஈரானுக்கு கபடி கற்றுக் கொடுத்ததே இந்திய வீரர்கள் தான். ஐந்தே வருடத்தில் நம் இந்திய அணியை வீழ்த்தும் அளவிற்கு வளர்ந்து விட்டனர். இனியும் ஆசிய அளவில் நமக்கு சவலாக ஈரான் தான் இருக்கப் போகிறது. தற்போது நடந்த பிரோ கபடி போட்டியில் தமிழ்தலைவாஸ் அணியில் 1 வீரர் கூட தமிழர் இல்லை. இதற்கு காரணம் என்ன? வீரர்கள் பற்றாக்குறையா? தகுந்த திறமையான வீரர்கள் இல்லையா? இருக்கிறார்கள் அரசியல் உட்புகாமல் திறமையானவர்களுக்கு வாய்ப்பளித்தால் தமிழ்நாட்டிலிருந்து அதிகமானோர் எல்லா விளையாட்டிலும் சிறந்து விளங்குவார்கள். இதில் சகோதரர் உதயநிதி ஸ்டாலின் தனிகவனம் செலுத்தினால் தமிழ்நாட்டின் வீரர்களால் இந்தியா தலைநிமிர வழிவகுக்கும்.

மணிப்பூரில் ஏற்பட்ட கலவரத்தில் இன அழிப்புப் போர் தொடர்ந்திடும் நிலையில் மேரி கோம் போன்ற உலக சாம்பியன்கள் (குத்துச்சண்டை) பலர் பயிற்சி பெற முடியாத சூழ்நிலை உள்ளது. மத வெறியர்கள் பார்வையில் மக்களை வித்தியாசப்படுத்தி பார்க்க முடியாது. அதனால் தான் நம்முதல்வர் அண்ணன் தளபதி தாயுள்ளத்தோடு மணிப்பூர் விளையாட்டு திறனாளர்கள் பயிற்சி பெற தமிழ்நாட்டுக்கு வாருங்கள் உங்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து தரப்படும் என்று அழைப்பு விடுத்தார். தேசியம், பாரதம் என்றெல்லாம் பேசி வரும் பா.ஜ.க. ஆளும் மற்ற மாநில முதல்வர்கள் யாரும் அப்படிப்பட்ட அழைப்பு விடுக்க வில்லை. இதிலும் முதன்மையாக விளங்குபவர் நம்முதல்வரே. மனித நேயத்தை நம்முதல்வர் மட்டுமே வாழவைத்துள்ளார்.

ஒலிம்பிக் போட்டி தொடங்கிய காலத்திலிருந்து இந்தியா கடைசியாக நடந்த ஒலிம்பிக்கைத் தவிர மற்ற போட்டிகளில் தடகளத்தில் ஒரு வெண்கலப் பதக்கம் கூட பெறவில்லை. இந்திய தேசிய கீதமும் அந்த முக்கிய மைதானத்தில் ஒலிபரப்பப்படவில்லை. அதிகபட்சம் நான்காம் இடத்தைத் தான் பஞ்சாப் மில்கா சிங்கும், கேரளா பி.டி.உஷாவும் பெற்றனர். அதுவும் 400 மீட்டர் ஓட்டத்தில் தான். முதன்முதலாக இந்திய வீரர் நிரவ்சோப்ரா 90 மீட்டர் ஈட்டி வீசி கடந்த ஒலிம்பிக்கில் தங்கம் வென்று இந்தியாவிற்கு தடகளத்தில் பெருமை சேர்த்தார். அந்த மைதானத்தில் இந்திய தேசிய கீதம் முதல்முறையாக ஒலிபரப்பப்பட்டது.

ஆனால் பசியிலும், பட்டினியிலும் துவளும் கென்யா, எத்தியோப்பியா, ஜமைக்கா போன்ற நாடுகளெல்லாம் பல தங்க பதக்கங்களை தடகளத்தில் பெற்று பெருமை சேர்த்து வருகின்றனர். ஜமைக்கா உசைன் போல்ட் 100மீ, 200மீ அதிவேக ஓட்டத்தில் முதன்மையானவராகவும் அதே போல் பெண்கள் பிரிவிலும் ஜமைக்கா வீராங்கனையே முதல் நபராக விளங்கி வருகிறார். ஒரு காலத்தில் அமெரிக்கா தான் இந்த இரண்டு ஓட்டத்திலும் சாதனை படைக்கும். இவ்வளவிற்கும் முதல் ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்ட உசைன் போல்ட் நான்காம் இடமே பெற்றார். முயற்சி மற்றும் பயிற்சி அவரை முதல் இடம் பெற வைத்தது. தமிழ்நாட்டில் முதலமைச்சர் கோப்பை என்ற பெயரில் போட்டிகள் நடத்தப்பட்டன. 50 கோடி 86 லட்சம் இதற்காக ஒதுக்கினார் நம்முதல்வர்.

ஏன் இதனைக் குறிப்பிடுகிறேனென்றால் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் பலர் ஆசிய, உலக, அகில இந்திய மற்றும் பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான போட்டிகளில் தலைசிறந்து விளங்கி பல பதக்கங்களை பெற்று வரும் செய்திகள் வந்த வண்ணம் உள்ளது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த தனலட்சுமி ஆசிய அளவில் 200மீ தங்கப்பதக்கம் பெற்றுள்ளார். ஏராகி ஆசிய மற்றும் உலக போட்டியில் 100மீ தடைதாண்டுதல் போட்டியில் வெள்ளி பதக்கம் பெற்றுள்ளார். செல்விபிரபு என்ற 19 வயது இளைஞர் 20 வயதிற்குட்பட்டவர்களுக்கான உலகப் போட்டியில் கிட்டதட்ட 17 மீட்டர் தத்து தப்படி தாண்டுதலில் (Triple Jump) தாண்டி வெள்ளிப் பதக்கம் பெற்றுள்ளார். நித்யா 100மீ தடை தாண்டுதல், பவித்ரா கோலூன்றி தாண்டுதல், வித்யா 400 தடை தாண்டுதல், நமீரா 10கி.மீ. நடைபோட்டி, ரோசி ஆசியன் கோல்ஊன்றி தாண்டுதல், ஜஸ்வின் ஆல்டிரின் நீளம் தாண்டுதல் 8.42மீட்டர், சத்திய நாராயணன் நீளம் தாண்டுதல், தமிழ் அரசன் மற்றும் சந்தோஷ்குமார் 400மீ தடை தாண்டுதல், பிரவின் சித்தரவேல் (Triple Jump) ராஜேஷ் ரமேஷ் 400மீ ஓட்டம், கார்த்திக் செல்வன் ஹாக்கி என எண்ணற்ற வீரர்கள் ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதி கொண்ட வீரர்களாக திகழ்ந்து வருகின்றனர். இதற்கு முன்பு இத்தனை வீரர் - வீராங்கனைகள் தமிழ்நாட்டில் இல்லை. இந்த வளர்ச்சி தமிழக அரசுக்கும் நம்முதல்வருக்கும், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் கிடைத்த வெற்றி.

இவர்களுக்கெல்லாம் (ஸ்பைக்ஸ்) ஆணி பதித்த காலணி மற்றும் சிறந்த உணவு, பயிற்சி வழங்கினால் தமிழக வீரர்கள் வீராங்கனைகள் பலர் உலகளவில் பதக்கங்கள் நிச்சயம் பெறுவர். அதற்குத்தான் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 234 தொகுதிகளிலும் விளையாட்டு அரங்கம் அமைக்க உத்தரவிட்டுள்ளார். முதல்வர் முழுமனதோடு அதற்கு நிதி உதவி அளித்து வருகிறார். முதல்வர் அண்ணன் தளபதி அவர்களின் பேருதவி, பேராற்றல், ஈடுபாடு, ஊக்கம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உறுதி, தளராத நம்பிக்கை, ஆர்வம், அதீதபற்று, அனைத்து விளையாட்டு வீரர்களையும் அரவணைக்கும் பாங்கு நிச்சயம் எதிர்கால இந்தியாவின் விளையாட்டுத்துறை தமிழகத்தின் கையில் தான் உள்ளது என்பதை காலம் நிச்சயம் உணர்த்தும்.



கடலூர் மாவட்டம், கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட அன்னவல்லி கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் உதவிக்கான காசோலைகளை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / திட்ட இயக்குநர் லி.மதுபாலன் ஆகியோர் உள்ளனர்.

### ‘நீட்’ தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசு - ஆளுநரைக் கண்டித்து நாளை

# மதுரையில் மாபெரும் உண்ணாவிரத அறப்போர்!

### அமைச்சர் பி.மூர்த்தி - கோ.தளபதி எம்.எல்.ஏ. - மு.மணிமாறன் அறிக்கை!







*மதுரை, ஆக. 23-*

*தி.மு.க. இளைஞரணி - மாணவரணி மருத்துவரணி சார்பில் “தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவ கனவை சிதைத்து அவர்களின் உயிரை பறிக்கும் நீட் தேர்வை ஒன்றிய பா.ஜ.க. அரசு திரும்பப் பெற வலியுறுத்தியும், அதிகாரம் இருப்பது போல் மாளிகையில் கொக்கரிக்கும் ஆளுநரை கண்டித்தும்” மாபெரும் உண்ணாவிரத அறப்போர் நடைபெறுகிறது என மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி, கோ. தளபதி எம்.எல்.ஏ., மு.மணி மாறன் ஆகியோர் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.*

*அவர்களது அறிக்கை வருமாறு: -*

*நமது கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, “தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவ கனவை சிதைத்து அவர்களின் உயிரை பறிக்கும் நீட் தேர்வை ஒன்றிய பா.ஜ.க அரசு திரும்பப் பெற வலியுறுத்தியும், அதிகாரம் இருப்பது போல் மாளிகையில் கொக்கரிக்கும் ஆளுநரை கண்டித்தும்”, நாளை (24.08.2023 - வியாழக்கிழமை) காலை 9.00 மணி அளவில் அண்ணா நகர் அம்பிகா தியேட்டர் அருகில் மதுரை வடக்கு, மதுரை மாநகர், மதுரைதெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி - மாணவரணி, மருத்துவ ரணி சார்பில் மாபெரும் உண்ணாவிரத அறப்போர் நடைபெறு கிறது.*

*மதுரை மாவட்டத்தை சேர்ந்த இளைஞரணி - மாணவரணி - மருத்துவ ரணி நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக்கழக, வட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர், கிளை செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.*

*இவ்வாறு மதுரை வடக்கு - மதுரை மாநகர் - மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர்கள் தெரிவித்துள்ளனர்.*

### தமிழ்நாடு தொழில்துறையில் மறுமலர்ச்சியை எட்டும்!

# முதலீடுகளை ஈர்ப்பதிலும், வளர்ச்சியிலும் முதலிடம் பிடிக்கும்!

### “தினகரன்” தலையங்கத்தில் உறுதி!

சென்னை, ஆக. 23 -

தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம் நமது முதல்வர் அவர்களின் ஆட்சியில் தமிழ்நாடு தொழில்துறையில் மறுமலர்ச்சியை எட்டும் என்றும் முதலீடுகளை ஈர்ப்பதிலும் தொழில் வளர்ச்சியிலும் முதலிடம் பிடிப்பது உறுதி என “தினகரன்” நாளேடு தலையங்கம் எழுதி தனது நம்பிக்கையை தெரிவித்துள்ளது.



தினகரன்
ஆகஸ்ட் 21, 2023 திங்கட்கிழமை
தொழில்வளம் பெருகட்டும்
ஒரு நாட்டின் வளர்ச்சி, அதன் தொழில்களை சார்ந்தே அமையும். தமிழகம் வேளாண் பூமி என்ற சூழல் கடந்த சில ஆண்டுகளாகவே மாறத் தொடங்கியுள்ளது. தமிழ்நாட்டின் உட்கட்டமைப்பையும், தொழில் கட்டமைப்பையும் கலைஞர் மேம்படுத்தினார். பன்னாட்டு தொழில் நிறுவனங்களும், தொழில் முதலீடுகளும் தமிழகம் வருவதற்கு அவர் வித்திட்டார். அவரது வழியில் நடக்கும் இந்த திராவிட மாடல் ஆட்சியில் இன்று பன்னாட்டு நிறுவனங்கள் மட்டுமின்றி, சிறு, குறு தொழில் வளர்ச்சியும் கூட சிறப்படைந்து வருகிறது. 2021 மார்ச் மாத நிலவரப்படி தமிழ்நாட்டில் 2500 ஸ்டார்ட் அப் நிறுவனங்கள்

அது வருமாறு

ஒரு நாட்டின் வளர்ச்சி, அதன் தொழில்களை சார்ந்தே அமையும். தமிழகம் வேளாண்பூமி என்ற சூழல் கடந்த சில ஆண்டுகளாகவே மாறத் தொடங்கியுள்ளது. தமிழ்நாட்டின் உட்கட்டமைப்பையும், தொழில் கட்டமைப்பையும் கலைஞர் மேம்படுத்தினார். பன்னாட்டு தொழில் நிறுவனங்களும், தொழில் முதலீடுகளும் தமிழகம் வருவதற்கு அவர் வித்திட்டார். அவரது வழியில் நடக்கும் இந்த திராவிட மாடல் ஆட்சியில் இன்று பன்னாட்டு நிறுவனங்கள் மட்டுமின்றி, சிறு, குறு தொழில் வளர்ச்சியும் கூட சிறப்படைந்து வருகிறது. 2021 மார்ச் மாத நிலவரப்படி தமிழ்நாட்டில் 2500 ஸ்டார்ட் அப் நிறுவனங் கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருந்தன. ஆனால் கடந்த 2 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை 3 மடங்காக உயர்ந்து இப்போது 6800க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

புத்தாக்க சிந்தனை யோடு செயல்படும் தொழில் நிறுவனங்களுக்கு தமிழகத்தில் ‘டான்சீட்’ என்னும் புத்தொழில் ஆதார நிதி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 109 நிறுவனங்களுக்கு தலா ரூ.10 லட்சம் வீதம் 10 கோடிக்கும் மேல் நிதி வழங்குவதற்கான ஒப்புதல் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி பொதுவாக சென்னை, கோவை உள்ளிட்ட பெருநகரங்களோடு நின்று விடும். எல்லாருக்கும், எல்லாம் கிடைத்திடும் இந்த திராவிட மாடல் ஆட்சியில் கடந்த நிதியாண்டில் மதுரை, ஈரோடு, நெல்லை ஆகிய நகரங்களிலும் புத்தொழில் மையங்கள் நிறுவப்ப ட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் சேலம், தஞ்சாவூர், கடலூர், ஓசூர் ஆகிய இடங்களில் வட்டார புத்தொழில் மையங்கள் நிறுவப்பட உள்ளன.

புத்தொழில் நிறுவனங்களுக்கு பங்கு முதலீடாக கடந்தாண்டில் மட்டுமே ரூ.30 கோடி சிறப்பு நிதி வழங்கப்பட்டுள்ளது. ‘எந்த துறையாக இருந்தாலும், அதில் இந்தியாவிலே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு திகழ வேண்டும்’ என்கிற நம் முதல்வர் மு.க. ஸ்டாலினின் உள்ள வேட்கைக்கு தொழில்துறை இப்போது துணை நிற்கிறது. கோவை கொடிசியா வளாகத்தில் புதிய தொழில் முனைவோருக்கான 2 நாள் ஸ்டார்ட் அப் திருவிழா பிரமாண்ட மாக நடந்ததோடு, தொழில் முனைவோர் களையும் ஊக்குவித்துள்ளது. அங்கு அமைக்கப்பட்டிருந்த 450 அரங்குகளும் தொழில்முனைவோர்களுக்கு முதலீடுகள் மற்றும் புத்தொழில்கள் குறித்த பல்வேறு தகவல்களை அள்ளி தந்தன. ஒருங்கிணைந்த தொழில் வளர்ச்சி என்ற அடிப்படையில், சிறு, குறு தொழில்களுக்கு இத்திருவிழாவில் அளிக்கப்பட்ட முக்கியத்துவம் கவனிக்கத்தக்கது.

படித்துவிட்டு அரசு வேலை என்கிற கனவில் இருக்கும் இன்றைய இளைஞர்கள் பட்டாளத்திற்கு தொழில் துறையில் குவிந்து கிடக்கும் வேலை வாய்ப்புகள் வெளியில் தெரிவதில்லை. ஸ்டார்ட் அப் திருவிழாக்கள் அவற்றை வெளியில் கொண்டு வருவதோடு, சிறு, குறு தொழில்களின் வளர்ச்சிக்கும் பேருதவியாக உள்ளன. முதலீ ட்டாளர்க ளையும், தொழில் முனைவோர்களையும் இணைப்பதற்காக தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ள முதலீட்டாளர் இணைப்பு தளம், தொழில் முனைவோரை ஊக்குவித்து வருகிறது. புத்தொழில் முனைவோருக்கு உலகளாவிய சந்தை வாய்ப்புகளை உருவாக்கி தரும் வகையில் துபாயில் விரைவில் ஒருங்கிணைப்பு மையம் என முதல்வர் அறிவித்திருப்பது நிச்சயம் தொழில்துறையில் மறுமலர்ச்சியை உருவாக்கும். முதலீடுகளை ஈர்ப்பதிலும், தொழில் வளர்ச்சியிலும் உலக அளவில் தமிழ்நாடு சிறந்து விளங்கும் காலம் வெகுதொலைவில் இல்லை.

இவ்வாறு “தினகரன்” நாளேடு தலையங்கத்தில் முதல்வர் மீது உள்ள நம்பிக்கையை உறுதிபடுத்தியுள்ளது.

### ராஜஸ்தான் - கோட்டாவில் மட்டும் 22 மாணவர்கள் தற்கொலை!

# பணம் பறிக்கும் நீட், ஜே.இ.இ. பயிற்சி மையங்கள்!

*ஜெய்ப்பூர், ஆக. 23-*

*ராஜஸ்தான் மாநிலம் கோட்டாவில் செயல்படும் நீட், ஜே.இ.இ. நுழைவு தேர்வு பயிற்சி மையங்கள் நாடு தழுவிய அளவில் பிரபலமானவை. பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள், இங்கு தங்கி நுழைவு தேர்வுகளுக்கு பயிற்சி பெறுகின்றனர். நுழைவுத் தேர்வில் வெற்றி பெறுவதற்காக பலமணி நேரம் தொடர்ந்து படிக்க வேண்டியுள்ளதால் மன உளைச்சலுக்கு உள்ளாகும் மாணவர்கள் தற்கொலை செய்து கொள்வதும் இங்கு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.*

*இந்த ஆண்டில் மட்டும் கோட்டா மாவட்டத்தில் நுழைவு தேர்வுக்கு பயிற்சி பெற்ற 22 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். குறிப்பாக கடந்த 18 நாட்களில் 4 பேர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இதையடுத்து, மாணவர்களின் தற்கொலையைத் தடுப்பது குறித்து, ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலாட் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அப்போது, நுழைவுத் தேர்வு பயிற்சி மையங்கள் தொடர்பான தனது விமர்சனத்தையும் கூட்டத்தில் அவர் முன் வைத்தார்.*

*“9 மற்றும் 10ம் வகுப்பு படிக்கும் மாண வர்களை, நுழைவு தேர்வு பயிற்சி நிறுவனங்களில் சேர்ப்பதால், அது அவர்களுக்கு கூடுதல் சுமையை ஏற்படுத்துகிறது.*

*போலி பயிற்சி மையங்களிலும் சேர்ந்து மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். அவர்கள் தங்களது பள்ளிகளுக்குச் செல்வதில்லை. அவர்களின் பாடங்களில் கவனம் செலுத்துவதற்கு பதிலாக, நுழைவுத் தேர்வுக்குத் தயாராகி வருகின்றனர். மாணவர்கள் இரட்டைச் சுமை சுமைக்கின்றனர். இளம் மாணவர்கள் தற்கொலை செய்து கொள்வதை இனியும் பொறுத்துக் கொள்ள முடியாது.*





திருச்சி – மெயின் கார்டு பகுதியில் உள்ள 'ஹோலி கிராஸ் கல்லூரி'– 100 வது ஆண்டைக் கொண்டாடும் விதமாக விளையாட்டுப் போட்டிகள் நடத்தபட்டன. இதில் பலவிதமான விளையாட்டுப் போட்டிகளில் மாணவிகள் மிகுந்த உற்சாகமாக கலந்து கொண்டனர். நேற்று முன்தினம் மாலை 100 வது ஆண்டு நிறைவு விழாவில் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்புரையாற்றினார். நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளிக் கல்விதுறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திருச்சி கிழக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் இனிகோ இருதயராஜ், திருச்சி மேயர் அன்பழகன், மாநகர காவல்துறை ஆணையர் காமினி, மற்றும் கல்லூரி முதல்வர் இஸபெல்லா ராஜகுமாரி , மற்றும் ஆசியர்கள், மாணவிகள் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

# குறிஞ்சிப்பாடி தொகுதியில் - முடிவுற்ற பல்வேறு திட்டப் பணிகள்!

## வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார்!

குறிஞ்சிப்பாடி, ஆக.23-

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகளை நேற்று மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். அ. அருண் தம்புராஜ் முன்னிலையில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் தொடக்கி வைத்தார்.

அதன் விபரம் வருமாறு:

கடலூர் வட்டத்திற்குட்பட்ட பச்சையாங்குப்பம் ஊராட்சி சொத்திக்குப்பம் கிராமத்தில் குறிஞ்சிப்பாடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள நியாயவிலைக் கடை, சேடப்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கீழ் குடிகாடு பகுதியில் புதிய பகுதி நேர நியாயவிலைக்கடை, சேடப்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கீழ் காரைக்காடு பகுதியில் குறிஞ்சிப்பாடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய தாகக் கட்டப்பட்டுள்ள நியாய விலைக்கடை மற்றும் சேடப்பாளையம் ஊராட்சி பெரியகாரைக் காடு கிராமத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி நிதியின் கீழ் ரூ.13.57 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக அங்கன்வாடி மையம் கட்டப்பட்டவுள்ளதையும் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் திறந்து வைத்தார்.

வழிசோதனைப்பாளையம்தொடக்கவேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கீழ் அன்னவல்லி கிராமத்தில் குறிஞ்சிப்பாடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில்; புதிய நியாய விலைக்கடை, சேடப்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கீழ் ஆண்டிக்குப்பம் பகுதியில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை, வழிசோதனைப்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கீழ் ராமாபுரம் ஊராட்சியில் உள்ள புதுக்குப்பம் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை மற்றும் ராமாபுரம் ஊராட்சியில் உள்ள சாத்தங்குப்பம் கிராமத்தில்குறிஞ்சிப்பாடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள நியாயவிலைக் கடை ஆகியவற்றை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் திறந்து வைத்தார்.

தொடர்ந்து புதுக்குப்பம் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கடலூர் ராமாபுரம் (வழி கண்ணாரப்பேட்டை, வழிசோதனைப்பாளையம்) வரை இயங்கி வந்த அரசு பேருந்து சேவையை, புதுக்குப்பம் வரை நீட்டிக்கப்பட்ட வழித்தடத்திலான பேருந்து சேவையை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கொடியசைத்து தொடக்கி வைத்தார். மேலும் இந்நிகழ்ச்சியில் பல்வேறு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கீழ் 14 மகளிர் சுய உதவிக் குழுக்களில் மொத்தம் 176 நபர்களுக்கு ரூபாய் 91 லட்சத்து 24 ஆயிரம் மதிப்பீட்டில் கடன் உதவிக்கான காசோலைகளை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் வழங்கினார்

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜராம், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திட்ட இயக்குநர் லி.மதுபாலன், கூட்டுறவு இணை பதிவாளர் நந்தகுமார் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை திலகர் திடலில் உண்ணாவிரத அறப்போர்!

## கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் பேச்சு!

புதுக்கோட்டை, ஆக.23-

கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப் படி தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவராகும் கனவைச் சிதைத்து அவர்களின் உயிரைப் பறிக்கின்ற உயிர்க்கொல்லியான நீட் தேர்வை திரும்ப பெற வலியுறுத்தி புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணிகளின் சார்பில் 20.08.2023 - ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 8.00 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரை புதுக்கோட்டை திலகர் திடலில் உண்ணாவிரத அறப்போர் நடைபெற்றது.

இப்போராட்டத்திற்கு புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன் தலைமை வகித்தார். புதுக்கோட்டை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சு.சண்முகம், தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணிராஜன் ஆகியோர் வரவேற்புரையாற்றினார்கள்.

காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் உண்ணாவிரத அறப்போரை துவக்கி வைத்து கண்டன உரையாற்றினார். புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி கண்டன உரையாற்றி, ஜூஸ் கொடுத்து உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.

மேலும் கழக அயலக அணி மாநிலச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி, மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கே.எஸ்.சஇளையச்சூரியன், தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கலைச்செல்வன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், தெற்கு மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் சுதர்சன், டாக்டர் அமானுல்லா, டாக்டர் சதீஷ், மு.கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன் முத்துச்சாமி, அன்சாரி பாஷித், நா.ஸ்டாலின், விளாப்பட்டி சிவா, தீன், இரா.தமிழ்ராசு, இளையராஜா, முகம்மது ரபிக், அருண்குமார், கவிக்குமார், கே.சதீஷ், கே.தெய்வானை, ஜெ.பிரசன்னா, அண்ணாத்துரை, ராயல் சபா, ராஜா பெரியண்ணன், உதயசூர்யா, டாக்டர் தவ.பா.உதயசூரியன், டாக்டர் கண்ணதாசன், டாக்டர் இளையராஜா, டாக்டர் பிரபாகர தாஸ், டாக்டர் பொன்.சரவணன், டாக்டர் அர்வின் ராஜா, டாக்டர் ஆர்.மனோஜ் குமார், டாக்டர் ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப்பித்தன், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, த.சந்திரசேகரன், அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், சுப.சரவணன், மிசா ராமநாதன், கே.ஆர்.என்.போஸ், கீரை, தமிழ் ராஜா, இரா.ஆனந்த், எஸ்.ஜெயராமன், அரு.வீரமணி, க.மதியழகன், எஸ்.எஸ்.கருப்பையா, ஞான.இளங்கோவன், ஸ்ரீ தேவி அண்ணாத்துரை, எம்.லியாகத் அலி, என், சாத்தையா, எம்.செந்தில்குமார். இராசு.சந்தோஷ், கே.எம்.சுப்பிரமணியன், ஆர்.செல்லத்துரை, ஆர்.வி.செல்வம், ஆ.செந்தில், க.ராஜேந்திரன், கே.எஸ்.சந்திரன், மு.க.ராமகிருஷ்ணன், தவ. பாஞ்சாலன், வெ.முத்துக் கிருஷ்ணன், எம்.பரமசிவம், மா.தமிழ் அய்யா, மு.பி.ம.சத்தியசீலன், ஓ.எஸ்.வெங்கடாச்சலம், அ. இளங்குமரன், கே.பி. அய்யப்பன், சி.சண்முகம், சக்தி ராமசாமி, பொன். கணேசன், வே.பொன்துரை, அ.முத்து, அழகு.சிதம்பரம், எல்.குமார், கே.எஸ்.ரவி, அரு.வடிவேல், அ.அடைக்கலமணி, எஸ்.எம்.சீனியார், வை.கோ.ராஜன், எம்.எம். பாலு, க.நைனா முகம்மது, டாக்டர் செ.குறிஞ்சிவாணன், மாலா ராஜேந்திரதுரை, தி.முத்து, மணிமொழி மனோகரன்,

பாத்திமா பீவி, தேவி, வி.ஜி.ஆர்,மணிவண்ணன், ஹரி விமலாதி, கே.கணபதி, அ.ரெத்தினம், ஏ.கே.செல்வம், செந்தாமரை பாலு, கே.சி.சிவக்குமார், ஆ.பழனிக்குமார், அ.அழகப்பன், வடவாளம் க.செ.மணிமாறன், எஸ்.வி.ஆர்.ராஜா, தட்டாம்பட்டி ஆறுமுகம், வெற்றிச்செல்வன், சிப்காட் சந்திரசேகரன், மு.ராஜதுரை, ஆ.மரிய எட்வின், கி.சுப்பிரமணியன், அரங்கநாயகம், இதயம் அப்துல்லா, செ.ரமேஷ், சுப்பிரமணியன், செங்கோல், எம்.ஜி (எ) ராமச்சந்திரன், மேலவிடுதி ஆறுமுகம், காதர்கனி, கனகம்மன் பாபு, மா.மணிவேலன், பழனிவேலு, டி. அப்புக்காளை. தமிழ் இனியன், முரளி சுப்பையா, திருமயம் ராஜன், ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் செ.கணேஷ், செ.சுதாகர், என்.எம்.அய்யப்பன், கோ.செல்லத்துரை, எஸ்.கலையரசன், ந.அம்பலவாணன், ஆரோக்கியசாமி, சிவக்குமார், பாலசுப்பிரமணியன், ராசி பரூக், கரிகாலன், சத்தியமூர்த்தி, மாரிமுத்து, ஞானவேல், மகேந்திரன், ஹரிகரன், ஆசைத்தம்பி, ஜெரால்டு நிக்கல்சன், இளையராஜா, கார்த்தி, கனகரத்தினம், ஜகுபர் அலி, பிரேம்குமார், புகழேந்தி, புகழ்மணி, உடையாளிப்பட்டி பாலு, அழகர்சாமி, கோகுல், சந்தோஷ்குமார், சிவகுரு உள்ளிட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வட்ட கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகி கள், உள்ளாட்சி பிரதிநிதி கள், நகராட்சி, பேரூராட்சி, ஒன்றியக்குழு தலைவர்கள், துணைத் தலைவர்கள், மாவட்ட, ஒன்றிய கவுன்சிலர்கள், மாணவ, மாணவியர்கள், கழக முன் னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக செயல்வீரர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட 10,000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் ஒன்றிய அரசிற்கு எதிராவும், ஆளுநர் ரவிக்கு எதிராகவும் கோஷங்கள் எழுப்பப்பட்டன. நீட் என்ற வாசகத்தை கருப்பு மையிட்டு அழித்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.8.2023) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையின் சார்பில், காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வை பரப்புவதற்கும், மாவட்டங்களின் பசுமைக் கனவுகளை நிறைவேற்ற உதவிடும் வகையிலும் முதலமைச்சரின் பசுமை புத்தாய்வு திட்டத்தை தொடங்கி வைத்தார். இத்திட்டத்தை செயல்படுத்திட அண்ணா பல்கலைக்கழகத்தின் அறிவாற்றல் ஆய்வு நிறுவனத்தால் தேர்வு செய்யப்பட்ட 40 பசுமை தோழர்கள் முதலமைச்சர் அவர்களை சந்தித்து, வாழ்த்துப் பெற்றனர். இந்த நிகழ்ச்சியில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாஹு, அண்ணா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் ஆர்.வேல்ராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் காலை, சென்னை – அண்ணாநகர் – டி.கே.மகாலில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் தனிப்பணியாளராக இருந்த (நினைவில் வாழும்) கரு. செயல்மணி அவர்களின் பேத்தி டாக்டர் கண்மணி கோவலன் –கே.வருண்குமார் ஆகியோரது திருமணத்தைத் தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தி உரையாற்றினார். சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., திருப்பத்தூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இராம.அருணகிரி, பகுதிச் செயலாளர் ச.பரமசிவம் உள்பட கழக முன்னணியினர் பலரும் மணவிழாவில் கலந்துகொண்டு வாழ்த்தினார்கள்.

# கூட்டுறவுச் சங்கங்களுக்கு விரைவில் தேர்தல்!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் பேட்டி!

சிவகங்கை, ஆக. 23 -

சிவகங்கையில் வேலைவாய்ப்பு முகாமினை துவக்கிட வருகை புரிந்த கூட்டுறவு துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-



தமிழகத்தில் கூட்டுறவு சங்கங்களில் பொறுப்பு வகிந்த நிர்வாகிகள் பதவிக்காலம் ஐந்தாண்டுகளாகும். அவர்களின் பதவி காலம் முடிந்து விட்டது. தற்பொழுது தனி அலுவலர்கள் நியமிக்கப் பட்டு அவர்கள் பொறுப்புஏற்றுள்ளார்கள். விரைவில் கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல் நடைபெறும். தேர்தல் நடத்துவது குறித்து உயர்நீதி மன்றம் சில வழிகாட்டு முறைகளை தெரிவித்துள்ளது.

அதன்படி கூட்டுறவு சங்க தேர்தல் விரைவில் நடைபெறும். நாடாளு மன்ற சட்டமன்றத் தேர்தல் நடத்திட தனியாக தேர்தல் ஆணையம் உள்ளது போல் கூட்டுறவு சங்கங்களுக்கும் தேர்தல் நடத்துவதற்காக தனி தேர்தல் ஆணையம் உள்ளது. அந்த தேர்தல் ஆணையம் தனது பணியினை மேற்கொள்ளும்.

இவ்வாறு அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் கூறினார்.

## கலைஞர் நூற்றாண்டு விழா! முத்தமிழறிஞர்

# கலைஞர் பண்பாட்டு மையம் சார்பில் - காணொலிக் கூட்டம்!

## டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. சிறப்புரை! ஒருங்கிணைப்பு - லண்டன் செந்தில்!

லண்டன், ஆக. 23-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ்ப் பண்பாட்டு மையம் மற்றும் கலைஞர் அயலக உடன் பிறப்புக்கள் குழு நடத்தும் 100 காணொலிக் கூட்டங்களில் தொடர் வரிசையில் வரும் 25-08-2023 - வெள்ளிக்கிழமை மாலை இந்திய நேரம் 7:30 மணியளவில் நடைபெறவுள்ள 25வது காணொலிக் கூட்டத்தில் தி.மு.க அயலக அணித் தலைவரும் வடசென்னை நாடாளு மன்ற உறுப்பினருமான மருத்துவர் கலாநிதி வீராசாமி கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

கலைஞரின் சாதனைகள், சமூக நீதிக்கென அவர் நிகழ்த்திய போராட்டங்கள், அயலகத் தமிழர்களுக்கு கலைஞர் செய்த நன்மைகளை எடுத்துரைக்கிறார்.

உலகெங்கும் வாழும் தமிழர்கள், தி.மு.கவினர் இக்காணொலி கூட்டத்தில் பங்கேற்க உள்ளனர்.

இக்காணொலி கூட்டத்தை முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ்ப் பண்பாட்டு மையத் தலைவர் லண்டன் அ. செந்தில் குமார் ஒருங்கிணைக்கிறார்.



உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சி.பழனி தலைமையில் விக்கிரவாண்டி சூர்யா பொறியியல் கல்லூரி வளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கலைஞர் அவர்களின் 100 முத்தான திட்டங்கள் விளக்கும் வண்ணம் ஒவ்வொரு மரக்கன்றுகளுக்கும் பக்கத்தில் 100 பதாகைகள் வைத்து மரக்கன்றுகளை நட்டு வைத்தார். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., திருமதி விசாலாட்சி பொன்முடி, சட்டமன்ற உறுப்பினர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# திராவிடப் போராளிகள் 31

■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

## ‘சீர்திருத்தச் செல்வி’ விசாலாட்சி அம்மையார்


ஓவியம் : ரவி பேலட்

விசாலாட்சி அம்மையார் பிறந்த ஊர் ஆராவயல், சண்முகநாதபுரம். அவரது தந்தையார் பெயர் சாமிநாதன். அம்மையாருக்கும் காரைக்குடி இராம சுப்பையாவுக்கும் திருமணம் நடந்தது 1928–ஆம் ஆண்டு. அப்போது விசாலாட்சியின் வயது 13.

அவர்களது மூத்தமகன் லெனின், மகள் இந்திராணி இருவரும் இளம்வயதிலேயே இறந்துவிட்டனர். அடுத்துப் பிறந்த பிள்ளைகளான எஸ்.பி.முத்துராமன் (திரைப்பட இயக்குநர்), சுவாமிநாதன், செல்வமணி, சுப.வீரபாண்டியன் (பேராசிரியர் சுபவீ) ஆகியோரை எவ்வித மூடப்பழக்கங்களையும் பின்பற்றாமல் கொள்கை வழிப்பட்ட உறவுகளின் துணையுடன் வளர்த்தார் விசாலாட்சி.

1931–ஆம் ஆண்டில் தந்தை பெரியார் அவர்கள் முன்னறிவிப்பின்றி ஒரு கூட்டத்தில் விசாலாட்சியை மேடையில் பாடும்படி அழைத்தார். மேடையில் ஏறுவதற்கு அஞ்சிய விசாலாட்சிக்கு தைரியம் சொல்லி பேசச் செய்தார். அன்று முதல், பல்வேறு மாநாடுகளில் கொடி ஏற்றி வைத்தும், மாநாட்டைத் திறந்து வைத்தும் உரையாற்றினார் விசாலாட்சி.

ஒரு சிறுமியாக மேடையில் ஏறி “அண்ணன் மார்களே! அக்காமார்களே!” என்று பேசத் தொடங்கிய விசாலாட்சியிடம் வெளிப்பட்ட துணிவும் ஆர்வமும் எவ்வளவு ஆழமான கருத்தையும் எளிதாகப் புரிந்துகொண்டு அதனை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லும் ஆற்றலும் அவரை சுயமரியாதை இயக்க வீராங்கனையாக உருவாக்கின.

### சமதர்ம விலாஸ்

சாதி வழக்கங்களையும், சாஸ்திரங்களையும் எதிர்த்து நின்ற விசாலாட்சி - இராம சுப்பையாவை குடும்பத்துடன் தீர்த்துக்கட்ட முயற்சி நடந்த அதே ஊரில் அந்தத் தனவணிகர் சங்கத்தின் சார்பாக, விசாலாட்சிக்குச் ‘சீர்திருத்தச் செல்வி’ என்று பாராட்டுப் பத்திரம் வழங்கப்பட்டது. அவர்கள் இல்லத்துக்கு ‘சமதர்ம விலாஸ்’என்று பெயர் சூட்டியவர் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர்.

1931–ஆம் ஆண்டு நடைபெற்ற நாகை தாலுகா முதலாவது சுயமரியாதை மாநாட்டின் தலைவர் டபிள்யூ.பி.ஏ. சௌந்திரபாண்டியன் அவர்கள். வரவேற்புத் தலைவர் எம்.கே.குப்புசாமி அவர்கள். அந்த மாநாட்டின் திறப்புரையை ஆற்றியவர் காரைக்குடி ‘சுப.விசாலாட்சியம்மாள்’ என்று அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. அது மட்டுமா? ‘விசாலாட்சி அம்மையார் நிகழ்த்திய சொற்பெருக்கு’ என்று தலைப்பிட்டு ‘குடிஅரசு’ இதழில் மூன்று பக்கங்களுக்கு அவரது பேச்சு அச்சிடப்பட்டது. இப்படிப்பட்ட வாய்ப்பை பெண்களுக்கு, குறிப்பாகச் சென்ற நூற்றாண்டில் திராவிட இயக்கம் தவிர, வேறு எந்த இயக்கமும் வழங்கவில்லை. அப்படிக் கிடைத்த அந்த வாய்ப்பை திராவிட இயக்கப் பெண்கள் எப்படிப் பயன்படுத்தினார்கள் என்பதற்கு, விசாலாட்சி அம்மையாரின் இந்த உரையே சான்று.

### பெண்ணுரிமைக்கு அதிரடி பேச்சு

குறிப்பாக தேசியம் பற்றி விசாலாட்சி அம்மையாரின், கருத்து, இன்றைக்கும் பொருந்துவதாக இருப்பது வியப்பை ஏற்படுத்துகிறது. “சுயமரியாதை இயக்கம் தேசியத்திற்கு எதிராக இருப்பதாகவும், மக்களின் ஜீவிதத்திற்காகக் கண்டுபிடித்திருக்கும் கதர் என்னும் கைத்தொழிலுக்கு விரோதமாக இருப்பதாகவும், இந்தியத் தாய் பாஷையாகிய ஹிந்திக்கு விரோதமாக இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

இதை நாம் மறைக்க ஆசைப்படவில்லை. பழமையையே காப்பாற்றும் எந்தத் தேசியத்திற்கும், மிருகப் பிராயத்திற்கு அழைத்துக்கொண்டு போகச்செய்யும் வருணாசிரமத்தைப் போதிக்கும் ஹிந்தி தாய் பாஷையாக இருந்தாலும், தகப்பன் பாஷையாக இருந்தாலும், அப்பாஷைக்கும் நாங்கள் விரோதிகள்தான்!! எதிரிகள்தான்!!” என்றார்.

ஆண்களிடம் பெண்கள் அடையும் கொடுமை பற்றி எடுத்துச்சொல்வதில் அம்மையாரின் பேச்சுமுறையே அதிரடிதான்.

“ஆண்களாகிய உங்களை ஒரு பெண்ணானவள் தன் சௌகரியத்திற்கே கலியாணம் செய்து கொள்வதாய் கருதி அதன் அறிகுறியாய் உங்கள் கழுத்தில் ஒரு கயிற்றைக் (தாலி) கட்டி தன் வீட்டிற்கு அழைத்துப்போய்,

அங்குத் தன்னுடைய தாய் தகப்பன்மாருக்கும் சகோதரர்களுக்கும் நல்ல பிள்ளையாய் நடந்து கொள்ளச் செய்து, ..... மற்றும் உங்களைப்போல் இரண்டு மூன்று ஆண்களையும் தாலி கட்டி இழுத்துக்கொண்டு வந்து, அதே வீட்டில் வைத்து, “நீங்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருக்கவேண்டும்: உங்களுக்குள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டால் அடிப்பேன் உதைப்பேன் என்று சொல்லி.....மற்றும் உங்களுக்குக் கல்வி கொடுக்காமலும், கொடுத்தால் உங்கள் கள்ள ஸ்திரீகளுக்குக் கடிதம் எழுதுவீர்கள் என்றும், சொத்து கொடுக்காமலும், கொடுத்தால் நீங்கள் பெண்களுக்கு அடங்கி நடக்கமாட்டீர்கள் என்றும்,...... தினமும் அடித்துக் கொடுமைப் படுத்தினால்... உங்கள் நிலையைப்பற்றி நீங்கள் என்ன நினைப்பீர்கள்?"

இந்தக் கேள்விகள் ஆண்கள் மனதை சிந்திக்கச் செய்து காரைக் குடிப் பகுதிகளில் பல குடும்பங்களை, திராவிட இயக்கத்தின் பக்கம் ஈர்த்தன.

> **ஆண்களிடம் பெண்கள் அடையும் கொடுமை பற்றி எடுத்துச்சொல்வதில் அம்மையாரின் பேச்சுமுறையே அதிரடிதான்.**

### கல்லக்குடிப் போராட்டக் குடும்பம்

பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய பிறகு, விசாலாட்சி அம்மையார் தி.மு.க. நடத்திய நிகழ்ச்சிகளில் பங்கேற்றிருக்கிறார். 1953–ஆம் ஆண்டு கல்லக்குடிப் போராட்டத்தில் கைது செய்யப்பட்ட இராம சுப்பையா அவர்கள் எந்தச் சிறையில் இருந்தார் என்றே தெரியாமல், அலைந்த போதும், திருச்சி சிறையில் மூன்று மாதம் சிறைத்தண்டனை பெற்று கலைஞருடன் சிறையில் இருக்கிறார் என்று தெரிந்து அங்கு சென்று அவரைப் பார்த்தபோதும் குடும்பத்தைப் பற்றியோ, பிள்ளைகளின் தேவைகளைப் பற்றியோ முறையிடவில்லை விசாலாட்சி. அவர் கணவர் இராம சுப்பையாவோ மனைவியை, பிள்ளைகளைத் தவிக்கவிட்டு சிறைக்குப் போக அஞ்சவில்லை, கலங்கவில்லை.

ஆனால், தான் விடுதலையான போது சிறையில் கலைஞர் அவர்களையும் மற்ற தோழர்களையும் விட்டுவிட்டுச் செல்வதற்காக அழுதிருக்கிறார். இத்தகைய கொள்கையாளரின் மனைவியாக தன் குடும்பத்தை நிலைநிறுத்த, விசாலாட்சி அம்மையார் எதிர்கொண்ட துயரங்களும் திராவிட இயக்க வரலாற்றின் பகுதிதான்.

விசாலாட்சி அம்மையாரின் கொள்கைத் துணிவு வியப்பூட்டுவதாகும். கைத்தறி நெசவாளர்கள் வறுமையில் தள்ளப்பட்ட காலத்தில் அவர்களுக்கு உதவுவதற்காக மேடையில் தி.மு.க. தலைவர்கள் கைத்தறித் துணிகளை விற்பனை செய்யும் ஒரு நிகழ்வை அறிமுகப்படுத்தினார் பேரறிஞர் அண்ணா. அதன்படி காரைக்குடியில் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் மேடையில் கைத்தறித் துணியை விற்பனை செய்தார். அன்று மூத்த மகன் முத்துராமனுக்குக் கடும் காய்ச்சல். ஆனாலும், நானும் நிகழ்ச்சிக்கு வருவேன் என்று காய்ச்சலில் கிடக்கும் பிள்ளையைத் தோள் மீது போட்டுக்கொண்டு மேடையில் ஏறி கைத்தறி ஆடையை வாங்கினார்.

### நெருக்கடி நிலை

ஒருமுறை எதிர்ப்புகளுக்கிடையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டம் நடந்தது. பெரும் கலவரம். விசாலாட்சி அம்மையாரும் தாக்கப்பட்டார். ஆனாலும், அவரது கொள்கை உறுதி குலையவில்லை. 1976–ஆம் ஆண்டு தொடங்கிய அவசர நிலை அடக்குமுறை காலத்திலும் துன்பங்கள், அவர் வாழ்வின் திசையை மாற்றவில்லை.

தந்தை பெரியார் தலைமையில் தொடங்கி, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமைவரையிலும் தடம் மாறாத விசாலாட்சி அம்மையாரின் வாழ்வு 1987–ஆம் ஆண்டு நிறைவுற்றது. எழுதப்படாத பல பெண் போராளிகளின் வரலாற்றைத் தனக்குள் அடக்கிய விசாலாட்சி அம்மையாரின் கொள்கைப் பயணம் அவரது மகனான பேராசிரியர் சுபவீ வழியே தொடர்கிறது. (வருவார்கள்...)

## திருச்சி வளநாடு கோயில் நல்லிணக்கத்தின் காட்சி!



‘இந்து-இந்தி-இந்தியா’ என சனாதனக் கோட்பாட்டை நிலைநிறுத்த முயன்று வருகின்ற, இந்தியாவைப் பீடித்துள்ள வகுப்புவாத சக்திகள், அனைத்து மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைப்பதன் மூலம், அவர்களது நோக்கத்தைச் செயல்படுத்த முடியும் என நம்புகின்றனர். வடமாநிலங்களில் அதைச் செயல்படுத்தியும் பார்த்துவிட்டனர். ஆனால், திராவிட மக்களின் தமிழ்நாட்டில் வகுப்புவாதிகளின் பிரிவினை எக்காலத்திலும் எடுபடாது. அதற்கு ஓர் உதாரணமாக, திருச்சி அருகே வளநாட்டில் நடைபெற்ற கோயில் திருவிழாவுக்கு, அந்த ஊரைச் சேர்ந்த இஸ்லாமிய மக்கள் பூ, பழங்கள் என சீர்வரிசைப் பொருட்களைக் கொண்டு வந்து அளித்ததை, சமூக நல்லிணக்கத்தின் உச்சமாகப் பார்க்கலாம்.

‘வேற்றுமையில் ஒற்றுமை காணும் நாடு இந்தியா’ என்பதை நமது முன்னோடிகள் வரையறுத்தனர். ஆனால், ஒற்றை அடையாளத்தை முன்னிறுத்தும் வகுப்புவாதிகள் அந்த ஒற்றுமையைச் சீர்குலைக்கத் துடிக்கின்றனர். அந்த ஒற்றுமையைத் தக்க வைக்கும் மாநிலம் என்பதை தமிழ்நாடு, எப்போதும் உணர வைத்துக்கொண்டே இருக்கிறது. அந்த நல்லிணக்கத்தின் காட்சி நாடு முழுவதும் பரவ வேண்டும்.

## :ப்ளாஷ்பேக்



### பழனியில் பெயர்சூட்டல்!

1996 நவம்பர் 23 அன்று, பழனியில் பெரியார் சிலை திறப்பு நிகழ்ச்சி ஆசிரியர் அய்யா தலைமையில் நடைபெற்றது. திராவிடர் கழகத் தோழர்களின் முயற்சியால் அந்தச் சிலை நிறுவப்பட்டது. திராவிடர் கழகத்தைச் சேர்ந்த என் தந்தை இரா.சேது, 4 மாத குழந்தையான என்னை ஆசிரியரிடம் தூக்கிச் சென்று பெயர் வைக்குமாறு கேட்டுக் கொண்டார். கருவில் இருக்கும்போதே பெண் குழந்தை என்றால் ‘மதிவதனி’ என்றும் ஆண் குழந்தை என்றால் ‘பிரபாகரன்’ என்றும் பெயர் வைக்க முடிவு செய்யப்பட்ட காரணத்தால் ஆசிரியரிடத்தில் ஒரு துண்டு சீட்டில் ‘மதிவதனி’ என்ற பெயர் எழுதிக் கொடுக்கப்பட்டது. ஆசிரியர் என்னை தன் கையால் தூக்கி எனக்குப் பெயர் வைத்தார். பழனியில் முதல் பெரியார் சிலை அமைக்கப்பட்ட அதே தினத்தில் எனக்குப் பெயர் வைக்கப்பட்டது இன்றைக்கு நினைத்தாலும் புத்துணர்வூட்டும் ஒன்றாக இருக்கிறது.


மதிவதனி

**–சே.மெ.மதிவதனி, துணை பொதுச் செயலாளர், திராவிடர் கழகம்**


இது போன்ற அரிய புகைப் படங்களை சிறுகுறிப்புடன் எங்க ளுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை–600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### வரலாற்றுத் தீர்மானம்!

**1929 -ஆம் ஆண்டு செங்கல்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில்தான் தந்தை பெரியார் பெண்ணுரிமைக்கான தீர்மானத்தை நிறைவேற்றினார். அந்தத் தீர்மானத்தை அறுபது ஆண்டுகளுக்குப் பின்னர் 1989–ஆம் ஆண்டில், பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை எனச் செயல்பாட்டுக்குக் கொண்டுவந்தார் கலைஞர். இதுபோன்ற வரலாற்றுச் சிறப்பு மிக்கத் தீர்மானத்தைச் சட்டமாக்குவதற்கான வாய்ப்பு கிடைத்ததை எண்ணி, மகிழ்ச்சி அடைவதாகக் கூறினார் கலைஞர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 218




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

–வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131